# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 111 | பங்குனி 03ஆம் நாள் | சனிக்கிழமை | 17 மார்ச் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## அரசிதழ் நேற்று வெளியீடு

கொழும்பு, மார்ச் 17
உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய அரசிதழ் நேற்று வெளியிடப்பட்டுள்ளதாக, அரச அச்சகத் திணைக்களம் அறிவித்துள்ளது.
கடந்த மாதம் 10ஆம் திகதி நடந்த உள்ளூ >> 06

**குற்றப்புலனாய்வு பிரிவில் முற்படவேண்டும் குருகே!**

*உத்தரவிட்டது கோட்டை நீதிமன்றம்*

(விரிவு 13 ஆம் பக்கம்)

# கிளிநொச்சியில் அதிகாலை 3 இந்து ஆலயங்கள் உடைப்பு

கிளிநொச்சி, மார்ச், 17
இந்து ஆலயங்கள் தாக்கப்படுவது கிளிநொச்சி மாவட்டத்துக்கும் விரிவாகி இருக்கிறது. நேற்று அதிகாலை கிளிநொச்சியிலுள்ள மூன்று ஆலயங்கள் உடைக்கப்பட்டு மூல விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன. >> 23



### கொழும்பை வழிக்குக் கொண்டு வரும்

# மாற்று வழிகளுக்கு அமெ. தலைமை தாங்கவேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்தும்

யாழ்ப்பாணம், மார்ச் 17
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்தத் தவறி வரும் நிலையில், அதனைச் செய்விப்பதற்கான மாற்று வழிகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது. >> 23

### 10 ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருந்த

## அரசியல் கைதி வாழ்வு சிறையிலேயே முடிவு

யாழ்ப்பாணம், மார்ச், 17
கடந்த 10 வருடங்களாக அரசியல் கைதியாக இருந்த முதியவர் ஒருவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.
வவுனியாவைச் சேர்ந்த சண்முகநாதன் தேவகன் >> 23

## கொழும்பின் கோரிக்கையை ஐ.நா. ஆணையர் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 17
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனுடன் பேச்சு நடத்துவதற்காக நேரம் ஒதுக்கித் தருமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை ஐ.நா. மனித உரிமைகள் சபை நிராகரித்திருப்பதாக உயர்மட்ட இராஜ >> 23

## அமிர்தலிங்கத்தின் சிலை நாளை திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17
முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் புதிய உருவச் சிலை நாளை ஞாயிற்றுக்கிழமை வலி. >> 06

## வன்முறையைக் கண்டித்து முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 17
முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டித்து கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முஸ்லிம்கள் உரிமைகளுக்கான அமைப்பு அதை ஏற்பாடு செய்திருந்தது. பம்பலப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலின் ஜும்ஆ தொழுகையையடுத்து அமைதி ஊர்வ >> 06

## ராமர் பாலத்தை அகற்றாமல் சேது சமுத்திரத் திட்டம்

### இந்திய நடுவண் அரசு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
ராமர் பாலத்தை அகற்றாமல் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் இந்திய நடுவண் அரசு பதில் அளித்துள்ளது.
ராமர் பாலத்தின் >> 23

## தமிழன் குண்டுகள் நேற்று மீட்டு அழிப்பு

### முல்லைத்தீவு காட்டில் சம்பவம்

முல்லைத்தீவு, மார்ச், 17
தமிழீழ விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டு போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் 'தமிழன்' கைக்குண்டுகள் 10 நேற்று மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படை தெரிவித்தது. >> 06

## ஐ.நா. ஊழியர் போராட்டத்தால் நேற்றுத் தப்பித்தது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 17
ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37 ஆவது கூட்டத் தொடரில், நேற்று நடைபெறவிருந்த இலங்கை தொடர் >> 06

## கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு திங்களன்று நடக்கலாம்

கொழும்பு, மார்ச் 17
உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறலாமென்றுதெரிய >> 23



## வவுனியாவில் நேற்றுக் கனமழை

வவுனியா, மார்ச், 17
வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று மாலை முதல் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்தது. குருமன்காடுப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றின் மீது மின்னல் தாக்கியதில் சபையின் மின் தொகுதி தீப்பிடித்து எரிந்துள்ளது.
வவுனியாவில் கடந்த இரண்டு நாள்களாகக் காலையில் கடும் வெப்ப நிலை காணப்பட்டு மாலையில் சிறியளவான மழை பெய்தது. அது போன்றே நேற்றும் காலையில் வெப்பம் அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் மாலை இடி, மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்தது. >> 06

## கிணற்றில் தவறி வீழ்ந்து பாலகர்கள் இருவர் சாவு

### விளையாடிக்கொண்டிருந்தபோது பரிதாபம்

மன்னார், மார்ச், 17
அண்ணன் தம்பிகளான பாலகர்கள் இருவரின் சடலங்கள் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டன. விளையாடிக் கொண்டிருக்கும் போது இரு >> 06



# ஆட்சிக் கவிழ்ப்பை நெருங்கிவிட்டோம்

### புன்முறுவலுடன் கூறுகிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 17
ஆட்சிக் கவிழ்ப்பை நெருங்கிவிட்டோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் 42 உறுப்பினர்கள் வரையில் ஆதரவு தெரிவிப்பார்கள். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் >> 23



## பெற்றோர் கைவிட்டுச் சென்றதால் தனிமையில் தவித்த குழந்தைகள்

நுவரெலியா, மார்ச் 17
பெற்றோரால் கைவிடப்பட்டு 5 நாள்கள் தனிமையில் இருந்த இரு குழந்தைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. ஒன்றரை வயதுக் குழந்தையும், 4 >> 06



# நில அளவையாளர் சங்கம் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## அளவீட்டு நடவடிக்கைகள் அமெரிக்க நிறுவனத்திடம் வழங்க எதிர்ப்பு

கொழும்பு,மார்ச்.17

**அரச நில அளவையாளர் சங்கம் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நேற்று முன்னெடுத்தது.**

நாட்டின் காணி அளவீட்டு நடவடிக்கைகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராகவே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசு தங்களது பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அந்தச் சங்கத்தின் தலைவர் துமிந்த உடுகொட, வலியுறுத்தியுள்ளார்.

தீர்வு தராவிடில், போராட்டம் தொடரும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

திணைக்களத்தை வெளிநாட்டுக்கு வழங்குவதன் மூலம் பெரியளவான நிதி மோசடி இடம்பெறும் அச்சுறுத்தல் நிலவுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் காரணமாக காலி வீதி, கொள்ளுப்பிட்டிச் சந்தி முதல் புறக்கோட்டை வரை வீதி சிறிது நேரம் மூடப்பட்டிருந்தது. இதனால் கொழும்பை சுற்றியுள்ள பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. (ற.ரி2)

## கேரளக் கஞ்சா மீட்பு: சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு, மார்ச்.17

சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகை கேரளக் கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே 2.1 கிலோகிராம் எடையுடைய கேரளக் கஞ்சா, மீட்கப்பட்டதாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

அந்த வீட்டு உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

கேரளக் கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுனவுக்கு கிடைத்த இரகசியத் தகவலைடுத்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட கஞ்சா இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியுடையது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கஞ்சா விற்பனையுடன் தொடர்புடைய இன்னும் பலர் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற.ரி2)

## சைட்டத்தை அரசுக்கு மாற்றியபோது மோசடி

### மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் முறைப்பாடு

கொழும்பு,மார்ச் 17

அரச மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் எழுத்து மூல முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்தது. இந்த முறைப்பாடு நேற்றுப் பதிவுசெய்யப்பட்டது.

மாலபே நெவில் பெர்னான்டோ மருத்துவமனையை அரசுக்கு மாற்றும் போது மோசடிகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தியே இந்த எழுத்து மூல முறைப்பாடு கையளிக்கப்பட்டது. இந்த மருத்துவமனை அரச மயமாக்கும் செயற்பாடு போலியான முறையில் இடம்பெற்றுள்ளதாகவும்,

அதற்கு சுகாதார அமைச்சர் மற்றும் அதன் செயலாளர் ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற.ரி4)

## ஊழலுக்கு எதிராகச் செயற்பட அரசுக்கு ஒத்துழைப்புத் தேவை

### பிரதியமைச்சர் கருணாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

ஊழலுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி எதிர்ப்பு வெளியிடுகின்றது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு பொதுமக்களின் நிதியைத் தவறாகக் கையாண்டு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டது என்று கூட்டரசு தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டிவருகின்றது.

குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தலைமையிலான அரசு தவறி வருகின்றது என்று பொதுமக்களும் அரசாங்கத்தை ஆட்சிபீடமேற்ற உழைத்த தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

ஊழல் மற்றும் மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருந்தார்.

அது இன்னமும் அமைக்கப்படாத நிலையில் அதற்கான சட்டத் திருத்தங்களை நாடாளுமன்றில் முன்வைக்கும்போது தடுத்து நிறுத்து வதற்கு கூட்டு எதிர்கட்சி முயற்சிக்கின்றது.

முன்மொழியப்பட்டுள்ள உயர் நீதிமன்றமானது ஊழலுடன் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கும்.

உயர் நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பில் சர்வஜென வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என சிலர் கோருகின்றனர். அவர்களே திருடர்களை கைதுசெய்ய வேண்டாம், அவர்களை தண்டிக்க வேண்டாம் எனவும் கோருகின்றனர். ஊழல்வாதிகள் சட்டத்தின் ஊடாக தண்டிக்கப்பட வேண்டும். என்றார். (ற)



## 1,050 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது

புத்தளம்,மார்ச்.17

பல்லம கம்மந்துவ பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கொண்டு சென்றவர் கைது செய்யப்பட்டார்.

25 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது, ஆயிரத்து 50 லீட்டர் பெற்றோலை பாரவூர்தியில் கொண்டு சென்றபோதே இவர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

## மனிதாபிமானப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### கனேடியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்.17

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் இயக்கச் செயற்பாடுகளுக்கும் மனிதாபிமான பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக கனடா நாட்டின் தூதுவர் டேவிட் மெக்கினோல் தெரிவித்தார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமையகத்தில் அமைப்பின் தேசியத் தலைவர் எம். என். எம். நபீல் தலைமையில் சிறப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது வை. எம். எம். ஏ. இயக்கம் கல்வி மேம்பாட்டுக்காக நீண்ட காலமாக ஆற்றி வரும் பங்களிப்பை பற்றி எடுத்துக் காட்டியதோடு இந்த நாட்டில் சமாதானம் மற்றும்

சகவாழ்வை நோக்காகக் கொண்டு சமூகங்களுக்கிடையே ஆற்றுகின்ற பணிகள் பற்றியும் அவரிடம் விவரித்துக் கூறப்பட்டது.

இதில் போசகர் ஹலீம்ரூபவ் ஏ. அஸீஸ் பொதுச் செயலாளர் சஹீத் எம். ரிஸ்மி உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (ற.ரி2)

## உதயங்க வீரதுங்கமீது மீண்டும் பிடியாணை

கொழும்பு, மார்ச் 17

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதிவானால் நேற்று உத்தரவிடப்பட்டது. அவர் நேற்றும் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை அதனால் நீதிமன்று அவருக்கு மீண்டும் பிடியாணை பிறப்பித்தது.

இந்த வழக்கில் அவர் நீதிமன்றில் முன்னிலையாகாது இருந்ததால் முன்னரும் திறந்த பிடியாணை நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானம் கொள்வனவு செய்தபோது இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெற அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

அதற்கமைய பன்னாட்டு பொலிஸார் ஆரம்பத்தில் நீல அறிவிப்பொன்றை மேற்கொண்டு பின்னர் சிவப்பு அறிவிப்பு பிறப்பித்திருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதியன்று டுபாய் பன்னாட்டு விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த உதயங்கவின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன விமான நிலைய அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அந்த முகவரியில் அவர் இல்லை என்றும், தொலைபேசி இலக்கம் இயங்கவில்லை என்றும் தெரிய வந்தது என அறிவித்த நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவரை சந்தேகநபராகப் பெயரிட்டு, பிடியாணை பிறப்பிக்குமாறும் கோரியதையடுத்தே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, உதயங்கவினுடையது என்று நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கண்டறியப்பட்டுள்ள காணிகளை விற்பதையோ அல்லது கைமாற்றம் செய்வதையோ தடுக்குமாறு கொழும்பு மற்றும் அத்தனகலை காணிப் பதிவாளர்களை கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி பணித்திருந்தார்.

2006ஆம் ஆண்டு உக்ரேன் நாட்டு தயாரிப்பான மிக் 27 ரக போர் விமானங்கள் நான்கு கொள்வனவு செய்யப்பட்டபோது அரச நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் உதயங்கவுக்கு எதிராக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் உதயங்கவினால் 94 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகள் வாங்கப்பட்டுள்ளமை நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் அப்பிரிவினரால் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கையில் 40 மில்லியன் ரூபா பெறுமதியான 8 ஏக்கர் பரப்புடைய காணியும், 25 மில்லியன் ரூபா பெறுமதியான காணியும் தொம்பே பிரதேசத்தில் வாங்கப்பட்டுள்ளது என்றும், கொழும்பு, பொரளையிலுள்ள ட்ரில்லியம் ரெசிடென்ஸில் 29 மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு குடியிருப்பும் வாங்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. (ற-ரி5)

# பௌத்தர்கள் ஏனையோருக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும்

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 17**

**இலங்கை வாழ் பௌத்தர்கள் மற்ற மதத்தவர்களை மதித்து, அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். அவ்வாறு நடக்கவில்லையெனில் கடந்த கால அசம்பாவிதங்கள் மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் கேகாலையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

கிராமிய மட்டங்களில் பரந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் பண்டிகைக் காலத்தைத் தொடர்ந்து கிராமிய மக்களின் அபிவிருத்திக்காக இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் இலங்கையை விட ஆகக் குறைந்த அபிவிருத்தி மட்டத்தில் இருந்த சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகள் இலங்கையைத் தாண்டிச் சென்றுள்ளன. கடந்த 40 வருடங்களை கருத்திற் கொண்டால் 30 வருட காலப் போரையும் சமாளித்துக் கொண்டு இலங்கை ஓரளவு அபிவிருத்தி கண்டுள்ளது.

கிராமப்புற மக்கள் மத்தியில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு பரந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். என்றார். (ற)





காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. அதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் அருள்பெற்றனர். (ற - ரி5,111)

## யானைத் தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாந்தோட்டை, மார்ச்.17

சூரியவெவ, சுருவிருகம பிரதேசத்திற்குள் புகுந்த காட்டு யானையின் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்துள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு ஆளான நபர் அம்பாந்தோட்டை மருத்துவமனையிலிருந்து கராப்பிடிய மருத்துவமனைக்கு மாற்றும் போது உயிரிழந்துள்ளார். என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் இரண்டு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், பாரவூர்தி ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அடிக்கடி காட்டு யானை புகுந்து அடாவடி புரிவதாக வும், மக்கள் மிகுந்த சிரமத்துடன் வசிப்பதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச வனஜீவராசிகள் அலுவலகத்துக்கு இது தொடர்பில் அறியப்படுத்திய போதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர். (ற.ரி2)

## வன்முறையால் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு

கண்டி, மார்ச் 17

கண்டியில் இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான மோதலில் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. கண்டி மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய மதவழிபாட்டுத் தலங்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் அண்மையில் நிலவிய பதற்றம் தணிந்து தற்போது நிலைமை சுமுகமடைந்துள்ள போதிலும் பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இன்னும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

அத்துடன் கண்டியில் இடம்பெற்ற இனங்களுக்கு இடையிலான மோதல் தொடர்பான விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற.ரி4)

## 214 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள்

வவுனியா, மார்ச் 17



வவுனியா, விவசாய உற்பத்திப் பண்ணையில் தெரிவு செய்யப்பட்ட 214 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. 13.5 மில்லியன் ரூபா நிதிச் செலவில் இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன என்று தெ ரிவிக்கப்பட்டது.

வவுனியா விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியாவின் 4 பிரதேச செயலகங்களிலும் பெண் தலைமைத்துவக் குடும்பம், போரால் பாதிக்கப்பட்டவர்கள், பெற்றோரை இழந்த குடும்பம் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன. மோட்டார் பைப், தூவல் நீர்ப்பாசனத் தொகுதி, துளிர் நீர்ப்பாசனத் தொகுதி, மண்ணெண்ணெயில் இயங்கும் மோட்டார் போன்ற பல பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

## பெரும்பான்மை இனத்தவரே இனியும் மன்னாருக்கு மாவட்டச் செயலர்!

மன்னார், மார்ச் 17

மன்னார் மாவட்டச் செயலராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே மீண்டும் நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அவரது பதவி கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவை அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டச் செயலராகக் கடமையாற்றியவர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அதையடுத்து மாவட்ட செயலராகப் பதவியேற்க 5க்கும் மேற்பட்ட தமிழ் அதிகாரிகள் முயன்றபோதும் அதற்குச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

பதுளை மாவட்டத்தில் கடமையாற்றும் பண்டார என்பவரது பெயரே தற்போது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. அரசியல் தலையீடு காரணமாகவே தமிழ் அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ற-105)

## மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம்

மூதூர், மார்ச் 17

மூதூர் பிரதேசத்தின் இந்த வருடத்துக்கான முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று மூதூர் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் அபிவிருத்திகள் தொடர்பிலும் நிதி ஒதுக்கீடுகள் எதிர்கால அபிவிருத்தி திட்டம் தொடர்பிலும் பேசப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான அப்துல்லா மஹ்ரூப், நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் மற்றும் முப்படை உயரதிகாரிகள் திணைக்கள அதிகாரிகள் எனபலரும் கலந்து கொண்டனர். (ற.ரி4.40)

## பல்கலைக்கழக தொழிற்சங்கம் தொடர்ந்தும் போராட்டம்

கொழும்பு, மார்ச்.17

வேதனக் கொடுப்பனவு உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து, பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றிணைந்த குழு முன்னெடுத்துள்ள போராட்டம் தொடர்ந்து நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

தங்களது பிரச்சினைகள் தொடர்பில் நிதியமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தெளிவான தீர்வு கிடைக்கவில்லை என அந்தக் குழுவின் இணைத்தலைவர் எட்வட் மல்வத்தகே தெரிவித்தார்.

அதன்படி பணிப்புறக்கணிப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல, பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றிணைந்த குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இப் போராட்டம் தொடர்ந்தும் 17 நாள்களாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. (ற.ரி2)



## இரு ஆசிரியர்கள் நியமனம்

ஊறணி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வூர் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்
மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியான வலி வடக்கு ஊறணியில் உள்ள மேற்படி பாடசாலையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினால் அவ்வூர் மக்கள் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதைத் தொடர்ந்து குறித்த கல்விப் பணிப்பாளர் அக்கறை எடுத்து இப்பாடசாலைக்கு கடந்த வாரம் இரண்டு ஆசிரியர்களை நிய மித்து ள்ளார்.

# கட்டாக்காலிகளால் அராலியில் விவசாயத்தைக் கைவிடும் நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 17

**வலி.மேற்கு கமநலபிரிவிற்கு உட்பட்ட அராலி பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளால் விவசாய உற்பத்தியை முழுமையாக கைவிடும்அளவுக்கு விவசாயிகள் சலிப்படைந்துள்ளனர்.**

அண்மைக் காலமாக பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் கட்டாக்காலி மாடுகள் இரவு பகலாக சிறுதானியங்கள் மற்றும் வெங்காயச் செய்கைகளை முற்றாக அழித்து வருகிறன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜெ-162 அராலி தெற்கு.ஜெ-163 அராலி கிழக்கு விவசாயிகள் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு முறையிட கையெழுத்து வேட்டைகளில் ஈடுபட்டுள்ளனர். "நிவாரணங்கள் வேண்டாம்- எமது விவசாய உற்பத்திகளின் ஊடான அறுவடைக்கு உதவுங்கள்" என்ற தலைப்பிலான கடிதத்திலேயே விவசாயிகளின் கையொப்பங்களைப் பெற்றுவருகின்றனர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது: கால்நடைகளைக் கட்டுப்படுத்தி எமதுஅராலி விவசாய உற்பத்திகளைப் பாதுகாக்குமாறு கோரிவந்தோம் எனினும் இதுவரை சம்பந்தப்பட்டோர் கால்நடைகளைக் கட்டுப்படுத்தவேயில்லை.

எள்ளு, பயறு, உழுந்து மற்றும் வெங்காயம், புடோல், பயிற்றம் போன்ற எந்த விவசாய உற்பத்திகளையும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு 100 முதல் 150 வரையிலான கட்டாக்காலி மாடுகள் இரவு பகலாக பயிர்களை அழித்து வருகின்றன. உடன் எமது உற்பத்திகளைப் பாதுகாக்கவும், அறுவடை செய்யவும் மாவட்டச் செயலர் எமக்கு உதவ வேண்டும். விவசாயிகளின் உற்பத்திக்கு ஊக்குவித்தால் அரசின் உதவிகளையோ, நிவாரணங்களையோ நாம் நாடவேண்டிய அவசியமில்லை. கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறான சிறுதானிய அழிவுகளையும், விவசாய அழிவுகளையும் சந்தித்துள்ளோம். இனியும் அராலி விவசாயிகளான எம்மால் பொறுக்க முடியாதுள்ளது. சட்டத்தின் முன் நடவடிக்கை எடுத்து எமது வாழ்வாதார உற்பத்திகளைப் பாதுகாத்துத் தருமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றனர் (21-50)

## குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்.16
சிவா விளையாட்டு கழகத்தின் வருடாந்த குருதி க்கொடை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு விளையாட்டுக்கழக வளாகத்தில் ( சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளதாக விளை யாட்டுக் கழக செயலாளர் வி. ஜெயபிரசாந் தெரிவித்துள்ளார்.

********

யாழ்ப்பாணம், மார்ச்.17
கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இரத்தான முகாம் தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வின் போது மரணத்திற்குப் பின்னரான கண் தானத்திற்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என கருகம்பனை இந்து இளைஞர் கழகம் தெரிவித்துள்ளது.

# முட்டிக்கத்தரிக்காய் நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 17
ஆசி கந்தராஜாவின் " செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக்கத்தரிக்காய்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.




நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் நா.சன்முகலிங்கன் நிகழ்த்தவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணம்பல்கலைக்கழக தாவரவியற்துறைத் தலைவர் பேராசிரியர் ப.செவ்வேள் பெற்றுக்கொள்ளவுள்ளார்.
ஆய்வுரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், சாந்திகப் பணிப்பாளார் கோகிலா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வித்தியாலயத்தின் தண்ணீர் தாங்கி கட்டடத்துக்கான அடிகல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.ஜேர்மனில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவரான துரைராசாவின் நிதியூடாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

## கழிவுகள்மூலம் சேதனப் பசளை தயாரிக்கும் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்17
நீர்வேலி தரவைப் பகுதியில் உள்ள திண்மக் கழிவுகள் சேகரிக்கும் நிலையத்தில் தரம்பிரிக்கப்படும் கழிவுகள்மூலம் சேதனப் பசளை தயாரிக்கும் திட்டத்தை ஆரம்பிக்க வலி.கிழக்கு பிரதேசசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் அனைத்தும் இந்த கழிவுகள் சேகரிக்கும் நிலையத்தில் கொட்டப்பட்டு
உக்கும் உக்காத பொருள்கள் என்ற அடிப்படையில் தரம்பிரிக்கப்பட்டும் வருகின்றன.
இதில் உக்கும் கழிவுகள் மூலம் சேதன பசளையை தயாரிக்கும் சபை ஒன்று நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் பசளை தயாரிப்பதற்கு உரிய இயந்திர சாதனங்களை பெற்றுக்கொள்ளவும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. (17)

## போரில் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தப்பட்டது

*அரச மருந்தாளர் ஜெனிவாவில் தெரிவித்தார்*

யாழ்ப்பாணம் மார்ச் 17
போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றதை நான் கண்டிருக்கின்றேன். கிளிநொச்சி வைத்தியசாலையில் நான் அரச மருந்ததாளராக பணியாற்றியபோது ஷெல் தாக்குதல் இடம்பெற்றதைக் காணமுடிந்தது. மருத்துவமனை மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றன. மக்கள் கால்கள், கைகள், கண்கள் இன்றி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். என போரின்போது கிளிநொச்சி மருந்துவமனையில் அரச மருந்தாளராக கடமையாற்றிய கமலாம்பிகை கந்தசாமி என்ற பெண் நேற்று ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நடைபெற்ற உபகுழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மல்லாவி வைத்தியசாலையில் 1996 ஆம் ஆண்டு முதல் அரச மருந்தாளராகப் பணியாற்றினேன். காயமடைந்தவர்களும் வல்லுறவுக்குட்பட்ட பெண்களும் அங்கு சிகிச்சைக்காக வருகை தந்தனர். எனக்குத் தெரிந்து பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எமக்குத் தேவையான முழுமையான மருந்துகளையும் அரசு அனுப்பவில்லை. மல்லாவி வைத்தியசாலை அமைந்திருந்த பகுதியில் கனரக ஷெல்தாக்குதல்கள் இடம்பெற்றன. (8,61)

# மூவரடங்கிய மேல் நீதிமன்றை அமைக்கும் சட்ட மூலத்தை உடனே நிறைவேற்றுங்கள்

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க கோருகிறார்

கொழும்பு, மார்ச் 17
நீதிமன்றக் கட்டமைப்பு சட்டமூலம் கட்டாயம் கொண்டு வரப்பட வேண்டும். இந்தச் சட்டமூலம் மக்கள் ஆணைக்குக் கிடைத்த வெற்றி. நீதியை நிலைநாட்டுவதற்கு மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தை அவசரமாக நிறுவ வேண்டும்.
இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள அவரது கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மாகாண சபை தேர்தல் கட்டம் கட்டமாக நடத்தப்பட்டது. இதன்போது ஐக்கிய மக்கள. சுதந்திர முன்னணி 50 இலட்சம் வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி 36 இலட்சம் வாக்குகளையும் பெற்றுக் கொண்டன. இந்த தேர்தல் முடிவை அடிப்படையாக கொண்டே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ அரச தலைவர் தேர்தலுக்கு அச்சமில்லாமல் சென்றார். அதில் அவருக்கு 56 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. . 36 இலட்சமாக இருந்த எதிர்க்கட்சிக்குரிய வாக்கு 62 இலட்சமாக அதிகரித்தது. இந்த வாக்குகள் மத்திய தர வர்க்கத்தினரினதும் புத்திஜீவிகளினதும் வாக்குகள்.
அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட ஊழல் மோசடியே மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்குக் காரணம். மோசடிகளை விசாரிப்பதற்கு ஊழல் மோசடி முறைப்பாடுகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றமொன்றை உருவாக்க வேண்டும். அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. எனினும் காலப்போக்கில் தலைமறைவாகி விட்டது. அதற்குப் பதிலாக சிறப்பு நிதி மோசடி ஆணைக் குழு நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழுவுக்கு 1700 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன. அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, அர்ஜூன ரணதுங்க ஆகியோர் மீண்டும் ஊழல் மோசடிகளை விசாரிக்க நீதிமன்றத்தை அமைக்குமாறு வலியுறுத்தினர்.
புதிய மேல் நீதிமன்றம் உருவாக்கும் பட்சத்தில் மத்திய வங்கி மோசடி தொடர்பான வழக்காக இருந்தாலும் துரிதமாக நிறைவுக்குக் கொண்டு வர முடியும். ஆகவே நீதிமன்றக் கட்டமைப்புச் சட்டமூலம் கட்டாயம் கொண்டு வர வேண்டும் - என்றார். (4.61)



# டிப்பர் – மோ. சைக்கிள் மோதி இருவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச், 17

டிப்பர், மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். டி ப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நேற்று இரவு பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி துர்க்கை அம்மன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்றது. அச்சுவேலியைச் சேர்ந்த தபேந்திரன் சுவேந்திரன் (வயது -34), பரராச சிங்கம் (வயது-45) ஆகிய இருவருமே உயிரிழந்தனர். விபத்து இடம்பெற்ற இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். அவருடைய சடலம் அச்சுவேலி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் பின் இருக்கையில் அமர்ந்து வந்தவர் படுகாயமடைந்த நிலையில் கோப்பாய் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிறிது நேரத்திலேயே அவர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் நடத்தினர். (உ.11,21, 64,26)

# மாட்டுடன் மோதுண்டவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

## மாடும் உயிரிழந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 17

வீதியில் சென்ற மாட்டுடன் மோதுண்டவர் படுகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். மாடும் உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் முழங்காவில் பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது. மன்னார் அடம்பனைச் சேர்ந்த சந்திரதாஸ் பெர்ணான்டோ (வயது - 46) என்பவரே உயிரிழந்தார். இவர் ஒரு பிள்ளையின் தந்தை.

நாச்சிக்குடாவில் மீன்பிடிக்கக் கடந்த 11 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் அடம்பனிலிருந்து சென்றுள்ளார். முழங்காவிலில் வீதியோரம் மாடுகள் சென்றன. வேகக்கட்டுப்பாட்டை இழந்த அவரது மோட்டார் சைக்கிள் மாடு ஒன்றுடன் மோதியது. அந்த இடத்திலேயே அவர் காயமடைந்து மயங்கிவிட்டார். இறுதிவரை அவர் சுய நிலைக்கு வரவில்லை. விபத்து இடம்பெற்ற இடத்திலேயே அவர் மோதிய பசுவும் உயிரிழந்தது.

அவர் முழங்காவில் மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (4)

# மணல் ஏற்றி வந்த சாரதிக்குத் தண்டம்

சாவகச்சேரி மார்ச் 17

அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக டிப்பரில் மணல் ஏற்றிவந்த சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன். கூடுதலாக ஏற்றப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில் மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோது வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்ட அளவினை விட கூடுதலாக மணல் காணப்பட்டதையடுத்து அனுமதிப் பத்திர விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டி சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது . (9)

## நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும்

# வன்முறைச் சம்பவங்கள் மக்களை மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன

## மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவை தெரிவிப்பு

மன்னார் மார்ச் 17

**அண்மைக் காலங்களில் இந்த நாட்டில் மதங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரு தடவை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன என்று மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பேரவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நல்லாட்சி அரசு என்று தன்னைச் சொல்லிக்கொள்கின்ற இன்றைய அரசின் ஆட்சிக்காலத்தில் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பிட்ட இடங்களில் நடைபெற்ற இந்த வன்முறைச் சம்பவங்களால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முறுகல் நிலையும் பதற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நாடு மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்குள் சென்றுவிடுமோ என்ற அச்சமும் ஆதங்கமும் நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

நான்கு முக்கிய மதங்களைக் கொண்ட இந்த நாட்டில் மத வன்முறைகளும், இன வன்முறைகளும் பல்லாண்டுகளாகத் தொடர்ந்துகொண்டு இருப்பது மிகவும் கவலையளிக்கும் ஒரு யதார்த்தமாகும். ஒவ்வொரு மதத்திலும் கூறப்பட்டுள்ள நல்விழுமியங்களைக் கடைப்பிடித்தால் இந்த நாடு வேற்றுமையில் ஒற்றுமை காணும் இடமாகவும், அமைதிப் பூங்காவாகவும் திகழும் என்பது திண்ணம்.

மன்னார் மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் அண்மைக் காலங்களில் கிறிஸ்தவ சமயத் திருச்சொருபங்கள் மற்றும் இந்துசமயப் புனிதச்சிலைகள் இனம்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சம்பவங்களால் இறைநம்பிக்கையாளர்களின் மனங்கள் பெரிதும் புண்பட்டுள்ளன. இதைவிட பல்வேறு மதத்தவரினதும் வழிபாட்டு சிலைகள் சட்டத்துக்கு முரணான வகையிலும், ஏனைய மதத்தவர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையிலும் வைக்கப் பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளால் சமயங்களுடையில் முறுகல் நிலையும், சந்தேக மனப்பான்மையும், இடைவெளியும் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் அம்பாறையிலும் கண்டியிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் இனவன்முறையின் உச்சத்தை மீண்டும் ஒரு தடவை இந்த நாட்டுக்கும் உலகத்துக்கும் காட்டியுள்ளன. ஒருசில தனிநபர்களுக்கிடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினை ஒரு இனத்துக்கு எதிரான திட்டமிட்ட தாக்குதல்களாக விரிவடைந்தமை ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. தம்மை மதப்பற்றாளர்கள் அல்லது இனப்பற்றாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒருசிலரின் தீவிரப் போக்குகளே இத்தகைய மத, இன வன்முறைகளுக்கு காரணமாக இருக்கின்றன.

இத்தகையை வன்முறைகளுக்குக் காரணமானவர்களை இனங்கண்டு சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசைக் கோரிநிற்கின்றோம். ஏற்பட்ட உயிர் உடைமை இழப்புக்களுக்கு உரிய நிவாரணங்களைக் காலம் தாழ்த்தாது வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

இன, மத வன்முறைகளைத் தோற்றுவிக்கின்றவர்கள் மட்டில் அவதானமாக இருக்கும்படி அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்வதோடு, வீணான வதந்திகளுக்கும், பொய்ப் பரப்புரைக்கும் இரையாகாமல் கவனமாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம் -என்றுள்ளது. (எ-56)



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழா கடந்த வாரம் நடைபெற்றபோது சிறப்பாகச் செயற்பட்ட சங்க அங்கத்தவர்கள் சங்க நிர்வாகத்தினால் மதிப்பளிக்கப்பட்டனர். (9)

# நாய் குறுக்கே பாய்ந்ததில் இருவர் மருத்துவமனையில்

தென்மராட்சி, மார்ச் 17

வெவ்வேறு இடங்களில் சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதியதில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்தசில நாள்களின் முன்னர் சேர்க்கப்பட்டனர்.

கைதடி தெற்குப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி மாலை மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையில் நாயுடன்மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த நடராசா நகுலேஸ்வரன் (வயது -32) என்பவருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையிலும் கைதடி நாவற்குளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மோட்டார் சைக்கிள் சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த ஞானச்சந்திரன் அஜந்தன் (வயது-21) என்பவர் காயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# சங்குஸ்தாபன ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்.17

வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேஸ்தான சங்குஸ்தாபன ஆரம்ப நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11.55 மணிக்கு ஆரம்பமாகும் என கோபுர திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். இந்த புனித கைங்கரியத்தில் அனைவரையும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (21)




சிறப்புத் தேவையுடையோரின் சமூக வள நிலையமான "கருவி" நிறுவனத்துக்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனால், 2017ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து 75 ஆயிரம் பெறுமதியான அலுவலக தளபாடங்கள் மற்றும் மின்விசிறி என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# தொழில்நுட்ப நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.17

சென். பற்றிக்ஸ் கல்லூரி தொழில்நுட்ப நிலைய திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயர் மற்றும் கல்லூரியின் அதிபர் யஸ்ரின் ஞானப்பிரகாச ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் அமைச்சர் ஏ.ஈ.அமரதுங்க, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எ ன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் கைகளில் 1300 கைத்துப்பாக்கிகள்

பொது மக்களின் கரங்களில் அனுமதிப்பத்திரத்துடன் கூடிய கைத்துப்பாக்கிகள் 1300 உள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் எம்.டி. பண்டிதரத்ன இதனை வெளிப்படுத்தினார்.
அத்துடன் இந்தக் கைத்துப்பாக்கிகளுக்கு மேலதிகமாக விவசாய நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 19 ஆயிரம் துப்பாக்கிகளும் பொது மக்களின் கைகளில் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (21,71)

# கண்டி வன்முறை திட்டமிட்ட சூழ்ச்சி

## முதல்கட்ட விசாரணையில் தகவல் என்கிறார் சட்டம் ஒழுங்கு அமைச்சர்

கண்டியில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையானது அடிப்படைவாத குழுக்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவம் என்பது ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என பொது நிர்வாக முகாமைத்துவ, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்தார்.

முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்காவின் ஏற்பாட்டில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைக்கு உட்பட முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சட்டம் ஒழுங்கு அமைச்சருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
முஸ்லிம்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொறுப்பு வாய்ந்த அரசு என்ற வகையில் மக்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்கத் தயாராகவுள்ளோம். எனவே எதிர்காலத்தில் இது போன்ற துரதிர்ஷ்ட சம்பவங்கள் இடம்பெறுவதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.
கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையோருக்கு எதிராக தராதரம் பாராது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் சிலர் அரசின் பக்கம் விரல் நீட்டுகின்றனர். எனினும் அதில் எவ்வித உண்மையும் கிடையாது. மாறாக அரசியல் நோக்குடன் செயற்படுகின்ற சிலர் இதன் பின்னணியில் உள்ளனர். ஆகவே அதற்கான முழுமையான அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அது தொடர்பிலான தகவல்களை வெளியிடுவோம்.
சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இதுவரை 280 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றின் மூலம் இந்தத் தாக்குதல் சமபவத்தின் பின்னணியைப் புரிந்து கொள்ள முடியும். அத்துடன் சில பிரதேசங்களில் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (21,61)

# நல்லாட்சி அரசிடமிருந்து நாட்டையும் மக்களையும் காக்க வேண்டியுள்ளது

## முன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

நல்லாட்சி அரசால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. அதனால் நாடு ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே இந்த அரசிடமிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மிக விரைவில் சமர்ப்பிக்கவுள்ளோம். என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
மஹரகமையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நல்லாட்சி அரசு ஜனநாயக விரோத செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகிறது. மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை முன்னெடுக்க முடியாது போயுள்ளது. நாட்டு மக்கள் தற்போது பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். பொருளாதார ரீதியில் பெரும் சவாலைச் சந்திக்கின்றனர். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினர். எனினும் அவை எதனையும் நிறைவேற்ற முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.
அதனை மக்கள் தற்போது நன்கு உணர்ந்துகொண்டுள்ளனர். அதனாலேயே கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். அரசு நாட்டையும் மக்களையும் கருத்திற் கொண்டு வேலைத்திட்டங்களை முன்வைக்க வேண்டும். அதனைவிடுத்து வேறு விதமான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக வேலைத்திட்டங்களை முன்வைக்கக்கூடாது.
மேலும் நல்லாட்சி அரசானது தமது குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு சில உபாயங்களைக் கையாள்கிறது. பிரச்சினையொன்று மேலோங்கி அது அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற போது அதனை மூடி மறைப்பதற்கு வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது - என்றார். (21,61)

# இலங்கை முஸ்லிம்களுக்கு ஆதரவாக சென்னையில் இன்று போராட்டம்

கொழும்பு,மார்ச் 17
முஸ்லிம்களை மையமாக வைத்து அண்மையில் இடம்பெற்ற அம்பாறை மற்றும் கண்டி வன்முறைச் சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலும், அதற்கு நீதிகோரியும் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.
சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியினரும், தி.வேல்முருகன் தலைமையிலான தமிழக வாழ்வுரிமைக் கட்சியினரும் கூட்டாக இணைந்து இந்தப்போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர். இந்தப்போராட்டத்தில் இலங்கை உணர்வாளர்கள் அனைவரையும் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (21,31)

## பெற்றோர்...

வயதுக் குழந்தையுமே மீட்கப்பட்டன.
கலேவல, பெலியகந்தவிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
கலேவல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ்பரிசோதகர் ஜனந்த விதானராச்சிக்கு நேற்றுமுன்தினம் தகவல் ஒன்று கிடைத்தது. தோட்டப்பகுதியில் உள்ள குடிசையொன்றில் இரு குழந்தைகள் பெற்றோரின் அரவணைப்பின்றி 5 நாள்கள் உள்ளன என்பதே அந்தத் தகவல். கிராமவாசிகளே அவருக்கு இந்தத் தகவலை வழங்கினர்.
விரைந்து செயற்பட்ட பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர். ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றும், 4 வயதுக் குழந்தை ஒன்றும் எவருமற்ற குடிசையில் செய்வதறியாது இருந்தன. அவர்களைப் பொலிஸார் மீட்டனர். குழந்தைகள் இப்போது நலமாக உள்ளனர்.
குழந்தைகளின் தாய் குழந்தைகளைக் கைவிட்டு வெறொரு பிரதேசத்துக்குச் சென்று வாழ்க்கின்றார் என்று கூறுகின்றனர் கிராமவாசிகள். தந்தை குழந்தைகளைக் கவனிக்காது ஆங்காங்கு திரிகின்றார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
பச்சிளம் குழந்தைகளைக் கைவிட்டுப் பெற்றோர் சென்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ற-ரி5)

## கிணற்றில்...

வரும் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காக்கையன் குளம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது.
"இருவரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர்களின் சத்தம் கேட்கவில்லை" என்று சிறுவர்களின் தாயார் தெரிவித்தார். முஹமட் சம்ரான் (வயது -5), முஹமட் அஸ்ஹான் (வயது- 7) ஆகியோரே பரிதாபமாக உயிரிழந்தனர்.
சிறுவர்கள் இருவரும் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். தாயார் வீட்டில் மூன்றாவது பிள்ளையுடன் வீட்டினுள்ளே இருந்துள்ளார். விளையாடிய சிறுவர்களின் சத்தத்தைக் காணவில்லையே என்று தாயார் வெளியே வந்து பார்த்த போது சிறுவர்கள் இருவரையும் காணவில்லை.
பதறிப்போன தாயார் எல்லா இடங்களிலும் அவர்களைத் தேட ஆரம்பித்தார். தகவல் அறிந்து வந்த உறவினர்களும் தேடினர். வளவின் பின் பகுதியில் உள்ள காணியின் கிணறு ஒன்றுக்குள் எட்டிப் பார்த்தபோது சிறுவர்களின் சடலங்கள் அதற்குள் கிடந்தமை அவதானிக்கப்பட்டது.
பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சடலங்களை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். நேற்றுக் காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்ற மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸ்பெல்டானோ சடலங்களைப் பார்வையிட்டார். உடற்கூறுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (உ-21,56)

## தமிழன்...

முல்லைத்தீவு முள்ளியவளை கொண்டைமடு காட்டுப் பகுதியில் ஒரு தொகுதி கைக்குண்டுகள் காணப்படுகிறது என்று முள்ளியவளைப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. தகவல் சிறப்பு அதிரடிப் படையினருக்குப் பரிமாறப்பட்டது. கைக்குண்டுகளை மீட்பதற்கான அனுமதியை சிறப்பு அதிரப்படையினர் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் கோரினர். மன்றின் உத்தரவுக்கு அமைய குண்டுகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன என்று அதிரப்படை தெரிவித்தது.
போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்டு போரின் போது பாவிக்கப்பட்ட தமிழன் வகைக் கைக்குண்டுகள் அவை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த கைக்குண்டுகள் அதன் கவசத்துடன் காணப்பட்டன என்றும் சிறப்பு அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்தனர். (உ-21,ரி3)

## ஐ.நா...

பான பூகோள காலமீளாய்வு விவாதம் பிற்போடப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பணியாளர்கள் நடத்திய பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினாலேயே, இந்த நிலை ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தப் போராட்டத்தினால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று நடைபெறவிருந்த அனைத்துவிவாதங்களும்பிற்போடப்பட்டன. விவாதம் நடைபெறும் பகுதி வெறிச்சோடிக் கிடக்கிறது.
அதேவேளை, ஐ.நா. வளாகத்தில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த முறைசாராக் கூட்டங்கள், பக்க அமர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
சபையில் நேற்று நடைபெறுவதாக இருந்த விவாதங்கள், வேறொரு நாளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## அரசிதழ்...

ராட்சித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள், தேர்தல் நடந்து ஒன்றரை மாதங்கள் கழித்தே அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
அரசிதழில் நேற்று வெளியானபோதும், அதில் 9ஆம் திகதி வெளியானதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## வன்முறையைக்...

லமாக ஐ.நா. அலுவலகத்தை அடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.
இலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அநீதிகள் தொடர்பான அறிக்கை ஒன்றும் ஜக்கிய நாடுகள் கொழும்புக் அலுவலகத்தின் அலுவலரிடம் கையளிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அதை அனுப்புமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.
கடந்தகால அரசும் தற்போதைய கூட்டரசும் நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகத்துக்கு தொடர்ந்தும் அநீதிகளை இழைத்து வருகின்றது. வன்முறையுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், சட்டம் ஒழுங்குகளை முறையாக பாதுகாக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ற-ரி4)

## வவுனியாவில்...

குருமன்காடுப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றின் மின் தொகுதியில் மின்னல் தாக்கியதில் மின் தொகுதி தீப் பற்றி எரிந்தது. உடனடியாக மின்சார சபை, தீயணைப்புப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட மின்சார சபை ஊழியர்கள் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். பெரும் அசம்பாவிதங்கள் ஏற்பட முன்னரே தீ அணைக்கப்பட்டது. மாலை 4 மணியில் இருந்து 6 மணிவரை திடீரெனப் பெய்த இந்த மழையால் வவுனியா மாவட்டச் செயலகத்துக்குள்ளும் வெள்ளம் புகுந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21,110)

## அமிர்தலிங்கத்தின்...

மேற்கு பிரதேச சபையில் திறந்து வைக்கப்படவுள்ளது. காலை 9 மணிக்கு வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் திறப்பு விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
முதன்மை விருந்தினராக தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் தற்போதைய எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கலந்துகொண்டு உருவச் சிலையை திறந்து வைக்கவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

எமது மண்ணின் பெயர் சேர்க்கும்

# கறுத்தக்கொழும்பான் மாம்பழம், முருங்கை, இதரை வாழை போன்றன அழிந்துவிட்டன

மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசியர் கவலை

யாழ்ப்பாணம்.மார்ச்.17

நாம் புதிய இனங்களின் வளர்ச்சியைக் கண்டு எமக்குச் சொந்தமான இனங்களை மறந்து விட்டோம். தற்போது எமது மண்ணின் பெயர் சேர்க்கும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம், முருங்கை, இதரை வாழை போன்ற இனங்கள் அழிந்து விட்டன. இவ்வாறு மேற்கு சிட்னி பல்கலைக்கழக பேராசியர் ஆசி.காந்தராஜா தெரிவித்தார்.



யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் ,வட பிராந்திய இலங்கை பொறியியலாளர் நிறுவகமும் இணைந்து நடத்திய "சுற்றுச் சூழல் விவசாயம் "என்னும் தலைப்பினாலான கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.இதில் வளவாளராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது நாட்டில் சனத்தொகை அதிகரிப்பினால் விவசாய நிலப்பரப்பு குறைந்து செல்கின்றது.ஆனால் நாம் அதிகளவான விவசாயத்தை மேற்கொள்ள வேண்டியர்வர்களாக உள்ளோம். புதிய இனங்களின் வருகை வரவேற்கதக்கது.நாம் புதிய இனங்களின் வளர்ச்சியை கண்டு எமக்கு சொந்தமான இனங்களை மறந்து விட்டோம். தற்போது எமது மண்ணின் பெயர் சேர்க்கும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ,முருங்கை, இதரை வாழை போன்ற இனங்கள் அழிந்து விட்டன. அதிக விளைச்சல் தரும் இனங்களை தேடி நாம் செல்கின்றோம்.எமக்கு சொந்தமானவற்றை நாம் மறந்து விட்டோம். மேற்குலக நாடுகள் தமக்கான அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு புதிய இனங்களை அறிமுகம் செய்கின்றன. ஆகவே நாம் எமக்கான இனங்களின் பரம்பரை இயல்புகளைத் சேமித்து பாதுகாக்கக் கூடிய பிரிவு் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் கலப்பு இனம் கொண்ட அல்லது மலட்டுத் தன்மை கொண்ட மரக்கறி மற்றும் பழவகைகளையே உண்ணவேண்டி வரும். ஒவ்வொரு வீட்டிலும் சேதன முறையிலான வீட்டுத் தோட்டம் அவசியம். ஆனால் இந்த முறை மூலமான விவசாய உற்பத்தி என்பது விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிக்கு உகந்தது அல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல இயற்கை முறையிலான விவசாயத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் நிர்ணய விலை என்பன இங்கு இல்லை. ஆகவே விவசாயத்தை வாழ்வதாரமாகக் கொண்டவர்கள் சேதன மற்றும் அசேதன முறையிலான இடைப்பட்ட முறையான "எக்கோ பாமிங்" முறையைக் கையாள வேண்டும். அதிகரிக்கப்படாத உரப் பாவனை, கிருமி நாசினிகளின் பாவனை, தூறல் நீர்ப் பாசனம் ,போன்ற முறைகளைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளுவது சிறப்பானதாக அமையும். அப்போதுதான் வாழ்வாதாரத்தை ஈடுசெய்யக்கூடிய விவசாயத்தை மேற்கொள்ள முடியும். அத்துடன் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கும் துறைசார்ந்த அதிகாரிகள் வழிவகைகள் செய்ய வேண்டும்" - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், துறைசார்ந்த அதிகாரிகள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (21.7)

## வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

முல்லைத்தீவு மார்ச் 15

முல்லைத்தீவு அருள்மிகு வற்றாப்பளைக்கண்ணகை அம்மன் ஆலயம் கடந்த வருடம் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்டு அதனுடைய கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. எதிர்வரும் 30ஆம் திகதி மகா கும்பாபிஷேக பெஞ்சாந்தி விழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 5.30 மணி முதல் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும். 26ஆம் திகதி திங்கட் கிழமை காலை 6 மணிக்குமேல்கர்மாரம்பம் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (எ-72)

மாணவர்கள் ஜி.சி.ஈ. உயர்தரத்தில்

## விஞ்ஞான பாடத்துறையில் ஆர்வம் செலுத்த வேண்டும்

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அறிவுரை

அச்சுவேலி, மார்ச் 16

மாணவர்கள் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்துறையில் ஆர்வம் காட்டவேண்டும் இந்த விடயத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிப்படுத்துவதுடன் பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்கால வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு வழிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கூறினார் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை.

வலி.கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு வலி.கிழக்கு பிரிவின் கல்விநிலை, பொருளாதார மேம்பாடு மற்றும் காணி இல்லாத குடும்பங்களின் வாழ்வாதாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வினா எழுப்பி சபையில் முன்வைக்கச் செய்ததோடு மேற்படி விடயங்களுக்கான ஆலோசனைகளையும் பேராசிரியர் வழங்கினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதி மாணவர்கள் ஜி.சி.ஈ. சாதாரணதரத்துக்கு அடுத்த நிலையில் உயர்தரக் கல்வியில் ஆர்வம் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலைப்பாடு வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

உயர்தரத்தில் விஞ்ஞானம் கற்றவர்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பு அதிகமாகக் காணப்படுவதுடன் உயர் கல்விக்கான சந்தர்ப்பமும் அதிகமாக உள்ளது. பல்கலைக்கழகத்துக்குச் செல்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டு கல்விகற்கின்ற நிலை அவசியம் எனப் பெற்றோர் கருதுகின்றனர்.

சமகால கல்விமுறையில் பட்டம் பெறுவதற்கு கல்வி வசதிகள் பல உண்டு மாணவர்கள் கலைத்துறையில் மட்டும் ஆர்வம் கொள்ளாமல் விஞ்ஞான, கணிதப் பாடத்துறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டும்.

வலி.கிழக்கின் பொருளாதார மேம்பாட்டோடு வலிகாமத்தின் அச்சுவேலி - கம்பூதூ வழிப்பாதையும், நீர்வேலி கைதடி வழிப்பாதையும் சீரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு வகை செய்யப்படவேண்டும்.

இந்தப் பாதைகளைப் புனரமைப்பதற்கு பெருமளவு நிதி தேவை. பொருத்தமாக நிதித்தேடலின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் இதனை நிறைவு செய்ய வேண்டும்.

வலி.கிழக்கில் பல நூற்றுக் கணக்காண குடும்பங்கள் சொந்தநிலம் குடியிருப்பு வசதி இன்றி அல்லல்படுகின்றனர்.

அவர்களுக்கு அரச காணிகளை இனங்கண்டுவழங்குவதற்கு முன்வர வேண்டும்-என்றார். (எ-11)

## 'ஹாக்கிங்' அஞ்சலி நிகழ்வு



வவுனியா.மார்ச் 17

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

அவருக்கான அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆசிரியர் சங்கம், மற்றும் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வளாக முதல்வர் மங்களேஸ்வரன் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

குவாண்டம், அண்டவியல் குறித்த ஆராய்ச்சிகளில் ஹாக்கிங்கின் பங்கு அளப்பரியது. இவர் தனது 21ஆவது வயதில் நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டார். (எ-110)

## யாழ். நூலகத்தில் இலத்திரனியல் அங்கத்துவ அட்டை அறிமுகம்

யாழ்ப்பாணம்.மார்ச்.17

யாழ்ப்பாணப் பொது நூலக வாசகர்களின் நன்மை கருதி இலத்திரனியல் அங்கத்துவ அனுமதி அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என நூலக நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பத்துப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் வாசித்தல் பகுதி, கணினிப் பகுதி, இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, இளைஞர் பகுதி போன்றவற்றில் வாசகர்கள் அதிகம் நாட்டம் காட்டுகின்றனர்.

2016ஆம் ஆண்டு 2 ஆயிரத்து, 894 பேர், 2017ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 353 வாசகர்கள் வருகை தந்துள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த வருடத்தை விட படிப்படியாக வாசகர்கள் அதிகரிப்பதை காட்டுகின்றது. இதனை கருத்தில் கொண்டு வாசர்களுக்கான அனுமதி அட்டைகள் இலத்திரனியல் அட்டைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் நூலகத்தில் அங்கத்துவம் பெறுபவர்களுக்கு காட்போட்டால் ஆன அனுமதி அட்டை வழங்கப்பட்டு வந்தது. இதற்கான கட்டணம் ஐம்பது ரூபாவாக அறவிடப்பட்டது. தற்போது இலத்திரனியல் அட்டையால் புத்தகங்கள் இரவல் வழங்குதல், அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் போன்ற விடயங்கள் இலகுவாக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் முதல் அங்கத்தவர்களுக்கு இலத்திரனியல் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான கட்டணமாக நூறு ரூபா அறவிடப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## 48 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை வன்னிக்கு இடம்மாற்றாதீர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் க.கருணாகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

48 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை வன்னிக்கு இடமாற்றம் செய்வது பொருத்தமற்றது. நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள்யோசித்துநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளருமான க.கருணாகரன் கோரிக்கை விடுக்கிறார்.

தற்போது 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரிய ஆளணியினர் 7 வருடங்கள், 8 வருடங்கள், 9 வருடங்கள், 10 வருடங்கள் என்று வன்னி மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர். அது மாகாணக் கல்வித் திணைக்களத்தினருக்குத் தெரிந்த விடயமே.

ஆனால் 48 வயதைத் தாண்டிய ஆசிரியர்களின் இடமாற்றத்தில் இடமாற்றத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளும் விடயத்துடன் சம்பந்தப்பட்டவர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

'தற்போது 50 வயது வரையான ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கை இடம்பெறுகிறது' என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (4-50)

# கொத்துக் குண்டு விவகாரத்தில் இலங்கை அரசு பதிலளிக்கலாம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

கொத்துக் குண்டுகள் தொடர்பான தமது முன்னைய செயற்பாடு குறித்து இலங்கையால் தற்போது பதில் வழங்க முடியும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கொத்துக் குண்டுகள் தொடர்பான சாசனத்தில் கைச்சாத்திட்ட 103 ஆவது நாடாக இலங்கை இந்த மாதம் இணைந்துள்ளது.

கொத்துக்குண்டுகள் மற்றும் நிலக்கண்ணிகள் தொடர்பான இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதன் அடிப்படையில், ஏற்கனவே தாம் பயன்படுத்திய கொத்துக் குண்டுகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் தொடர்பில் இலங்கை அரசினால் பதிலளிக்க முடியும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எதிர்காலங்களில் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவோ அல்லது தயாரிக்கவோ இலங்கை அரசால் முடியாது. கையெழுத்திட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தஏனைய நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இந்த நிலையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அரசுஎன்ற அடிப்படையில் இலங்கையினால் உத்தியோகபூர்வமாகத் தமது முன்னைய செயற்பாடு குறித்துப் பதில் வழங்க முடியும் என்றும் மனித உரிமைகள் கண் காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

போரின் போது கொத்துக் குண்டுகளை இலங்கை பயன்படுத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு வருகின்ற போதும், அரசும், படையினரும் அதனை மறுத்து வருகின்றனர். (5)

# ஐ.தே.க. மறுசீரமைப்பு தொடர்பில் கட்சிக்குள்ளேயே கருத்துக் கணிப்பு

## நான்கு தரப்புகளிடமிருந்தும் அறிக்கை புத்தாண்டுக்குப் பின்னர் புதுப்பயணம்

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எத்தகைய மறுசீரமைப்புகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் கட்சியின் முக்கிய மூத்த உறுப்பினர்களிடம் கருத்துக்கள் திரட்டப்பட்டுள்ளன.

மூத்த உறுப்பினர்கள், அதிருப்தியாளர்கள், நடுநிலைவாதிகள், இளம் உறுப்பினர்கள் என்று நான்கு தரப்பையும் மையப்படுத்தியே இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அவை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

கட்சியின் எந்தக் கட்டமைப்பில் உடனடி மாற்றம் இடம்பெறவேண்டும், எந்தெந்தப் பதவிகளில் மாற்றம் வரவேண்டும், அதற்குத் தகுதியான உறுப்பினர்கள் யார், கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தம் என்ன என்பவை உட்பட மேலும்பலவிடயங்களை மையப்படுத்தியே கருத்துகள் அறிக்கையாகக் கோரப்பட்டன என்று சிறிகொத்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள முன்னணி வெற்றியைப் பதிவு செய்ததால் ஆளும் கூட்டணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

மத்தியில் ஆட்சி அதிகாரத்திலிருந்தும் கட்சியொன்று குட்டித் தேர்தலொன்றில் மண்கவ்விய சந்தர்ப்பமாக அது பார்க்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என்று கட்சிக்குள்ளேயே கருத்துக்கள் வலுப்பெற்றன.

இதையடுத்து கட்சிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்காகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தலைமையில் ஐவரடங்கிய குழுவொன்றைக் கட்சியின் மையக் குழு அமைத்தது. அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, அகில விராஜ் காரியவசம், நவீன் திஸாநாயக்க ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஐவரடங்கிய இந்தக் குழுவின் அறிக்கை கடந்த வாரம் கையளிக்கப்படவிருந்த போதிலும், கட்சிக்குள் கருத்துக் கணிப்பொன்றை நடத்திய பின்னர் அது தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கி, முழுமையானதொரு மறுசீரமைப்பு அறிக்கையைக் கையளிப்பதற்காக மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மாற்றம் இடம்பெற்று அதன் பின்னர் புதியதொரு பயணம் ஆரம்பமாகும் என்று அண்மையில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# 23இல் சபையில் ‘திருட்டு’ விவாதங்கள்

கொழும்பு, மார்ச் 17

மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம், நல்லாட்சியில் அரங்கேறிய பிணைமுறி மோசடி ஆகியவை தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் மீதான விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளு மன்றில் நடைபெறவுள்ளது.

இவ்விரு அறிக்கைகளும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னரே சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. தேர்தலுக்குப் பிறகே விவாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் கடும் எதிர்ப்புக்கள் வலுத்ததால் தேர்தலுக்கு முன்னர் விவாதம் நடத்தப்பட்டது.

தேர்தல் முடிவடைந்த பின்னர் விவாதத்தைத் தொடர்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், பெரிய ஊழல், மோசடிகள் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தனிச் சிங்கள மொழியில் மட்டும் இருக்கின்றது என்றும், அதன் தமிழ்மொழிமூல பிரதி அவசியம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியதையடுத்து விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே எதிர்வரும் 23ஆம் திகதி இரு அறிக்கைகள் மீதும் விவாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

தமிழ்மொழிமூலப் பிரதிகளை அச்சிடுவதில் சிக்கல் ஏற்படும் பட்சத்தில் விவாதம் பிறிதொரு நாளிலேயே எடுக்கப்படுவதற்குரிய சாத்தியம் இருக்கின்றது.

மார்ச் மாதத்துக்குரிய இரண்டாம் வார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 20ஆம் திகதி ஆரமபமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சீனாவுடனான சிக்கல்கள் தீர்க்கப்படும்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17



சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் பெரிய கூட்டுறவுத் திட்டங்கள் தொடர்பில் நடைமுறையில் காணப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஸேயுஆன் மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோருக்கு இடையே கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பட்டுப்பாதைக் கட்டமைப்பின் கீழ்ப் பெரிய கூட்டுறவுத் திட்டச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் வகையில் இலங்கையுடன் இணைந்து செயற்படச் சீனா தயாராக உள்ளது என்று சந்திப்பில் சீனத் தூதுவர் தெரிவித்தார். இதன் மூலம் இருநாடுகளும் பரஸ்பர நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்பை வலுப்படுத்துவதன் அடிப்படையாக இந்தக் கூட்டுறவுத் திட்டம் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான பெரிய கூட்டுறவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தற்போது காணப்படுகின்ற சவால்களையும், அடையப்பெற்றுள்ள வெற்றிகளையும் தெளிவுபடுத்தினார். சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிவகைகளை இலங்கை அரசு கண்டறிய வேண்டும் என்று சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குச் சீனாவின் நீண்டகால ஒத்துழைப்புத் தொடர்பில் நினைவுகூர்ந்தார். சீனாவின் உதவி அடிமட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை அபிவிருத்தி தொடர்பான நிர்வாகக்குழு மற்றும் தெற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு என்பன ஒன்றிணைந்து பொது மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்கும் என்று ரணில் தெரிவித்ததாக, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5,61)

# கண்டியில் உயிரிழந்தோருக்கு ரவி கருணாநாயக்க நிதி உதவி

கொழும்பு, மார்ச் 17



கண்டி மாவட்டத்தின் தெல்தெனிய, திகனப் பகுதிகளில் இடம்பெற்ற இனக் கலவரத்தினால் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினரைச் சந்தித்து நிதி உதவிகளைக் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க வழங்கி வைத்துள்ளார்.

கொழும்பு மாநகர சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கொழும்புத் தொகுதிப் பிரதிநிதிகள் 17 பேருடன் ரவி கருணாநாயக்க கண்டிக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டிருந்தார்.

திகன, மெதமலுவ விகாரையின் விகாராதிபதி கஹகல தம்மரத்ன தேரரை சந்தித்து ஆசிபெற்ற ரவி கருணாநாயக்க தலைமையிலான குழுவினர், திகன கெங்கல்ல நகரில் வர்த்தக நிலையமொன்றில் மூச்சுத் திணறி உயிரிழந்த அப்துல் பாஸிதின் வீட்டுக்குச் சென்றனர்.

அவரது குடும்பத்தினரைச் சந்தித்துப் பேசினர். அந்தக் குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியை ரவி கருணாநாயக்க வழங்கினார். அரசின் இழப்பீடு கிடைக்கும் வரை அவரது மாதாந்தச் சம்பளத்தின் ஒரு பங்கை மாதாந்தம் வழங்குவதாகவும் குடும்பத்தினருக்கு அவர் உறுதியளித்தார்.

நான்கு இளைஞர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த தெல்தெனிய, அம்பால பகுதியைச்சேர்ந்த குமாரசிங்கவின் வீட்டுக்குச் சென்று அவரது குடும்பத்தினரைச் சந்தித்து சுக துக்கங்களை விசாரித்தார். ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியையும் வழங்கி வைத்தார். அரசின் இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் வரைக்கும் தனது மாதாந்தச் சம்பளத்தின் ஒரு பங்கை மாதாந்தம் வழங்குவதாகவும் குடும்பத்தினருக்கு அவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ரவி கருணாநாயக்க, வட கொழும்புஎன்பதுஅனைத்து இன மக்களும் மிகவும் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் வாழும் பிரதேசமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்குச் சேவை செய்வதற்கு அதிகாரம் தேவையில்லை என்பதனை நான் உறுதிப்படுத்தியுள்ளேன். நான் இங்கு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்குவரவில்லை. குமாரசிங்க கொலை அநீதி என்பதனை ஒப்புக்கொள்கின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தின் போது பொலிஸார் துரிதமாகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருந்தால் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. பிரச்சினையின்போது மதத் தலைவர்கள் செயலாற்றிய விதத்துக்குப் பாராட்டுகின்றேன் - என்றார். (5,31)

## பணியகங்களில் பெண்களுக்கான வேலை நேரத்தில் மாற்றம்!

கொழும்பு, மார்ச் 17

பெண்களின் பாதுகாப்புக் கருதி அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களின் வேலைநேர மாற்றம் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொழில் மற்றும் வர்த்தக மகளிர் சம்மேளனத்தின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, இலங்கையில் பெண்கள் பல துறைகளில் முன்னிலையில் உள்ளபோதும், அது பொருளாதார மற்றும் அரசியற் துறைகளில் மாற்றமடையவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (5)

## வாக்குறுதி எதையும் வழங்கவில்லை மைத்திரியின் கருத்துக்கும் மறுப்பு

### முகநூல் நிர்வாக அதிகாரிகளுடன் சந்திப்பில் பங்கேற்றவர்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 17

இலங்கை அரசு கோரியபடி, இனவெறுப்பைத் தூண்டும் கருத்துக்கள் முகநூல் பதிவுகளில் இடம்பெறுவதைத் தடுப்பது தொடர்பான எந்த வாக்குறுதிகளையும் வழங்க முகநூல் நிறுவனத்தின் அதிகாரிகள் மறுத்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டியில் இடம்பெற்ற கலவரங்களை அடுத்து, முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களின் மீது அரசு தடை விதித்திருந்தது.

முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இன வெறுப்பைத் தூண்டும் கருத்துக்கள் இடம்பெறுவதைத் தடுக்குமாறு முகநூல் நிறுவனத்திடம் அரசு கோரியிருந்தது.

இந்தியாவில் இருந்து வந்திருந்த முகநூல் நிறுவனத்தின் அதிகாரிகள், அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தப்பேச்சுக்களைஅடுத்து, நேற்றுமுன்தினம் பிற்பகல் தொடக்கம் முகநூலுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

இது தொடர்பாக அரச தலைவர் கீச்சகத்தில் வெளியிட்டிருந்த பதிவில், வெறுப்புணர்வையோ வன்முறைகளையோ தூண்டுவதற்கு தளமாகப் பயன்படுத்தப்படாது என்ற வாக்குறுதியின் அடிப்படையில் இந்தத் தடை நீக்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். இதுதொடர்பான எந்த உத்தரவாதத்தையும் வழங்க முகநூல் நிறுவன அதிகாரிகள் முன்வரவில்லை என்று, பேச்சுக்களில் பங்கேற்ற தரப்புக்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமது நிறுவனம் ஏற்கனவே வெறுப்புணர்வைத் தூண்டுவதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும், அதுபற்றித் தெளிவுபடுத்தியிருப்பதாகவும், முகநூல் நிறுவன அதிகாரிகள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (5)

## ஹுசைனுக்குப் பதிலடி கொடுக்க மாரப்பன குழு ஜெனிவா பயணம்



கொழும்பு, மார்ச் 17

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, அரசின் உயர்மட்டக் குழு நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜெனிவாவுக்குப் பயணமாகவுள்ளது.

இந்தக் குழுவுக்கு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தலைமை தாங்கவுள்ளார்.

சிறப்புத் திட்டங்களுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் தலைவர் மனோ தித்தவெல, பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நரேன் புள்ளே, தலைமை அமைச்சரின் ஆலோசகர் பிரசாந்தி மகிந்தரத்ன, அயலுறவுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மஹிசினி கொலன்னே ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை தொடர்பில் தனது வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் சபையில் முன்வைப்பார். இதற்குப் பதில் வழங்குவதற்காகவே இலங்கை அரசின் மேற்படி குழு ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளது. (5)

## அமெரிக்கா அழித்த இடத்தில் மைத்திரி அமைதி அஞ்சலி

கொழும்பு, மார்ச் 17

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஹிரோசிமாவுக்குச் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.



இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானில் அமெரிக்காவால் அணுகுண்டு வீசப்பட்ட நகரங்களில் ஒன்றான ஹிரோசிமாவுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டார்.

அங்கு, அணுகுண்டு வீச்சுக்குப் பலியானவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ளநினைவிடத்தில்அவர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ஹிரோசிமா நகர முதல்வரும் அரச தலைவருடன் இந்த நிகழ்வில் பங்கேற்றார். (5)

## முகநூலில் குரோத பரப்புரைகள் அதிகரிப்பாம்

### ஹர்ச தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

முகநூல் ஊடாகக் குரோதப் பரப்புரைகள் அதிகரித்துள்ளதாகப் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

முகநூலைப் பயன்படுத்திச் சிலர் குரோத உணர்வைத் தூண்டும் பரப்புரைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்வாறான விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முகநூல் மீதான தடை நீக்கப்பட்டுள்ள சூழலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

*அமைச்சரவை அனுமதியையடுத்து*

## இழப்பீடுகளுக்கான பணியகம் அமைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 17

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், இழப்பீடுகளுக்கான பணியகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பணியகத்தை அமைப்பதற்கு அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்திருந்தார். அதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்தே, இந்தப் பணியகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

எந்த இன, மத வேறுபாடும் இன்றி, பொலிஸார், பாதுகாப்புப் படையினரின் குடும்பங்கள் மற்றும் எல்லைக் கிராமங்களில் நெருக்கடிகளை எதிர்கொண்டவர்கள் உள்ளிட்ட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் அனைவரும் இந்தப் பணியகத்திடம் இழப்பீட்டுக்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இழப்பீடுகளை வழங்குவதற்குச் சுதந்திரமான அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும். அமைச்சரவையால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படும் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக இது செயற்பட வேண்டும், என்றும் அவர் கூறியுள்ளார். (5)



## அவசரகால சட்டத்தை நீக்க அவசரம் ஏன் ?

### *ரணிலிடம் பாதுகாப்பு அதிகாரிகள் கேள்வி*

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் வாராந்த பாதுகாப்புச் சபைக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே, கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உள்ளிட்ட பாதுகாப்பு உயர்மட்ட அதிகாரிகள், அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டியில் அண்மையில் நடந்த வன்முறைகள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் 70 வீதம் நிறைவடைந்துள்ளதாகவும், எஞ்சிய விசாரணைகளும் முடியும் வரை அவசரகாலச்சட்டத்தை நீக்கும் முடிவை தாமதிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

ஜப்பானுக்குச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பியதும், அவரைச் சந்திக்கும் தலைமை அமைச்சர் இந்த விடயத்தை அவரது கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பானில் இருந்து அரச தலைவர் நாடு திரும்பியதும், அவசரகாலச் சட்டத்தை நீக்கும் அறிவிப்பை வெளியிடுவார் என்று முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## திட்டமிட்டு ஞானசாரர் மைத்திரியின் நிகழ்வில் பங்கேற்கவில்லையாம்

கொழும்பு, மார்ச் 17

திட்டமிட்ட அடிப்படையில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தேஞானசாரதேரர் அரச தலைவர் மைத்திரியின், ஜப்பான் நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜப்பானில் பௌத்த பிக்குகளுடன் மைத்திரி சந்திப்பை நடத்தியிருந்த நிலையில் ஞானசார தேரர் பங்கேற்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அந்த அமைப்பு மேற்கண்டவாறு கூறியுள்ளது. (5)

## இன அடையாளப் பாடசாலைகளை இல்லாதொழிக்க வேண்டும் - பைசர்

கொழும்பு, மார்ச் 17

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என்று இனரீதியான பாடசாலைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மல்வத்து மகாநாயக்க தேரரைச் சந்திக்க நேற்றுமுன்தினம் அமைச்சர் சென்றார். சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆரம்பகாலங்களில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என்று பாடசாலைகள் பிரிக்கப்படாமல் இருந்ததால் நாட்டில் உள்ள மக்களுக்கு இடையில் ஒற்றுமை காணப்பட்டது. தற்போது இனரீதியாகப் பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றை இல்லாமற் செய்ய வேண்டும்.

மேலும், தீவிரவாத அமைப்புகள் உலகில் உள்ள முஸ்லிம்களின் மனதில் பயங்கரவாதத்தை விதைத்து முஸ்லிம்களின் மனதைச் சிதைக்க முயன்ற போதிலும், எமது நாட்டிற்குள் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் ஒருபோதும் வழிவிடப் போவதில்லை - என்றார். (5)

# ES Printers

**விசேட விலைக்கழிவில் அனைத்து வகையான Printing வேலைகளையும் செய்து கொள்ள இன்றே நாடுங்கள்**

எமது

# சாவகச்சேரி கிளையை






**பனர் பிரிண்ட் (Banner), ★35/=**

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதிமற்றும் காபன் பிரதி அற்ற, வர்ணமற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்தநேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

**மக் பிரிண்ட் (MUG) 450/=**






**அனைத்து விதமான T Shirt Printings**




T-SHIRT XPRESS Print

**Rubber stamp**



பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

அலுவலகம்:- New Market, 1st Floor, Chavakachcheri
esprintersjaffna@gmail.com 021 492 7432, 021 492 7472

# மக்கள் சூடு போட்ட பின்னரும் தலைமைகள் உணரவில்லை

## ஆதங்கப்படுகிறார் தியாகராசா



வவுனியா, மார்ச் 17

ஒவ்வொரு கட்சிகளும் இந்தத் தேர்தலில் தாங்கள்தான் வென்றுள்ளோம் என்று கூறுகின்றனர். எந்தவொரு தமிழ்க் கட்சியும் உண்மையில் வெல்லவில்லை. இந்தத் தேர்தலில் மக்கள் ஏன் இவ்வாறு வாக்களித்தார்கள் என்று கூடத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன்னமும் உணரவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உறுப்பினருமான ம.தியாகராசா தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக விவசாய நிறுவனத்தின் நிதி உதவியுடன், போர் மற்றும் வறுமைக்கு உட்பட்ட விவசாயிகள் 225பேருக்கு இலவச உள்ளீடுகளை வழங்கி வைக்கும்நிகழ்வு, வவுனியா விவசாயப் பண்ணையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்துக்கு உட்பட்ட 4 பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதில் தொங்குநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளின் தவறே இதற்குக் காரணம். இந்தக் கட்சிகளின் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று பலதரப்பட்ட கொடிகளைப் பிடித்திருக்கிறார்கள். வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைப்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இன்றுவரை ஆட்சியமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்தத் தலைவர்கள் தமிழ் மக்களை எங்கு கொண்டு போய்விடப்போகிறார்களோ என்று தெரியவில்லை.

தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற சகல கட்சிகளும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளார்கள். இதனை நான் பகிரங்கமாகக் கூறுகிறேன். தமிழ்த் தேசியத்துக்காகப் பாடுபடுகிறோம் என்று மக்களை அந்தரத்தில் விட்ட நிலையே காணப்படுகிறது. அனைத்து இடங்களிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. அவற்றை மறந்து எமது இனத்துக்காக மக்களின் நலன்களை முன்னிறுத்தி அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும். இவர்களின் ஒற்றுமைக்காக நான் முன்னின்று பாடுபடுவேன். கட்சிகளின் ஒற்றுமையை விரும்பும் தலைவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் எனது கட்சியூடாக அவர்களின் ஒற்றுமைக்கு வழி ஏற்படுத்தி கொடுப்பேன் என்று உறுதியாகக் கூறிக்கொள்கிறேன் - என்றார். (5.110,402)

## சூடாக வெளியேறினார் வீரசேகர ஜெனிவா பக்க அமர்வில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 17

கோத்தபாய ராஜபக்சவின் எலிய அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனிவா அமர்வில் பங்கேற்றுள்ள முன்னாள் கடற்படைத் தளபதியும், முன்னாள் பிரதி அமைச்சருமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, பக்க அமர்வில் இடம்பெற்ற வாதத்தில் சூடாக இடைநடுவில் வெளியேறியுள்ளார்.

சமாதானத்துக்கும், நிலைமாறுகால நீதிக்குமான பன்னாட்டு அமைப்பின் தலைவரான ஜஸ்மின் சூகாவின் தலைமையில் நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தில் புலம் பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பன்னாடுகளின் பிரதிநிதிகளும் தென்னிலங்கையின் எலிய அமைப்பின் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

"இலங்கை அரசு எதிர்பார்த்த வண்ணம் எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று ஜஸ்மின் சூகா தெரிவித்தார்.

"இறுதிப் போரில் 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக நீங்கள் (சூகா) குறிப்பிட்டீர்கள். ஆனால் நேஸ்பி பிரபு 7ஆயிரம் பேர்தான் உயிரிழந்திருக்கலாம் என்று கூறியுள்ளார்.

ஐ.நா. செயலர் நியமித்த நிபுணர் குழுவில் இடம் பெற்ற நீங்கள் எப்படிப் பிழையான தகவலைத் தெரிவிக்கலாம் ? உங்கள் குற்றச்சாட்டை நியாயப்படுத்தும் நோக்கிலேயே முன்னாள் தூதுவர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்துள்ளீர்கள்" என்று சரத் வீரசேகர குற்றஞ் சுமத்தினார்.

"எனது சகோதரர் பாதிக்கப்பட்டபோது அந்தப் பகுதியில் கட்டளை அதிகாரியாக அட்மிரல் சரத் வீரசேகரவே இருந்தார். அதற்கான பொறுப்பைத் தற்போது சரத் வீரசேகர ஏற்றுக் கொள்வாரா?" என்று புலம்பெயர் பிரதிநிதி ஒருவர் கேள்வி எழுப்பினார்.

குறுக்கிட்ட சரத் வீரசேகர, புலம்பெயர் பிரதிநிதி பொய்யான தகவலைக் குறிப்பிடுகிறார். அந்தக் காலப் பகுதியில் கட்டளை அதிகாரியாகச் செயற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் பல விடயங்களைக் கூற முற்பட்ட போது உபகுழுக்கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்த அதிகாரிகள் அதற்கு இடமளிக்கவில்லை. தனது பெயர் இந்தச் சபையில் பிரயோகிக்கப்பட்டதால் அதற்கு விளக்கமளிக்க வேண்டுமெனத் தொடர்ந்து வாதிட்டார். இது உங்களுக்கான மன்றமல்ல என்று கூட்டத்தை நடத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த சரத் வீரசேகர, நீங்கள் புலம்பெயர் பிரதிநிதிக்குச் சந்தர்ப்பம் அளித்துவிட்டு ஏன் எனக்குச் சந்தர்ப்பம் தராமல் இருக்கின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். கூட்டத்தை நடத்திய அதிகாரிகள் கருத்து வெளியிட சந்தர்ப்பம் வழங்க முடியாது என்று சரத் வீரசேகரவிடம் திட்டவட்டமாகக் கூறினர்.

இதன் பின்னர் அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார். (5)

## முஸ்லிம்கள் மீதான வன்முறை ஐ.நாவில் அறிக்கை கையளிப்பு

இலங்கையில் இடம்பெற்றுவரும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து, யாழ். பன்னாட்டு முஸ்லிம் சமூக அமைப்பின் பங்களிப்புடன், சிறுபான்மையினர் உரிமைகளுக்கான பன்னாட்டுக் குழுமம், ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் 37ஆவது ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில், கடந்த புதன்கிழமை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 2015ஆம் ஆண்டு, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து அண்மைய கண்டி வன்முறை வரை ஆவணப்படுத்தப்பட்ட சுமார் 32 பக்கங்கள் கொண்ட விரிவான அறிக்கையையே கையளித்துள்ளது. (5)

அட! அப்படியா சங்கதி!!

### கட்டுநாயக்கவில் சிக்கிய முக்கியஸ்தர்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஜப்பான் செல்ல முயன்ற முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பு கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் பெரும் சிக்கலில் மாட்டினார் எனக் கேள்வி. இந்த முக்கியஸ்தரின் கடவுச்சீட்டு ஏதோ ஒரு காரணத்துக்காக முடக்கப்பட்டிருந்ததாம். இதனால் அவரை வானூர்தி நிலையத்தின் உள்ளே செல்ல அனுமதிக்க முடியாதென அதிகாரிகள் கூறியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் அரச தலைவர் அலுவலக அதிகாரிகளின் தலையீட்டினால் இந்தப் பிரமுகரின் கடவுச்சீட்டைச் சில நிபந்தனைகளின் அடிப்படையில் விடுவிக்கக் குடிவரவுக் குடியகல்வு அதிகாரிகள் தீர்மானித்தனராம்.

## ஜூலை இனக் கலவரத்தை மூத்தோர்கள் நடத்தினர்


### *கண்டிக் கலவரத்தை இளையோர் நடத்தினர் என்கிறார் ரணில்*

கொழும்பு, மார்ச் 17

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை மூத்தவர்கள்தான் முன்னின்று செய்தார்கள். இன்று கண்டியில் வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் 15 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளம் சமூகத்தினர்தான். இவர்கள் முகநூல், புலனம் (வட்ஸ் அப்) போன்றவற்றால்தான் தூண்டப்பட்டுள்ளனர்.

இவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளை உடன் வகுக்க வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் முஸ்லிம் சிவில் சமூகத்தினருடன் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



இந்தச் சந்திப்பில் ரணில் மேலும் தெரிவித்ததாவது:

கண்டியில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டபோது முழுமையாகச் சேதமாக்கப்பட்ட மூன்று பள்ளிவாசல்களைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அவற்றை உடன் மறுசீரமைப்புச் செய்யவும் பாதிக்கப்பட்ட சகல மக்களும் உடனடியாகத் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்பவும் தேவையான நிதியை வழங்குவதற்கு நான் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளேன். பாதிப்புக்கள் தொடர்பான முழுமையான மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன் இதற்கான பணிகளை நாம் மேற்கொள்வோம்.

இந்த வன்முறைகளின் பின்னணியில் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்கு வகித்துள்ளன.

வன்முறைகள் ஏற்படாதவாறு பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குத் தேவையான உத்தரவுகள் உரிய இடங்களில் இருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை சில இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு செய்தவர்கள் யார்? என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் - என்றார். (5.61)

### பசிலுக்கு எதிரான மோசடி வழக்கு மே 3இல் சாட்சியப் பதிவு

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச உட்பட நால்வருக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சியப் பதிவை எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதிக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று ஒத்திவைத்தது.

கூரைத்தகடு பகிர்ந்தளிக்கும் விடயத்தில், 2 ஆயிரத்து 991 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில், பசில் ராஜபக்ச உள்ளிட்ட நால்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு, நீதிபதி ஆர். குருசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பசில் ராஜபக்ச சார்பில் முன்னிலையாகியிருந்த அரச தலைவர் சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க, பசில் உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியுள்ளதால் மேலதிக சாட்சிய விசாரணைக்குப் பிறிதொரு தினத்தை வழங்குமாறு கோரியதையடுத்தே மேற்குறிப்பிட்ட திகதி அறிவிக்கப்பட்டது. (5)

## காஷ்மீர் மகளிர் ரக்பி அணிக்கு நாமல் பயிற்சியளிக்கவுள்ளார்



கொழும்பு, மார்ச் 17

இந்தியாவின் காஷ்மீர் மாநிலப் பெண்கள் ரக்பி அணிக்குப் பயிற்சிகளை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் றக்பி விளையாட்டு வீரருமான நாமல் தெரிவித்துள்ளார். த ஹிந்துப் பத்திரிகை இது தொடர்பான செய்தியை வெளியிட்டுள்ளது.

"இலங்கையின் மூத்த றக்பி பயிற்சியாளரான றொனி இப்ராஹிமிடம் இது பற்றிப் பேச்சு நடத்தியுள்ளேன். காஷ்மீர் இளம் றக்பி அணிக்கு இந்த உதவியை வழங்கத் தயாராக இருக்கின்றோம்" என்று நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.

றக்பி அணிக்குத் தேவையான உதவிகளை வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச எதிர்வரும் மே மாதம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

பயிற்சிகளை நடத்துவது குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். காஷ்மீர் நிலமை தொடர்பில் கவனம் செலுத்தும் போது விளையாட்டுக்களுடன் சம்பந்தப்படுவதன் மூலம் பெரிய விடயம் ஒன்றைச் செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

காஷ்மீர் பெண்கள் றக்பி அணிக்குப் பயிற்சியளிக்க முன்வந்துள்ளமை தொடர்பில் முதலமைச்சர் மெஹபூபா முப்பிட், நாமல் ராஜபக்சவுக்கு நன்றி தெரிவித்தார். (5)

புதுக்குடியிருப்பில் சிவில் பாதுகாப்பு பிரிவினர் வசமுள்ள

# 200 ஏக்கர் காணியை பிரதேச செயலகம் கையகப்படுத்த தீர்மானம்

**முல்லைத்தீவு, மார்ச், 17**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினரால் அபகரிக்கப்பட்டு பண்ணை அமைக்கப்பட்டுள்ள 200 ஏக்கர் காணியை பிரதேச செயலகம் கையகப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பழைய வேணாவில் பகுதியில் 200 ஏக்கர் காணியில் பயிர் செய்கை மேற்கொள்ள முடியாதவாறு 68ஆவது படைப் பிரிவினர் நிலை கொண்டுள்ளார்கள்.

அங்கு சிவில் பாதுகாப்புப் படையினர் சிறு பண்ணை ஒன்றினையும் அமைத்துள்ளார்கள். எனவே படையினர் அந்தக் காணியை விடுவித்து பயிர்செய்கைக்கு உதவ வேண்டும் என்று கூட்டத்துக்கு வருகை தந்த விவசாயி கள், பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனவே அந்தக் காணி தொடர்பில் பேசப்பட்டு காணி எந்தத் திணைக்களத்தின் கீழ் உள்ளது என்று வினவப்பட்டது. எனினும் அந்தக் காணியில் நிலை கொண்டுள்ள சிவில் பாதுகாப்புப் திணைக்களத்தின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டத்துக்கு வருகை தராத காரணத்தால் குறித்த காணி எந்தப் பகுதித் திணைக்களத்தின் கீழ் இருக்கின்றது என்று தெரியாத நிலை ஏற்பட்டது.

68ஆவது படையினரிடம் காணி தொடர்பில் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் தங்களிள் கீழ் இல்லை என்றனர். சிவில்பாதுகாப்பு திணைக்களத்தினைச் சார்ந்தவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் தெரியாது என்றனர்.

எனவே அந்தக் காணியினை பிரதேச செயலகம் கையகப்படுத்தி அதற்கான அபிவிருத்தியினை செய்யவேண்டும் என இணைத்தலைவர் தெரிவித்தார். இது தீர்மானமாகவும் எடுக்கப்பட்டது.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ள காணிகள் அனைத்தும் அதன் அளவுகளை உத்தியோக பூர்வமாக பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கவேண்டும் அவ்வாறு ஒப்படைத்தால் தான் குறித்த பகுதியில் யாருடைய காணி யாருடைய பாதுகாப்பில் இருக்கின்றது என்று தெரியவரும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் குறிப்பிட்டார். (21-ரி3)

---

கரந்தாய் காணிப் பிரச்சினை:

## காணி ஆணைக்குழுவிடம் விளக்கம் கேட்டு கடிதம்

### யாழ்ப்பாணம் மனித உரிமைக்குழுவால் அனுப்பி வைப்பு

கிளிநொச்சி மார் 17

பளை கரந்தாய் காணி 14 நாள்களுக்குள் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் வழங்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகின்றபோதும் இதுவரை ஏன் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவால், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு விளக்கம் கேட்டு கடந்த வாரம் கடிதம் அனுப்பபப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே கரந்தாய் கிராமம் ஆகும். போர் நிறைவடைந்ததன் பின்னர் குறித்த கிராமத்தில் குடியேறியிருந்த மக்களை தென்னைப் பயிர்ச்செய்கை சபையினர் அடாவடியாக அந்த இடத்தில் இருந்து வெளியேற்றியிருந்தனர்.

இந்தச் சம்பவம் 2015ஆம் ஆண்டு இடம்பெற்றது. பளை கரந்தாய் கிராமசேவகரின் பிரிவில் 1976ஆம் ஆண்டு குடியேறிய மக்கள் இடப்பெயர்வுகளின் பின்னர் மீண்டும் 2010ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் குடியேறி இருந்தனர். முழுமையான வீட்டுத்திட்டங்கள் கிடைக்காத காரணத்தால் சாதாரண குடிசைகளில் தமது வாழ்கையை நடத்தி வந்தனர்

மீண்டும் இறுதிப்போரின் போது இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகள், வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர். போரின் பின்னர் அந்தப் பகுதிக்குள் வந்த தென்னை பயிர்ச் செய்கை சபையினர் மக்களின் காணிகளை உள்ளடக்கி வேலிகளை அமைத்து அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை அறிந்த மக்கள் மீண்டும் தங்களுடைய காணிகளில் தறப்பாலால் சாதாரண கொட்டில்கள் அமைத்து தங்கியிருந்தனர். எனினும் கடந்த 2015ஆம் ஆண்டு அந்தப் பகுதிக்குள் வந்த தென்னைப் பயிர்ச் செய்கையினர் அங்கு குடியிருந்த மக்களுடன் அடாவடித்தனம் செய்து பளை பொலிசாரின் உதவியுடன் குடிசைகளை அகற்றி தரைமட்டமாக்கி மக்களை வெளியேற்றினர். அதில் பலர் பளை பொலிஸாரால் கைதாகியும் இருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டவேளை அந்த காணிகள் மக்களுடைய காணிகள் ஆக இருந்தால் அதற்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டு கைது செய்யப்பட்டவர்களை மன்று விடுவித்தது.

இதனையடுத்து மக்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று பயன் கிடைக்காத நிலையில் யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். இதன் பயனாக மக்களுடைய காணிகளை இரு வாரங்களுக்குள் மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என உரிய அதிகாரிகளுக்கு யாழ்ப்பாணமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கடந்த ஜனவரி மாதம் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாட்கள் கடந்த போதும் காணிகள் கிடைக்காத நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளருடன் கலந்துரையாடலை மக்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவினை தொடர்பு கொண்டு கேட்டபோது, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம், இதுவரை ஏன் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை? அதற்கானகாரணம்என்ன? என்பது தொடர்பாக விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான பதில் கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

---

## தேசிய ரீதியில் விவசாய விஞ்ஞான அறிவுப்போட்டி

மாங்குளம் மார்ச் 17

தற்போதைய அரசின் கொள்கைகளுக்கமைய பாடசாலை மாணவர்களின் விவசாய அறிவு மற்றும் பிரயோகத் திறமைகளை விருத்திசெய்யும் வகையில் தேசிய ரீதியில் விவசாய விஞ்ஞான அறிவுக் களஞ்சியப் போட்டியை நடத்துவதற்கு மத்திய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கோட்ட மட்டப் போட்டிகளையும், மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வலய மட்டப் போட்டிகளையும், ஜூலை மாதம் 31ஆம் திகதிக் முன்னர் மாகாண மட்டப் போட்டிகளை நடத்தி பின்னர் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் அகில இலங்கை ரீதியில் போட்டிகளை நடத்தத்தீ ர்மானிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்துக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (எ-72)

---

சாதாரணதர மாணவருக்கான

## ஆள் அடையாள அட்டைகளைப் பெற 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

### அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

எதிர்வரும் டிசெம்பரில் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் தமக்கான ஆள் அடையாள அட்டைகளைக் கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும். அதற்கான விண்ணப்பப் படிவங்களை இந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும் என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வலயங்கள் ஊடாக ஆள்பதிவுத் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கான ஆள்அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

விண்ணபப்படிவங்களுடன் மாணவர்களின் புகைப்படங்களையும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படி வங்கள் பத்தரமுல்லையில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும். அது பற்றிய அறிவுறுத்தல்கள் கொண்ட சுற்றறிக்கை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் அறிவுறுத்தலைப் பின்பற்றுவதில் அக்கறையற்றுள்ளனர். அதனால் இறுதி நேரத்தில் அது பற்றிய குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அவர்களும் குழம்பி அவர்களால் மாணவர்களும் குழம்பும் நிலை முன்னைய காலங்களில் ஏற்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது என்று ஆள்பதிவுத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (எ-4)

---

## ஜன ஐக்கியம், மத நல்லிணக்கம் நல்லாட்சியில் ஏட்டளவில்தான்

### இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ,மார்ச்.17

'நல்லாட்சியில் ஜன ஐக்கியம், மத நல்லிணக்கம், ஜனநாயகம் போன்றன ஏட்டளவிலேயே காணப்படுகின்றன. நடைமுறையில் அவை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்து ஆலயங்கள், விக்கிரகங்கள் சேதமாக்கப்படுவதனூடாக அதை அறியக் கூடியதாக உள்ளது' என இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இந்து அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சமீபகாலமாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களில் அமைந்திருக்கும் இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டு வருகின்றன

இதுபோன்று சம்பவம் யாழ்ப்பாணத்திலும் இடம் பெற ஆரம்பித்திருப்பதை திட்டமிட்ட ஒரு செயலாகவே இவ்வொன்றியம் நம்புகின்றது.

மது சுதந்திரத்துக்கு விடுவிக்கப்படும் சவாலாகவே இதனைக் கருதுகின்றது.

இவ்வாறான திட்டமிட்ட குரோதச் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்குரிய பாதுகாப்பினை சகல ஆலயங்களுக்கும் வழங்கி, மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும், வாழுவதற்கான சூழலை பாதுகாப்பு அமைச்சு உருவாக்கித்தர வேண்டும்.

சேதம் விளைவித்தவர்களை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதோடு பாதிப்படைந்த ஆலயங்களுக்கு நஷ்ட ஈட்டையும் பெற்றுத்தர ஆவண செய்யுமாறு சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரவையை கோருவதென இந்து அமைப்புக்களின் ஒன்றியம் ஏகமனதாகத் தீர்மானிக்கின்றது- என்றுள்ளது. (எ)



மட்டக்களப் பட்டிருப்பு கல்வி வலயத்தின் களுதாவளை விபுலாநந்தா வித்தியாலயத்தின் பெயர்ப் பலகை திரை நீக்க நிகழ்வு நேற்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு. க.செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மண்முனை தென் எருவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.வி.திரவியராசா கலந்துகொண்டார். (ற,ரி4)

# தமிழ் இளைஞர்கள் கடத்தல்: குருகேவிடம் வாக்குமூலம்

## கோட்டை நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,மார்ச்.17

**தமிழ் இளைஞர்களை வெள்ளை வானில் கடத்தி காணாமல் போகச்செய்த வழக்கில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக ரியர் அட்மிரல் ஆனந்த குருகேயை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்நிறுத்துமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.**

எதிர்வரும் 23 ஆம் திகதி வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கொழும்பு கோட்டை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலமான 2008, 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்தி சென்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கடற்படையின் ரியர் அட்மிரல் ஆனந்த குருகே சந்தேக நபராக இனங்காணப்பட்ட நிலையில் அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவை பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையின்போது நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டிருந்தார்.

மார்ச் 5 ஆம் திகதி வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலை யாகுமாறு ஆனந்த குருகேவுக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் அவர் முன்னிலையாக வில்லை என்று நேற்றைய வழக்கு விசாரணையில் பிரசன்னமாகியிருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்தே எதிர்வரும் 23 ஆம் திகதி வாக்குமூலம் அளிப்பதற்காக ஆனந்த குருகே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என்று மீண்டும் உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இலங்கை கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கமாண்டர் டி.கே.பி தஸநாயக்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ற,ரி2)

## விவசாயியின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 17

ஊவா பரணகம, கட்டுகல்ல மெதகமவிலுள்ள குடியிருப்பு ஒன்றிலிருந்து விவசாயி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கே.பீ.டிம். டிக்கிரி பண்டா (வயது-71) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கொலைக் குற்றவாளியாக 8 வருட காலம் சிறையில் இருந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊவா பரணகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## பிக்குவின் உயிரை பறித்த கோரவிபத்து

கொழும்பு, மார்ச் 17

மெதிரிகிரிய பிசோ பண்டாரவில் நேற்று நடந்த உந்துருளி விபத்தில் பிக்கு ஒருவர் உயிரிழந்தார்.

விபத்தில் 17 வயதுடைய பிக்கு ஒருவரே உயிரிழந்தார்.

உந்துருளியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தொலைபேசிக் கம்பத்துடன் மோதியே விபத்து நடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## கல்முனையில் கலாசார விழா



மட்டக்களப்பு, மார்ச் 16

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு எனும் தொனிப்பொருளில் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த கலாசார விழா நேற்று முன்தினம் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் கே.லவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், பேராசிரியர் எஸ். மௌனகுரு, அம்பாறை மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலர் கே.விமலநாதன் மற்றும் மதகுருமார்கள் பாராட்டுப்பெற வந்திருந்த கலைஞர்கள் கல்விமான்கள் புத்திஜீவிகள் என்ப பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

## சேதனப்பசளை பயிர்ச்செய்கைக்கு சிலரது நடவடிக்கையால் பாதிப்பு

### மட்டக்களப்பு மாவட்ட செயலர் மா.உதயகுமார் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 17

இலங்கையில் வாகரை சேதனப்பசளை பயிர்ச்செய்கை மூலம் பொருள்களை உற்பத்தி செய்வதில் பிரபலம் பெற்றிருந்தது. தற்போது ஒரு சிலரது நடவடிக்கைகளால் அதற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட செயலர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கட்டுமுறிவு, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும், மதுரங்கேணி, கிரிமிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான சிறுபோக ஆரம்பக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது;

அரசதலைவரின் திட்டத்தின் கீழ் நஞ்சற்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் திட்டத்தை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இலங்கையில் வாகரை சேதனப்பசளை பயிர்ச்செய்கை மூலம் பொருள்களை உற்பத்தி செய்வதில் பிரபலம் பெற்றிருந்தது. தற்போது ஒரு சிலரது நடவடிக்கைகளால் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


அரச நிறுவனங்கள், அதன் உத்தியோகத்தர்கள், கள உத்தியோகத்தர்களிடம் இது தொடர்பில் அறிவிக்க வேண்டும். இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை விடுத்துள்ளேன்.

இதில் விவசாயத் திணைக்களம் மத்தி மற்றும் மாகாணம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், தேசிய உரச் செயலகம், விதை நெல் தர நிர்ணய் சபை, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், தென்னைப் பயிர்ச் செய்கை, பனை அபிவிருத்திச் சபை, விவசாய கமநல காப்புறுதிச் சபை, வனவளத் திணைக்களம், சமுர்த்தி, மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், நிரக இனங்கள் அபிவிருத்தி அதிகார சபை, கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்டவைகளின் கடந்த காலச் செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன. விதை நெல் விநியோகம், மானிய உர விநியோகம், நீர்ப்பாசனம் குறித்தும் வங்கிக் கடன்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. (ற-ரி4)



நச்சற்ற நாடு தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் திருகோணமலை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத்தில் உற்பத்தி செய்த பயிர்களின் அறுவடை மற்றும் பயிர்க் கன்றுகள் நேற்று உதவி ஆணையாளர் செ. புனிதகுமார் மற்றும் அலுவலர்களால் கிழக்கு மாகாண முதன்மைச் செயலாளருக்கு வழங்கப்பட்டன. (ற-ரி5)

# மகிழ்ச்சியானது பின்லாந்து



வொஷிங்டன், மார்ச் 17
உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. பின்லாந்து முதலிடம் பிடித்தது. இலங்கை 116ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி முன்னேற்றம் கண்டுள்ளது இலங்கை.
ஐக்கிய நாடுகள் சபை கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் உலகில் மிகவும் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்தப் பட்டியலில் பின்லாந்து முதலிடம் பிடித்தது. நோர்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா, நியூசிலாந்து, சுவீடன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. ஆசியாவைப் பொறுத்த வரையில் பாகிஸ்தான் 75ஆவது இடத்திலும், சீனா 86ஆவது இடத்திலும், பூட்டான் 97ஆவது இடத்திலும், நேபாளம் 101 ஆவது இடத்திலும், இலங்கை 116ஆவது இடத்திலும், இந்தியா 133ஆவது இடத்திலும் உள்ளன. (ம)




## வெள்ளை மாளிகைக்கு முன்பாக

# வெடித்தது மாணவர் போராட்டம்

வொஷிங்டன், மார்ச் 17
துப்பாக்கிப் பயன்பாட்டுக்குக் கடும் கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டு[ம்] வலியுறுத்தி அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் அமைந்துள்ள அ[மெரிக்க] அதிபரின் உத்தியோகபூர்வமான வெள்ளை மாளிகைக்கு முன்பாக பல்[லாயிரக்] கணக்கான மாணவர்கள் ஒன்றுதிரண்டு மிகப்பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




அமெரிக்காவைப் பொறுத்த வரையில், துப்பாக்கிகளை வைத்துக் கொள்வது மக்களின் உரிமையாகப் பார்க்கப்படுகிறது. இதனால் அங்கு அவ்வப்போது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் அதுசார்ந்த அசம்பாவிதங்களும் ஏற்படும். பாடசாலைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அண்மையில் புளோரிடா, டெக்சாஸ் உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பல மாணவர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து துப்பாக்கிப் பயன்பாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கண்டனக் குரல்கள் வலுத்தன. எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக இயந்திரத் துப்பாக்கிக்குத் தடை விதித்து நடவடிக்கை எடுத்தார் ட்ரம்ப். எனினும் அனைத்துத் துப்பாக்கிகளுக்கும் தடை விதிக்கப்பட வேண்டும். துப்பாகிகள் தவிர்க்க முடியாத இடங்களில் கடும் நிபந்தனைகள் பேணப்பட வேண்டும் என்று வலி[யுறுத்தி] இந்த மாணவர் போராட்டம் நடத்த[ப்பட்டுள்]ளது. பல்லாயிரக் கணக்கான மாண[வர்கள்] இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தன[ர். 'அடுத்]தது நானா?', 'சுதந்திரமான கற்றலு[க்கு] விடுங்கள்' உள்ளிட்ட வாசகங்கள் எ[ழுதப்பட்ட] பதாகைகளை ஏற்றியவாறு அவர்கள் [போராட்]டத்தில் ஈடுபட்டனர்.



# பிரிட்டனின் அதிகாரிகள் விரைவில் வெளியேறுவர்

*ரஷ்யா எச்சரிக்கை*

மொஸ்கோ, மார்ச் 17
ஊளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட தன் விவகாரத்தில், ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றிய பிரிட்டனுக்கு விரைவில் பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.
உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட தன் பின்னணியில் ரஷ்யா இல்லவேயில்லை. அந்தத் தாக்குதலில் எங்களுக்குத் தொடர்பில்லை..
பிரிட்டனின் நடவடிக்கை பொறுப்பற்றது. அடிப்படை ஆதாரங்கள் இல்லாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலடியாக ரஷ்யாவில் உள்ள பிரிட்டன் அதிகாரிகளை நாம் வெளியேற்றுவோம். விரைவில் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரஷ்ய அரசு நேற்று வெளியிட்டு அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# வெளியேறினார்கள் ரஷ்ய அதிகாரிகள்

மொஸ்கோ, மார்ச் 17
உளவாளி நஞ்சூட்டப்பட்ட விவகாரத்தில் பிரிட்டனில் பணியாற்றிய ரஷ்யத் தூதரக அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேறும்படி பிரிட்டன் உத்தரவிட்டிருந்த நிலையில், அவர்கள் அனைவரும் நேற்று ரஷ்யாவுக்குத் திரும்பினர் என்று சில பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. எனினும் தனது அதிகாரிகளை திரும்பப் பெற்ற தகவலை ரஷ்யா உறுதிப்படுத்தவில்லை.
ரஷ்யாவின் இராணுவ உளவுப் பிரிவில் பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்போல். அவருக்கு தற்போது வயது 66. இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையிடம் காட்டிக்கொடுத்தார் என்று 2004 ஆம் ஆண்டு ரஷ்யாவால் கைது செய்யப்பட்டு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். அவரை 2010ஆம் ஆண்டு மீட்டு அடைக்கலம் கொடுத்தது பிரிட்டன். சாலிஸ்பரி நகரில் அவர் வசித்துவந்தார். கடந்த 4ஆம் திகதி 33 வயதான தனது மகள் யூலியானாவுடன் மயங்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் ஸ்கிர்போலின் உடலிலும் அவரின் மகளது உடலிலும் விசம் செலுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது பிரிட்டன். இதையடுத்து தன்னிடத்தில் பணியாற்றும் ரஷ்ய தூதரக அதிகாரிகள் 23 பேரை வெளியேறும்படி உத்தரவிட்டது பிரிட்டன். ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர் செர்கெய், பிரிட்டனுக்கு வரவேண்டும் என்று ஏற்கனவே விட்டிருந்த அழைப்பையும் திரும்பப்பெற்றது.
இதையடுத்தே ரஷ்ய அதிகாரிகள் பிரிட்டனில் இருந்து நேற்று ரஷ்யாவுக்குத் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)






# ஜேர்மனி பிரிட்டனுக்கு ஆதரவு; பிரான்ஸ் நடுநிலை[மை]

பெர்லின், மார்ச் 17
உளவாளிக்கு நஞ்சூட்டப்பட்ட விவகாரத்தில் ரஷ்யாவே பின்னணியில் உள்ளது என்று தெரிவித்து பிரிட்டனுக்கு தனது ஆதரவை வழங்கியது ஜேர்மனி. இந்த விவகாரத்தில் அமெரிக்கா ஏற்கனவே பிரிட்டனின் பக்கமாகச் செயற்பட்டுவந்த நிலையில், ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற்றியமைக்கும் அது தனது வரவேற்பைத் தெரிவித்தது.
ஐரோப்பியாவில் உள்ள மற்றுமொரு வல்லமைமிக்க நாடான பிரான்ஸ், இந்த விவகார[த்தில் அவ]சரம் வேண்டாம் என்று எச்சரித்துள்ள[து. ரஷ்யா] மீது குற்றச்சாட்டுக்களை வைப்பதற்கு மேலும் சில ஆதாரங்களைப் பார்க்க வே[ண்டிய] அவசியம் என்று பிரான்ஸ் தெரிவித்து[ள்ளது].



பாக

ரவேண்டும்என்று
த்துள்ளஅமெரிக்க
பாக பல்லாயிரக்
டுபட்டனர்.



ன்று வலியுறுத்தி
ம் நடத்தப்பட்டுள்
ன மாணவர்கள்
கொடுத்தனர். 'அடுத்
ள கற்றலுக்கு வழி
ங்களஎழுதப்பட்ட
அவர்கள்போராட்
(ம)

லமை


விவகாரத்தில்அவ
ரித்துள்ளது. ரஷ்யா
ப்பதற்கு முன்னர்
ர்க்கவேண்டியது
ரிவித்துள்ளது. (ம)

## பல்கலையாக ஹுசைனின் அரண்மனை

பக்தாத், மார்ச்17
ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் உள்ள சதாம் ஹுசைனின் அரண்மனையை அமெரிக்கப் பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு ஈராக் அரசு முடிவுசெய்துள்ளது.

1979ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டுவரை ஈராக்கின் அதிபராக இருந்தவர் சதாம் ஹுசைன். அமெரிக்கஎதிர்ப்பால் பிர்பலம் ஆனார். அதுவே அவருக்கு எதிராகவும் திரும்பியது. 2003ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதே ஆண்டின் டிசெம்பர் 13ஆம் திகதி திக்ரித் நகருக்குஅருகேபாதாளஅறையில் வைத்து ஹுசைன் கைது செய்யப்பட்டார். அவர் மீது மனித உரிமைமீறல்வழக்குகள்தொடரப்பட்டன.

இந்தக்குற்றச்சாட்டுகளில்ஹுசைனுக்குச்சாவுத்தண்டனைவிதிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி அவர் தூக்கில் போடப்பட்டார். சதாம் வாழ்ந்த அரண்மனைகளில் முக்கியமானது, ரத்வானியா அரண்மனை. இந்த அரண்மனையைஅமெரிக்கப்பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு ஈராக் அரசுதற்போது அனுமதிகொடுத்துள்ளது. (ம)



## பாலம் இடிந்ததில் 6 பேர் உயிரிழப்பு

வொஷிங்டன், மார்ச்17
அமெரிக்காவின் புளோரிடா நகரில் புதிதாகக் கட்டப்பட்டுவந்த பாலமொன்று இடிந்து வீழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்தனர். புளோரிடா பன்னாட்டுப் பல்கலைக் கழகத்துக்கு அருகில் பொதுமக்கள் பாதையைக் கடப்பதற்காக அமைக்கப்பட்ட மேம்பாலமே அவ்வாறு இடிந்து வீழ்ந்தது. இந்தஅசம்பாவிதத்தில்6பேர்உயிரிழந்தனர். மேலும் 8 பேர்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)




## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

### விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
### மருத்துவ உபகரணங்கள், அலுவலகப் பொருள்களுக்கான பெறுகைகள் HSDP - 2018

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகை களினைப் பின்வருமாறு கோருகின்றது

மருத்துவ உபகரணங்கள்

| Reference No | Item | Qty | Bid Security | Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| NP/RDHS/ HSDP/ME 2018 - 08 | Theater table normal | 01 | 50,000.00 | NP/RDHS/ HSDP/ME 2018-11 | Labour beds | 04 | 45,000.00 |
| | Wall mount theater light | 01 | | | ICU Beds | 10 | |
| | | | | | Dental X-ray | 01 | |
| | | | | | Auroscope | 01 | |
| NP/RDHS/ HSDP/ME 2018 – 09 | Computerized Radiography | 01 | 30,000.00 | | | | |
| NP/RDHS/ HSDP/ME 2018 -10 | Air Rotor Hand piece 2 hole | 04 | 10,000.00 | NP/RDHS/ PSDG/ME 2018-01 | Protective Items for Incinerator room | 01 | 40,000.00 |
| | Air Rotor Hand piece 4 hole | 04 | | | Fully Automatic Hematology Analyzer | 01 | |
| | Height Measuring tape | 24 | | | | | |
| | Laryngoscopes adult | 04 | | | | | |
| | IV Stands | 20 | | | | | |
| | Ophthalmoscope | 01 | | | | | |

அலுவலகப் பொருள்கள்

| Reference No | Item | Qty | Bid Security | Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| NP/RDHS/ HSDP/OE/ 2018 – 03 | Air conditioner 18000 btu | 02 | 5,000.00 | NP/RDHS/ HSDP/ OE/ 2018 – 07 | Computer Accessories | 18 | 20,000.00 |
| NP/RDHS/ HSDP/OE/ 2018 – 04 | Airport Chair | 60 | 15,000.00 | | Printer | 15 | |
| | | | | | Laptop | 02 | |
| | | | | | Printer Colour | 01 | |
| | | | | | External Hard Disk | 04 | |
| | | | | | UPS | 04 | |
| NP/RDHS/ HSDP/OE/ 2018 – 05 | Ceiling fan | 50 | 10,000.00 | NP/RDHS/ HSDP/ OE/ 2018 -08 | Photocopy machine | 06 | 20,000.00 |
| | DVD Player | 04 | | | Refrigerator | 17 | |
| | Television 32'' LED | 04 | | | Scanner | 01 | |
| | Water Filter | 02 | | | Multimedia Projector | 01 | |
| | Digital Camera | 01 | | | | | |
| | Dustbin | 20 | | | | | |
| | Plastic Waste Collector 3 in one | 90 | | | | | |
| | Wall Clock | 05 | | | | | |
| NP/RDHS/ HSDP/OE/ 2018 – 06 | Reception Table | 02 | 5,000.00 | NP/RDHS/ HSDP/ OE/ 2018 - 09 | Generator 5kv | 02 | 40,000.00 |
| | Cupboard | 01 | | | Generator 20kv | 01 | |
| | Cloth rack | 10 | | | | | |
| | Exhaust fan | 03 | | | | | |

*ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திர பணம் ரூபா 500/-

01) தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களைப் அலுவலக நேரங்களில் (021 222 2278 / 4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

02) ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

03) நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையைக் காசாகச் செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 19.03.2018 தொடக்கம் 11.04.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

04) விலைக்கேள்விகள் **12.04.2018 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு** முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 12.04.2018 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படும். இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

(N/ 6162)(11,17)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவார்களா?

கடினமானஒருதேர்தல்முறைமைக்குள்தத்தளித்துஒருவாறுஉள்ளூராட்சிசபைகள்வெளிவந்திருக்கின்றன. அவற்றின் ஆட்சி ஆரம்பிக்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதத்தின் கடைசி வாரத்தில் இருந்து அடுத்த மாதத்தின் நடுப் பகுதி வரைக்குமான காலத்தில் ஒவ்வொருசபைகளும்தமது ஆட்சியை ஆரம்பிக்கவுள்ளன.

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு மாகாணத்தில் இயங்கிய உள்ளூராட்சி சபைகளில் நடந்த ஆட்சி மெச்சிக் கொள்ளும் தரமன்று. ஒரு சில சபைகளைத் தவிர, அனேகமாக எல்லாச் சபைகளுமே பிரச்சினைக்குரியனவாகவே இருந்தன. இவற்றில்பெரும்பாலானசபைகள், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்வசமே இருந்தன. அறுதிப்பெரும்பான்மைக்கும்அதிகமானஇடங்களைவென்றுஅந்தச்சபைகளில் எல்லாம் கூட்டமைப்பு ஆட்சியை அமைத்திருந்தது.

போருக்குப்பின்னரானசூழலில், மகிந்தராஜபக்சவின்ஒடுக்குமுறைஆட்சிக்குநடுவேநடந்ததேர்தலில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றமை தமிழர்களுக்கு ஒருவித மகிழ்ச்சிப்பெருமிதத்தையும், போர்த்தோல்வியால்ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்தான மீட்சியையும் தந்தன என்றால், கூட்டமைப்பின் ஆட்சியில் அபிவிருத்தி நோக்கிய ஆட்சி ஒன்று உள்ளூராட்சி மன்றங்களில் நடக்கும் என்கிற பெருத்த எதிர்பார்ப்பும் மக்களிடம் இருந்தது.

ஆனால், எதிர்பார்த்தபடி உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டமைப்பின் ஆட்சி சிறப்பானதாக அமையவில்லை. கூட்டமைப்பின்பங்காளிக்கட்சிகளுக்குள்ளே இருந்த குடுமிபிடிச் சண்டையில் ஆட்சி சின்னாபின்னப்பட்டு, அலங்கோலப்பட்டதுதான் மிச்சம். அரசியலில் இளைஞர்களுக்கு வாய்ப்புக்கொடுக்கப்பட வேண்டும்என்பதற்காகப்பலசபைகளில் இளைஞர்களையே சபைகளின் தவிசாளர்களாக, தலைவர்களாக ஆக்கியது கூட்டமைப்பு. ஆனால், பல சபைகளில் அதுவேமிகப்பெரும்பிரச்சினையாகமாறியது. சபைகளின் உறுப்பினர்களாக இருந்த மூத்தவர்கள் பலரால் இளையோரின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் தலைவர்கள் கொண்டு வந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குஅவர்கள்முட்டுக்கட்டைபோட்டனர். தலைவர்களாக இருந்த இளையவர்களுக்கும், சபைகளில் இருந்த மூத்தவர்களைஅரவணைத்துக்கொண்டுஆட்சியைஎப்படிக் கொண்டுநடத்துவதுஎன்றஅனுபவம்போதவில்லை. எனவே எல்லாமே எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நடந்து முடிந்தன.

ஒருவகையில்சொன்னால்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மாகாண சபை ஆட்சிக்கு வழிகாட்டிக் கொடுத்தவர்களாக உள்ளூராட்சிமன்றங்களின்கூட்டமைப்புஉறுப்பினர்களைச் சொல்லலாம். மாகாண சபையில் எப்படி கன்னைகட்டிப் பிரிந்துநின்றுகூட்டமைப்புஉறுப்பினர்கள்செயற்படுகிறார்களோ அது போன்றே உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் செயற்பட்டார்கள். எப்படி பெருபான்மையான உறுப்பினர்கள்முழுமனதோடுவிரும்பாவிட்டாலும்க.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சராகத் தொடர்கிறாரோ, அப்படியே உள்ளூராட்சி மன்றங்களிலும் நடந்தது.

சில சபைகளில் எல்லாம் கட்சியின் உத்தரவையும் மீறி கூட்டமைப்புஉறுப்பினர்களேதமதுகட்சிசார்பில்முன்வைக்கப்பட்ட, சபைகளின் வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடித்த வரலாறு உண்டு. கூட்டமைப்பின் ஆட்சியில் இருந்த சபைகளின்ஆட்சியை, கூட்டமைப்பின்ஆட்சியில்இருந்த மாகாணசபை முதலமைச்சரே கலைத்த வரலாறும் உண்டு.

இப்படிப்பட்ட ஒருபின்னணியில் இந்தத்தடவை மாகாண சபைகளில் ஆட்சி தொடங்கப் போகின்றது: இந்த முறை அனேகமானசபைகளில்எந்தக்கட்சிக்கும்தெளிவான, அறுதியான பெரும்பான்மை இல்லை. வடக்கில் மூன்று சபைகளைத்தவிர மற்றைய எல்லாச்சபைகளிலும் எந்தத்தரப்பாக இருந்தாலும், சிறுபான்மை ஆட்சியையே அமைக்க வேண்டியிருக்கிறது. அறுதிப் பெரும்பான்மை இருந்தபோதே ஆட்சியைக்கொண்டுநடத்தமுடிந்ததில்லைஎன்றவரலாற்றுப் பின்னணியில், சிறுபான்மை ஆட்சியை எப்படிக் கொண்டுநடத்தப்போகிறார்கள்என்கிறமாபெரும்கேள்வி எழுகிறது. இதற்கிடையில் சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்கான அரசியல் போட்டியும் வேறு இருக்கிறது. நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது எதிர்காலத்தை.

தமது பகுதிகளின் அபிவிருத்திக்காகவே உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி என்று, கட்சி பேதங்களைத் தாண்டி உறுப்பினர்கள் சிந்திக்காத வரையில், அவற்றின் ஆயுள் காலம் நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற கதையாகத்தான் நகரக்கூடும். தமக்கு வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருந்து அவர்களுக்கு ஆகக் குறைந்த அபிவிருத்தியையாவது செய்வதற்கு உறுப்பினர்கள் திடசங்கற்பம் பூணாத வரையில் ஆட்சியைக் கொண்டு நடத்துவது சிரமம்தான்.

# சட்டம் ஒழுங்கை முறைப்படி பேணவல்ல தலைமைத்துவமே நாட்டின் இன்றைய தேவை

ஆங்கில மொழி மூலம்:
சிலோன் ருடே (லசில்லி டி சில்வா)

தமிழில்: ஆனந்த்

“சகல மனிதர்களும் என்னுடைய பிள்ளைகளே; என்னுடைய சொந்தப்பிள்ளைகளுக்கு, நான் இந்த உலகத்திலுள்ள சகல சுக நலன்களையும், சந்தோஷத்தையும் எப்படிக்கொடுக்கவிரும்புகிறேனோ, அதேபோல, சகல மனிதர்களுக்கும் சுக நலன்களையும், சந்தோஷத்தையும் கொடுக்க விரும்புகிறேன்”

இதுமௌலியப்பேரரசர் அசோகனின்வார்த்தைகள். ஒரு கொடிய போரின், கலிங்கத்துப் போரின் முடிவில் போரின் இழப்புக்களால் மனம் வருந்தி பௌத்த மதத்தைத் தழுவிய அசோகச் சக்கரவர்த்தி அதன் பின்னர் ஒரு தெளிவான சிந்தனையுடன், பௌத்த மதக் கோட்பாடுகளுக்கமைய நீதியும், நேர்மையும் மிக்க தனது நிர்வாகத்தில் நாட்டை ஆட்சிசெய்தவர். நாட்டுமக்களுக்குஅவர்கள்விரும்பும்மதத்தைப்பின்பற்றும்சுதந்திரத்தை வழங்கியதுடன் ஒரு மதத்தை ஏனையதொரு மதத்தவர் அவமதிப்பதையும் அவர் அனுமதிக்கவில்லை. மக்களின் நலன் கருதி அவர்களுக்குச் சேவை செய்யஎண்ணிய அவர், ஒரு தந்தையைப்போலவேதனது குடிமக்களிடம்நடந்துகொண்டார். நாட்டு மக்களை மட்டுமல்ல இயற்கை, மிருகங்கள் ஏனையஜீவராசிகள் என உலகில்வாழும்சகலஉயிர்களையுமே அவர் நேசித்தார். அன்பு, பாசம், இரக்கம் என்ற சகல நற்குணங்களையும்வெளிப்படுத்துவதே அவரின் குறிக்கோளாக அமைந்திருந்தது.

### கள்வர்களே தலைவர்களாக உள்ளனர்.

இன்றுஎமதுநாட்டின்ஆட்சித் தலைவர்கள் அனைவருமே தமது ஆட்சி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். அழுகிப் போன தக்காளியைப்போன்று, அவர்கள்பயங்கரமான குணாதிசயங்களைக் கொண்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர், தலைமை அமைச்சர் ரணில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, நாடாளுமன்றஉறுப்பினர்கள்அனைவரும் தத்தம் தொகுதிகளின் தேவைகள் குறித்து அறிந்து செயற்படஅவர்களதுசம்பளம் அதிகரிக்கப்படுவதுடன், அவர்களுக்கு வாகன வசதிகளும் வழங்கப்பட வேண்டுமென்பதை தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தார். நாட்டு மக்களது சுபீட்ச வாழ்வு குறித்துப் பொறுப்புடன்செயல்படுவதற்காகத்தான்நாங்கள் இவர்களை2015ஆம்ஆண்டில்நாடாளுமன்றத்துக்குத்தெரிவுசெய்துஅனுப்பியிருந்தோம். இந்த அரசியல்வாதிகள் பொதுமக்களின் பணத்தை எப்படி எப்படியெல்லாம் விரயம் செய்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் வெகுசன ஊடகங்களுக்குநாம்நன்றிதெரிவித்தாகவேண்டும். இந்த ஊழல் அரசியல்வாதிகளின் நெறிமுறையற்ற செயற்பாடுகள்பற்றியும்ஊடகங்கள்தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. தியோடொர் ரூஸ்வெல்ட் என்ற முன்னாள் அமெரிக்க அரச தலைவர் “கல்வி அறிவில்லாத ஒருவன் ஒரு புகையிரதத்தின்பொதிகள்அறைப்பகுதியில் மட்டுமேதிருடஎத்தனிப்பான். ஆனால் பல்கலைக்கழகத்தில் கற்றவனோ, அந்தப் புகையிரதம் பயணிக்கும் தண்டவாளங்களையே திருடிவிடக்கூடியவன்” எனத் தெரிவித்திருந்தார்.

1976 ஆம் ஆண்டில் ஜப்பானின் தலைமை அமைச்சராக இருந்த தனக காக்குயி புதிய வானூர்திகள்கொள்வனவுவிவகாரத்தில்கையூட்டுப் பெற்றதான அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. அதேபோன்று 1980களின்பிற்பகுதியில்ஜப்பானில்தலைமைஅமைச்சராகப் பதவி வகித்த தக்சிரா நொபுறுவும் கையூட்டுப் பெற்றதான குற்றச்சாட்டால் தமது பதவியிலிருந்துவிலகிக்கொள்ளநேர்ந்தது. ஆனால் இலங்கையின்சூழல், கொலை, கொள்ளை, களவுஎன்ற சகலசமூகவிரோதச்செயல்களையும்புரிந்துவிட்டு பல தசாப்தங்களாக சீமான்களாக வாழக்கூடிய வாய்ப்பை எமது அரசியல்வாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. சிலர் அமைச்சர்களாகவும் வலம் வருகின்றனர். இவர்கள் எந்த வித்திலும் தத்தமது பதவிகளை விட்டு விலகமாட்டார்கள் என்பதுடன், தேவையானபோது அரசியல் குற்றவாளிகளையும் பாதுகாக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகள் என்று தெரிந்தும் அவர்கள் மேல்



நடவடிக்கை எடுக்க முடியாத தர்மசங்கடமான நிலையிலேயே பொலிஸ் துறை செயற்பட நேர்ந்துள்ளது. ஆகவேமனசாட்சியில்லாமல்நாட்டைச் சுரண்டும்இத்தகைய அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளுக்குஎதிராக்எதுவுமேசெய்யமுடியாத அவலநிலையிலேயே நாடு உள்ளது. இந்த அரசியல்வாதிகள்அதிகாரத்தைத்தக்கவைத்துக்கொள்வதற்காக எதை வேண்டுமானாலும் செய்யக் கூடியவர்கள். இவர்கள்மதம், இனம்என்றுஎதையுமே விட்டு வைக்காமல், அவற்றின் மூலமாக நாட்டில்குரோதத்தைவளர்த்துபிரிவினைவாதத்தைத்தூண்டிவிட்டு, அதிகாரத்தைஎந்தவழியிலாவது தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன்செயல்படுபவர்கள். பேரரசர்அசோகரைப்போல இந்த அரசியல்வாதிகள் சமய நெறி

முறைகளுக்கமைய ஆட்சியை நடத்தினால் மதங்கள் குறித்து அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. சமூகவிரோத செயல்களை அனுமதிக்கும் எந்தவொரு மதமும் ஒரு நல்ல மதமாகக் கருதப்படமுடியாதது. பௌத்ததர்மத்தின்படி, அரசியல்நிர்வாகத்துக்குக்கூடபலவிதிமுறைகள், வரையறைகள் உள்ளன. இலங்கையிலுள்ளஅரசியல்வாதிகள்சட்டத்தைக்குழிதோண்டிபுதைத்து விட்டார்கள். கடந்த இரண்டு த சாப்தங்களாக இலங்கையின் அரசியல்வாதிகள் அரசியலை ஒரு சாக்கடையாக்கிவிட்டார்கள். இந்த அரசியல்வாதிகள் சமுதாயத்தையோ, நீதியையோ மதிக்கவில்லை.

தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவும்கூடஇதற்குவிதிவிலக்கல்ல. அவர் ஒரு நல்ல தலைவராகச் செயல்படவில்லை. பொதுமக்களின் நாடித்துடிப்பை உணரக்கூடிய தலைவர்களே நாட்டுக்கு இன்று தேவைப்படுகின்றனர்.

**இந்தியா, இலங்கைக்கு ஒரு உதாரணம்.**

1905 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து பங்களாதேஷ் வேறாகப் பிரிக்கப்படவேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்பட்ட பொழுது, முழு இந்தியர்களுமே அந்த யோசனையை எதிர்த்தனர். அந்தஎதிர்ப்புநடவடிக்கைகளுக்குத்தலைமைதாங்கியவர் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர். இந்தியாவில் மன்னர் அக்பரின் ஆட்சியில்அவரதுமதம்சம்பந்தமானகொள்கைநிலைப்பாட்டால் நாட்டில்சமாதானம்நிலவியது. அந்தப்புரத்திலிருந்ததமது இந்து அக்பர் மனைவியருக்கு அவர்களுடைய மதவழிபாடுகளை தொடர அனுமதித்திருந்தார். எல்லாப் பெரிய தலைவர்களுமே, மனித நேயம் என்பதையே முன்னிலைப்படுத்தி இனம், மதம் என்ற எந்த வேறுபாடுகளுமின்றி சகலரும் மனிதர்களே என்ற ஒரே நிலைப்பாட்டையே வற்புறுத்தி வந்துள்ளனர்.

**அரசமைப்பு மாற்றங்களே அரசியல் பின்னடைவுகளுக்குக் காரணமாயின**

1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு மாற்றங்களான நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் நடைமுறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் என்பவையே சகல வியாதிகளுக்கும் மூலகாரணமாக அமைந்தன. ஜே.ஆரினது தலைமையிலான அரசு, தேசிய மட்டத்தில் பேரம் பேசும் கூட்டணி அரசுக்குள் அமைவதற்கு வழிவகுத்தது. ஜே. ஆரின் தலைமையிலான அரசினால்தான்நயவஞ்சகமாக, சுயநலம்காரணமாக மதம் அரசியலுக்குள் புகுத்தப்பட்டது. அது தொடர்ந்து கட்சிகள் மத்தியில்இனவாதச்சிந்தனைகளைவளர்த்தெடுத்தது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரசியல்வாதிகள் சுயஇலாபம் கருதிஇனங்களுக்கிடையிலானஒருபிரிவினைவாதத்தை உருவாக்கியமையினாலேயேதான் இன்று மதம் என்ற ஒன்று அரசியல் விஸ்வருபம் எடுத்துவிட்டுள்ளது.

எங்களதுஎதிர்காலசந்ததியினரதுநன்மைகருதிஇனப்பாகுபாடு என்பதைஅரசியலிலிருந்துதடைசெய்யும்சட்டம்உருவாக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இருந்த மூன்று பிரதான கட்சிகளும் இனவாதத்தை வெளிப்படுத்துபவையாகவே செயற்பட்டு வந்துள்ளன. எங்களுடையஎதிர்காலம், தரமானஅரசியல்வாதிகளின் கையிலேயேயுள்ளது. தலைவர்கள் சுயநலத்தை கைவிட்டு பொதுநல நோக்குடன் அரசியலைத் தொடர்ந்தால் மட்டுமே இந்த நாடு தனது இலக்கை அடைய முடியும். தலைவர்களைத்தெரிவுசெய்வதில்சுதந்திரமாகச்செயல்படுவதுமட்டுமல்லாது, சகல சமூகங்களிலிருந்தும் இளம் தலைவர்களை உருவாக்க வேண்டும்.

சுயநலஅரசியல்வாதிகள்தாம்சார்ந்தகட்சியைமட்டுமல்ல, எங்கள்நாட்டையே அழிவுப்பாதையில் கொண்டுசென்று விடுவார்கள். 30 தேர்தல்களில் தோல்வியைத் தழுவிய கட்சியின் தலைவரானரணில்விக்கிரமசிங்கஇன்னமும்கூடஅதன்தலைவராக இருக்கின்றார்.

சட்டம் ஒழுங்கை முறைப்படி நடைமுறைப்படுத்தி நாட்டை நல்வழியில் இட்டுச் சென்று முன்னேற்றம் காணவைக்கத்தக்க அரசியல்தலைமைத்துவமொன்றேஇன்றையநாட்டின்அவசிய தேவையாகும்.

# மகிந்த வழியில்தான் கோத்தாவின் பயணம்



இந்துமதி

சமீப நாள்களாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவையும், அரச தலைவர் பதவியையும் இணைத்து செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அடுத்த அரச தலைவருக்கானதேர்தலில்அவர்போட்டியிடுவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோத்தபாயவும்இந்தத்தகவல்களைமறுக்கவில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்கக் குடியுரிமையைத் துறப்பதற்குத் தாம் தயாராக உள்ளதாக அவர் கூறியுள்ளதை அவரது சம்மதமாகவே கொள்ள முடியும். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் மகிந்த ராஜபக்ச இன்னுமொரு தடவை அரசதலைவருக்கானதேர்தலில்போட்டியிடமுடியாது என்பதால், அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை தேர்தல் களத்தில் இறக்கவேண்டிய தேவை அவரது பரம்பரையினருக்கு எழுந்துள்ளது. மகிந்த குடும்பத்தினரும் அவரைச் சார்ந்தவர்களும் தம்மீது சுமத்தப்பட்டுள்ளகுற்றச்சாட்டுக்களிலிருந்துதப்பிக்கவேண்டுமானால்மகிந்தவுக்குநெருக்கமானஒருவர்நாட்டின்உயர் பதவியை வகிப்பது அவசியமாகின்றது.

**கோத்தபாய ராஜபக்சவும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளவரே**

மகிந்த மீது நிதி மோசடி உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கோத்தபாயவும்குற்றம்சாட்டப்பட்ட ஒருவர்தான். நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்துதவிர்க்கும்பொருட்டுநீதிமன்றத்தின்உதவியை நாடவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார். அவன்காட். ஆயுதக் கப்பல் விவகாரத்தில் அவரொரு முக்கிய குற்றவாளியாகக் கருதப்படுகின்றார். கோத்தபாய விசாரணைகளுக்கு முகம்கொடுத்து தம்மையொரு நிரபராதியென நிரூபிக்க வேண்டியதைத் தவிர்த்து குறுக்கு வழியால் தப்பிக்க முயற்சி செய்கின்றார். அவருக்கு ஆதரவு தெரிவிக்கின்ற மகிந்த குடும்பத்தினரும் குற்றச்சாட்டப்பட்டவர்கள்தான். இந்த நிலையில் கோத்தபாய நாட்டின் அதியுயர் பதவியை வகிப்பதற்குப் பொருத்தமானவரா? என்ற வினா எழாமலில்லை.

இவை யாவற்றுக்கும் மேலாக இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அப்போதைய அரச தலைவர் என்ற வகையில் படைகளின் பிரதம தளபதிப் பதவிக்கும் உரித்தாகவிருந்த மகிந்தவும், பாதுகாப்புச் செயலர் என்ற வகையில் கோத்தபாயவும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர். மேற்படி விடயங்கள் தொடர்பாக படையினர் மீது குற்றம் சுமத்துவதையும் இவை தொடர்பாக பன்னாட்டு நீதிபதிகளின் உதவியுடன் விசாரணை இடம்பெறுதையும்-கோத்தபாயவும் விரும்பவில்லை. மகிந்த இதற்குக்கடுமையானஎதிர்ப்பைத்தொடர்ந்துவெளியிட்டுவருகின்றார். முறையான விசாரணைகள் இடம்பெற்றுபடையினர்மீதானகுற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமாயின், மகிந்த மற்றும் கோத்தபாய கூட குற்றவாளிகளென அடையாளம் காணப்படுவதற்கான சாத்தியமும் உள்ளது. இத்தகைய ஒருவர் நாட்டின் அரச தலைவர் பதவியை வகிப்பதற்குத் தகுதியானவரெனக் கருதமுடியவில்லை.

**பௌத்த மதத் தலைவர்களது அரசியல் தலையீட்டை ஆதரிக்கும் கோத்தபாய**

தம்மையொரு பௌத்த சிங்களவரென அடையாளம் காட்டுவதற்கு கோத்தபாய ஒருபோதுமே பின்நிற்பதில்லை. பௌத்ததேரர்களின்வழிகாட்டலின்கீழேயே அரசுசெயற்படவேண்டுமெனஅவர்வலியுறுத்திக்கூறி வருகிறார். அண்மையில் அவர் தெரிவித்த கருத்து கவனத்துக்குரியது. "மகாநாயக்க தேரர்களைத் தற்போதைய அரசு மதிப்பதில்லை. அவர்களின் ஆலோசனைகளும்கருத்தில்கொள்ளப்படுவதில்லை. காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவைநிறைவேற்றவேண்டாமெனஅவர்கள்கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை" என கோத்தபாய கூறியிருந்தமை அவரது மனவுணர்வை வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது.

**பௌத்த மதத் தலைவர்களின் தலையீடு இலங்கை அரசியலில் தொடர்ந்து இருந்துள்ளது**

மகாநாயக்கதேரர்கள்சிறுபான்மையினருக்குஎதிரான கருத்துக்களைக்கொண்டிருப்பதைஅவதானிக்கமுடிகின்றது. சிலபௌத்ததேரர்கள்போரைஊக்குவிக்கும் முகமாக நடந்து கொண்டதை நாம் மறக்க முடியாது. அகிம்சையைப் போதிக்க வேண்டிய அவர்கள், ][ போரைஊக்குவிக்கும்முகமாகபடையினருக்குஆசீர்வாதம் வழங்கியதை எந்த வகையில்தான் ஏற்றுக்கொள்ள முடியும்? புதிய அரசமைப்பின் உருவாக்கம் கூட மகாநாயக்கர்களின் எதிர்ப்பின் காரணமாகவே ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இனிமேல் இது உருவாகுவதற்கான சாத்தியம் இல்லாமற்கூடப்போகலாம். தென்பகுதி மக்கள் எப்போதுமே இனவாதத்துக்கு ஆதரவு அளிக்கும்வகையில்நடந்துகொள்கின்றனர். அவர்களிடையே காணப்படுகின்ற கல்விமான்கள் சிலர் இனவாதிகளாகத்தோற்றம்பெற்றிருக்கிறார்கள். இவர்கள் வழங்குகின்ற தவறான ஆலோசனைகள் சிறுபான்மையினருக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. ஒருவேளை கோத்தபாய அடுத்த அரசதலைவராக ஆவதற்கான வாய்ப்பு ஏற்படுமானால், அவரது ஆட்சி கூட மகிந்தவின் ஆட்சியை நினைவுபடுத்துவ தாகவே அமையுமென்பதில் ஐய

## ஆசிரியருக்கான கடிதம்

### சீரற்ற நிலையில் செயற்படும் நானாட்டான் பிரதேச சபை- முருங்கன் உப அலுவலகம்

முருங்கன்உபஅலுவலகத்தின்நிர்வாகத்தின்கீழ்இயங்கும்நூலகத்தின்செயற்பாடுகள்மிக மோசமான வகையில் அமைந்துள்ளன. இங்கு ஒரு நூலகரும் நூலக உதவியாளரொருவரும்கடமையாற்றிவந்தநிலையில், அண்மையில்நூலகஉதவியாளர்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதுவரை பதில் நியமனம் எதுவும் செய்யப்படவில்லை. இதுவரைகாலமும் தினசரிப் பத்திரிகைகள் நூலக உதவியாளர் மூலமாகவே நானாட்டானிலிருந்து முருங்கன் உபஅலுவலக நூலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

தற்போதுதினசரிப்பத்திரிகைகள்எடுத்துவரப்படுவதில்லை. இதனால்வாசகர்கள்பத்திரிகைள் வாசிக்க வாய்ப்பற்றுப் போயுள்ளது. நூலகத்தில் பழைய சஞ்சிகைகள், புத்தகங்களே உள்ளன. புதியபுத்தகங்கள்கொள்வனவுசெய்யப்படுவதில்லை. வாசகர்வட்டநிர்வாகத்தினர் பலதடவைகள்இதுதொடர்பாகமுறைப்பாடுகள்மேற்கொண்டும்எதுவிதநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஏ.டி. தேவதாசன், முருங்கன்.

### அரசியலில் கோமாளிகளும் உள்ளனரே!

இன, மத வாதக் கடுங்கோட்பாட்டாளர்கள், ஊழல்வாதிகள், தத்தமது இருப்பைத் தக்கவைக்க, வசதிவாய்ப்புக்களைப்பெருக்கவெனக்கட்சிதாவுவோர்எனப்பல்வகையினரும் அரசியல் அரங்கில் செயற்படுவது இன்றைய அரசியல் கலாசாரம் என்றாகிவிட்டுள்ளது. இந்தநிலையில் அரசியலில் ஒருநிலையான கொள்கை கோட்பாடில்லாமல் மனம்போன விதத்தில் கருத்து வெளியிட்டுத் தம்மைக் கோமாளிகளாக வெளிப்படுத்திக் கொள்ளும் தரப்பினர்களைச்சேர்ந்ததொருஅரசியல்கோமாளியேஇந்தியபாரதியஜனதாக்கட்சியின் உறுப்பினர் சுப்பிரமணிய சுவாமி.

மனிசனுக்கு இந்திய அரசியலைவிட, இலங்கை அரசியல் குறித்தே நாளும் பொழுதும் சிந்தனை. எப்போதுமே இலங்கை அரசியலில் மூக்கை நுழைக்கும் சுவாமி, அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடக் கூடுமென எதிர்பார்க்கப்படும். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவை இந்திய அரசு ஆதரித்து அவரை வெற்றி பெற வைக்க உதவ வேண்டும் என இப்போது திருவாய் மலர்ந்தருளியுள்ளார். வேண்டுமானால் பரபரப்புச் செய்திக்காக ஊடகங்கள் சுவாமியின் கருத்தைப்பெரிதுபடுத்தக்கூடுமே தவிர, இலங்கைத் தமிழ்மக்களில்எவரும்இந்தஅரசியல்கோமாளியின்கருத்துக்களைதுட்டுக்கும்அசட்டை செய்யப்போவதில்லை. இந்தச்சுவாமி ஒரு தமிழராக இருப்பது குறித்து நாமெல்லோரும் வெட்கப்பட வேண்டும்.

ப. சிவராம், கொக்குவில்.

see more news in NEWUTHAYAN.COM

## பத்தி எழுத்து

### அமைதியை நிலைநாட்டுதல் அரசின் தலையாய கடமை

கடந்த காலங்களில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்களை நினைவுபடுத்தும் வகையில் கண்டியில் அண்மையில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்கள் அமைந்துள்ளன. பொலிஸாரும், முப்படையினரும் களத்தில் இறக்கப்பட்ட போதிலும் கலவரம் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டு வரப்படாமல் போனமை அரசின் இயலாத தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் இன ரீதியான மோதல்கள் புதிதொன்றல்ல. காலத்துக்குக் காலம் அவை இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளன. இவற்றுள் அநேகமானவை தமிழர்களுக்கு எதிரானவை. தற்பொழுது முஸ்லிம் மக்களுக்கு எதிராக அவை இடம் பெறுகின்றன.

“போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சிங்களவர்களுக்குச் சார்பாக உளவு வேலைகளில் ஈடுபட்ட முஸ்லிம்களுக்கு இந்தக்கதி நேர்ந்திருக்கக் கூடாது” என்று கூட்டுப் படைகளின் பிரதானி கூறியதைச் சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. இதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பார்ப்பதற்கான தருணம் இதுவல்ல. என்றாலும் இதில் உண்மை இருக்குமானால் தமிழர்கள் இதை எந்த வகையிலும் மன்னிக்க மாட்டார்கள். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே பகையுணர்வை ஏற்படுத்துவதற்காகவும் படைகளின் பிரதானி இவ்வாறு கூறியிருக்கலாமெனவும், இன்னொரு கோணத்தில் கருதுவதற்கும் இடமுண்டு. ஆனால் உண்மை எது? பொய் எது? என்பது சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். முஸ்லிம் அரசியல்வாதிகள் பெரும்பான்மையின அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதையே விரும்புகின்றனர். பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால்தான் தமிழர்களையும், முஸ்லிம்களையும் அரசியலில் ஒன்றிணைப்பதற்கான தந்தை செல்வாவின். கனவு பொய்த்துப் போனது.

சுயநலம் கொண்ட அரசியல்வாதிகள் தமது நன்மைக்காக இந்த இரண்டு இனங்களும் ஐக்கியப்படுவதை விரும்புவதில்லை. இதனால் எத்தனையோ பாதகமான விளைவுகள் ஏற்பட்டுவிட்டன. எதிர்காலத்திலும் இது தொடரவே செய்யும். என்னதான் இருந்த போதிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நீதிகொடுக்கப்பட வேண்டும். அரசின் தலையாய கடமையும் அதுவே.



## நலம் தரும் ராம நவமி விரதம்

ஒரு வில், ஒரு சொல், ஒரு இல் என்று வாழ்ந்தவன் ராமபிரான். தெய்வமாக இருப்பவன் மனிதனாக அவதரித்து ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்து காட்டியவன். ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தவனுடைய பெருமையே ராமாயணம் என்று எழுதப் பெற்றது.

ராமன் காட்டிய வழியே நடக்க வேண்டும் என்று தான் இல்லம்தோறும் ராமாயணம் படிப்பதை பலரும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ராமர் பிறப்பு அன்று ஆலய வழிபாட்டில் கலந்துகொண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ராமர் சீதை திருமணம் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு, அந்தக் கதைகளைக் கேட்டால் திருமண பாக்கியம் கை கூடும்.

ராமர் நவமி திதியில் பிறந்ததால் அன்றைய தினம் 'ராமநவமி' என்று அழைக்கப்படுகிறது. அந்தத் திருநாள் (25.3.2018 ஞாயிற்றுக்கிழமை) வருகிறது. அன்றைய தினம் ராமபிரானை விரதமிருந்து வழிபடுவதன் மூலமும், ராமருடன் இணைந்து சீதா, லட்சுமணர், அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் லட்சியங்கள் நிறைவேறும். அனுமன் வழிபாட்டால் தம்பதியர் ஒற்றுமை உருவாகும்.

## கடவுளின் அருளும், சகல செல்வமும் தரும் கோ பூஜை



தானம் என்பது புண்ணியம் கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுவதாகும். கோ பூஜையானது பலருடைய வாழ்வில் சந்தோசத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையில் செய்யப்படுகிறது.

காமதேனு, கேட்டதை எல்லாம் தருகின்ற தெய்வீக சக்தி உடைய தெய்வத்தின் மறுஉருவம். உடல் பசுவைப் போன்றும், முகம் தாய் போன்றும் காட்சி தருபவள் காமதேனு. தாய் போல் கருணை உடையவள் காமதேனு. தேவர்களும், அசுரர்களும் சாகா வரம் கிடைக்க வேண்டும் என்று அமிர்தம் கடைந்தபோது கடைசியில் கிடைத்தது காமதேனு.

மகா சக்தியின் மறு உருவம்தான் பசு. காமம் என்பது ஆசை. தேனு என்றால் நிறைவேற்றுபவள் என்று அர்த்தம். நாம் நினைக்கிற அனைத்தையும் நிவர்த்தி செய்பவள்தான் காமதேனு. கோமாதாவை வளர்க்கும்போது, அது எம்மை வளர்க்கும். தெய்வபலம் குறையும்போது கஷ்டங்கள் வரும். தெய்வத்தின் சக்தியும், அனுக்கிரகமும் இருக்கும்போது கஷ்டங்கள் மறைந்து விடும்.

கோமாதாவுக்கு பூஜை செய்யும் இடத்தில் சகல சந்தோஷங்கள் கிடைக்கும். கோமாதாவை ஆராதிக்கும்போது அனைத்து தேவதைகளும் சந்தோஷமாக இருக்கும். பசு, லட்சுமியாகவும் காட்சி தருகிறது. பசுவை பால் தரும் ஜீவனாக கருதாமல், எம்மை காப்பாற்ற வந்த தாய் என்று கருத வேண்டும். மகாலட்சுமியின் சொரூபம் என்று பசுக்களுக்கு பூஜை செய்ய வேண்டும். அவ்வாறாக தொடர்ந்து செய்தால் எமக்கு கடவுளின் அருளும், சகல செல்வமும் கிடைக்கும்.நேரம் கிடைக்கும்போது அனைவரும் தாங்கள் வழிபடும் கோவிலில் வைத்து கோபூஜை செய்ய வேண்டும்.

## மனப்பக்குவமே நலம் தரும்

முப்பத்தெட்டு ஆண்டுகளாக முடக்குவாதமுற்று சீலோவாம் குளத்தருகே நலம் பெறக்காத்திருந்தவருக்கு இயேசு முன்னுரிமை கொடுத்து “ நலம் பெற விரும்புகிறீரா? ” என்று வினவி “ எழுந்து உமது படுக்கையை தூக்கிக் கொண்டு நடந்து செல்லும்.” என்று கூறி நலமளித்தார். உதவி தேவைப்படுவோருக்கு முன்வந்து உதவுதல் மனித நேயம். இதுவே இயேசுவின் வெளிப்பாடு.

இன்று எம்மையும் பார்த்து நலம் பெற விரும்புகிறீரா? என இயேசு கேட்கிறார். நாம் எமக்குள்ளே உருவாக்கிக் கொண்ட வரட்டுக் கௌரவம், பணத்தின் மீதானபற்று, சோம்பேறித்தனம், ஊதாரித்தனம், பொறுப்பின்மை, கீழ்ப்படிவின்மை, குடிபோதை, பெண், பொன், மண் ஆசை, பட்டம், பதவி, புகழ், சுயநலம், பகைமை, பிடிவாதம் போன்ற நீண்டகால உளநோய்களிலிருந்து விடுபட விருப்ப மில்லையா? என்பதே அவரது கேள்வியாகும்.

கடந்தகால சங்கிலிக்கட்டுக்களை அறுத்தெறிந்துவிட்டு புதிய வாழ்விற்குள் பிரவேசிக்க எமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. சாக்குப்போக்குகளைத் தள்ளிவைத்துவிட்டு அருளின் ஆற்றலுக்குள் குதித்து உடல், உள, ஆன்மிக வளம் பெற்று மகிழ்வோம். பிற நோயாளிகள் மேலும் கருணை கொண்டு முழுமனித விடுதலைபெற உதவிடுவோம். இதன் வழி எமது வாழ்வின் அர்த்தத்தை உறுதிப்படுத்துவோம்.

எஸ். யேசுதாஸ்




## வரலாற்றில் இன்றைய தினம் 17.03.2018

1891- எஸ்.ஏ. கப்பல், எச்.எம்.எஸ். அன்சன் கப்பலுடன் மோதி மூழ்கியதில், அதிலிருந்த 562 பேர் சாவடைந்தனர்.

1942 - நச்சுவாயு மூலமான முதலாவது யூதப் படுகொலை, கிழக்கு போலந்திலுள்ள பெல்செக் முகாமில் மேற்கொள்ளப்பட்டது.

1948- நேட்டோவின் முன்னோடியான புருசெல்ஸ் ஒப்பந்தத்தில் பிரான்சும் பிரிட்டனும் கைச்சாத்திட்டன.

1950 - கலிபோர்னியம் எனும் 98ஆவது மூலகம் கண்டுபிடிக்கப்பட்டதாக கலிபோர்னியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

1959 - பதினான்காவது தலாய்லாமாவான டென்சின் கியற்சோ திபெத்திலிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்.

1963 - பாலி தீவில் அகுங் எரிமலை வெடித்ததில் 110 பேர் உயிரிழந்தனர்.

1969 - இஸ்ரேலின் முதல் பெண் தலைமை அமைச்சரானார் கோல்டாமெயர்

1988 - வெனிசுலாவின் எல்லையில் கொலம்பிய வானூர்தியொன்று விபத்துக்கு உள்ளானதில் 143 பேர் உயிரிழந்தனர்.

2002 - குடாநாட்டு வான்பரப்பின் ஊடாக மீண்டும் பன்னாட்டு வானூர்திகள் பறப்பை மேற்கொள்ளத் தொடங்கின.

2007 - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலேயே அரசு அக்கறை என அமெரிக்காவில் அமைச்சர் போஹல்லகம தெரிவிப்பு.



**1957 -** பிலிப்பைன்சில் இடம்பெற்ற வானூர்தி விபத்தில் பிலிப்பைன்ஸின் முன்னாள் அரச தலைவர் றமோன் மக்ஸேசே உயிரிழந்தார்.

### நாளை


**18.03.2018**

ஞாயிற்றுக்கிழமை

பங்குனி 04

திதி: பிரதமை மு.இ. 07.05 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ. 08.38 வரை
சுபநேரம்: 09.19–10.49 வரை
ராகுகாலம்:04.49–06.19 வரை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சேனாதிராஜா திருவெண்காடர்

மலர்வு
15.03.1937

உதிர்வு
28.03.2017

ஒவ்வொரு பிறப்பும் இந்த பூமிக்கு ஒரு படிப்புப் படிச்சிட்டுப்போக வருகிறது
ஒவ்வொரு இறப்பும் இந்த பூமிக்கு ஒரு பாடம் சொல்லிவிட்டுப் போகிறது
அந்த வகையில் அமரர் சேனாதிராஜா திருவெண்காடர் சொல்லிவிட்டுப் போனபாடம்:-
"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர்போல யார் என்று ஊர்சொல்ல வேண்டும்" என்பதே

(CS/14769)(11,17)

குடும்பத்தினர்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

2 Kg மேல் வளர்ச்சியடைந்த புறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு 1 Kg 290/-

**077 031 3197**

(cs14810)(11,17)

## பசு கன்றுடன் விற்பனைக்குண்டு

நல்ல இன கறவை J.C (கன்னி) பசு கன்றுடன் விற்பனைக்குண்டு.

**077 948 2799**

(CS/14771)(11)

S.சிவா, 70, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

இக் காரியாலயத்தின் கிளை வவுனியாவில் திறக்கப்பட உள்ளதால் அங்கு பணியாற்ற பெண் ஊழியர் தேவை. யாழ்ப்பாணக் காரியாலயத்துக்கும் பெண் ஊழியர் தேவை. எல்லா மதம். இனம். வெளிநாடு. உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் ஒழுங்கு செய்துதரப்படும். (CS/14730)(11,17)

**தொடர்பு:- 077 973 3183**

## பெயர்மாற்றம்

இல.42. மானிப்பாய் வீதியில் வசிக்கும் **ரூபி ரமீஸா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **கந்தசாமி மாலினி** என மாற்றம் செய்ய உள்ளதால் இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **கந்தசாமி மாலினி** எனக் கையொப்பமிடுவேன் என்பதை அறியத்-தருகின்றேன்.

(CS/14812)(11,17)

- **கந்தசாமி மாலினி** -

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**இராமலிங்கம் சிவகுருநாதன்**
(படவரைஞர் - சண்டிலிப்பாய்)

மண்ணில்
15.06.1926

விண்ணில்
17.02.2018


கடந்த 17.02.2018 சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் இராமலிங்கம் சிவகுரு நாதன் அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரில் வருகைதந்து அனுதாபங்களையும். ஆறுதல் கூறியவர்களையும். தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும். இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (18.03.2018) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியைகளிலும். ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்துகொள்வதோடு. அன்றையதினம் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.
**075 041 7539, 077 913 4460**

## மரண அறிவித்தல்



## சச்சிதானந்தன் சாரங்கன்

(யா/- வைத்தீஸ்வராக் கல்லூரி. யா/ நாவற்குழி ம.வி-பழைய மாணவன்)

இல.85. பத்திரகாளி கோயிலடி. வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் சாரங்கன் (யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி. யா/ நாவற்குழி ம.வி-பழைய மாணவன்) 14.03.2018 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தன் (உதயன் சவுண்ட்ஸ் ஒளி. ஒலி அமைப்பின் உரிமையாளர்) மற்றும் ருக்மணிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அரிசூதனன் மற்றும் சாருஜன் (மாணவன் - யா /பெரியபுலம் ம.வி), ரூபிகா (மாணவி - யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான இராசபாக்கியம் - பவானிதேவி. காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் நாகபூரணம் தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரதுஇல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காகக்கோம்பயன்மணல்இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 85, பத்திரகாளி கோயிலடி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 838 3045**

(cs14797)(11,17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18
04
1938



மறைவு
27
03
2017

## குமாரசாமி இராசரத்தினம்

[ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர், சுதுமலை தெற்கு, மானிப்பாய்]

ஆண்டொன்று மறைந்துவிட்டது மாமா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவரே!
எங்கள் உயிர் உள்ளவரை என்றும் எம் மனதைவிட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு :- இன்று (17.03.2018) சனிக்கிழமை இணுவிலில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செட்டிவளவு லேன்,**
**இணுவில் மேற்கு.**

(CS/14803)(11,17)

**குடும்பத்தினர்,**
**மருமக்கள்.**

# அமரர் அமரசிங்கம் கமலானந்தன் (உடையார்) அவர்களின்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



சிருஷ்டிகளுக்காக 21.11.1952
சிருஷ்கருக்காக 15.02.2018

அமைதியான ஆன்மீக தொண்டுக்கு
விண்ணகத்திலே ஏற்பட்டதோ ஓர் வெற்றிடம்
அதனாலே விண்ணகத் தலைவன் விரைந்து
அழைத்தானோ உங்களை அவ்விடம்?
உங்கள் தொண்டினால் விண்ணகமும்
மண்ணகமும் சிறக்க எல்லாம்
வல்லவனைப் பிரார்த்திக்கும்

**உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

இன்று (17.03.2018) சனிக்கிழமை அன்னாரின் பூர்வீக இல்லமாகிய குமர கோட்டதில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். அன்னாரது அன்புக்குரியவர்கள் அனைவரினதும் முகவரியோ, தொலைபேசி இலக்கங்களோ எமக்குத் தெரிந்திராத ஓர் மனக்கஷ்டமான நிலையில் இவ் அன்பான அழைப்பை நன்றியுணர்வுடன் விடுக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவன் திடீர் நோயுற்ற காலத்தில் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் அரச, தனியார் மருத்துவமனை வைத்தியர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், வெளியூரிலிருந்து ஆலோசனைகளும் ஆறுதலும் அளித்த வைத்திய நிபுணர்கள் மற்றும் அன்புள்ளங்களுக்கும், மரணச் செய்திகேட்டு உடன் விரைந்து வந்து ஆறுதல் கூறி இறுதிக்கிரியைகளுக்கான ஆயத்தங்களைச் செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டு மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய பிரமுகர்கள், இந்நிகழ்வை நிறைவாக செய்து முடிக்க முன்னின்று பாடுபட்ட இரட்டையர்புலம் ஞானவைரவர் தேவஸ்தானம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச அனைத்து ஆலயங்களினதும் நிர்வாகசபை, தொண்டர்சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் இந்நிகழ்வுகளில் கலந்து தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிக்கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஆன்மீகத் துறைசார் நண்பர்கள் மற்றும் நேரில் சமுகமளித்து எமது துயரில் பங்குகொண்ட கௌரவப் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் ஈ.சரவணபவன் அவர்களுக்கும் இதில் குறிப்பிடத்தவறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**25/9, குமரகோட்டம், இரட்டையர்புலம் வைரவர் கோயிலடி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.**

(CS/14799)(11,17)

**குடும்பத்தினர். 021 224 0353**

---

### பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை. - 077 262 6944

### வீடு வளவு விற்பனைக்கு

இராச பாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக்காணி புதிய வீட்டுடன் மின்சார வசதி, குழாய்க் கிணறு, பங்காக உரிய வெட்டுக் கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துடன் விற்பனைக்குண்டு.

(CS/14779)(11,17)

**077 978 3206, 076 978 9016**

### வேலையாள்கள் தேவை

மன்னாரில் அமைந்துள்ள **FMCG** நிறுவனத்திற்கு பணிபுரிய பின்வரும் வேலையாள்கள் தேவை.

- முகாமையாளர்
- களஞ்சியப் பொறுப்பாளர்

தகைமை, முன்னனுபவம் விரும்பத்தக்கது
அடிப்படை Account அறிவு

076 968 4961

ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

---

### மரண அறிவித்தல்



## திருமதி தனலட்சுமி (குஞ்சு) நேசராஜன்

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி நேசராஜன் கடந்த (14.03.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் (P.W.D. ஓவசியர்) அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற C.M.பொன்னையா சௌபாக்கியம் தம்பதிகளின் மருமகளும் நேசராஜனின் பாசமிகு மனைவியும் அனுஷா (நோர்வே), தபேந்திரன் (சுதுமலை), சுயாதா (லண்டன்), சர்வானந்தா (கனடா), சர்வேந்திரன் (சுதுமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவிபாலன் (நோர்வே), வசந்தநாயகி ஜெயதாசன் (லண்டன்), ரம்யா (கனடா), கலாவதி ஆகியோரின் மாமியும் பிரிமிதா, கௌதமன், விஜீந்திரன் கோபிதா - டினேஸ், லதுர்ஷன், தர்ஷன், கிஷோன் சகிந்தி மேனுஷன், வைஷ்ணவி, சங்கவி, சாம்பவி, மானசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஞானலக்சுமி, ஞானசம்பந்தன், மாணிக்கவாசகர் மற்றும் பத்மாவதி (வேவி - சண்டிலிப்பாய்), செல்வமலர் (லண்டன்), கஜநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை தாவடி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**077 928 0050**

(CS 14841/15/17)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111

---

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 16.03.2018 | 2265 | சிவப்பு |

கும்பம்

வெற்றி இலக்கங்கள்: 18 35 54 61

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 14, 916, 876/=

2018.03.18 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நேரடி அழைப்பு 1919

---

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 780

சீட்டிழுப்பு திகதி 2018.03.15 வியாழக்கிழமை

G 42 61 67 71

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,161,800/-

தொ.பே: 011 4062002 / 011 4062082 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

நீல நிற டிக்கட்டுகள் 2018.03.17ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையாக 31 . 07 . 1953

தெய்வமாக 17 . 03 . 2014

திருமதி

**றேனுகாதேவி அருட்பிரகாசபிள்ளை**

அன்பின் திருவுருவே அன்னையே
எம்மை வைத்துள் வாழவைத்து
வானுலகு சென்றனையே
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறுமோ எம்மனம் அவனியிலே

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(CS14774-13)

உங்கள் நினைவில் வாழும் கணவர், பிள்ளைகள்.

Manikandan@Manikan83915037

வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடித்துத் தள்ளுங்கள், அதை கட்டுகிற வேலையாவது கிடைக்கட்டும்... வேலையில்லாப் பட்டதாரி...

என் மனச்சாரல் @duraina_twitz

சந்தோசத்தின் இருப்பிடத்தை தேடிஓடுவதை விட இருப்பிடத்தை சந்தோசமாக்கிப் பார்.. அந்தச் சந்தோசம் இரட்டிப்பாகக் கிடைக்கும்!

மன்னன் ™@DAnandaRaj

ஓடிஓடி உழைத்தபோது ஒட்டாத பணம். ஆடி அடங்கியதும் நெற்றியில் வந்து ஒட்டிக் கொள்கிறது.

## ஒளிரும் நட்சத்திரம்






## திரைக்குவர தாமதம் ஏற்படலாம்

தனுஷ் தயாரிப்பில் பா.இரஞ்சித் இயக்கத்தில் ரஜினியின் நடிப்பில் உருவாகியிருக்கும் 'காலா' திரைப்படம் திரைக்கு வருவதற்குத் தாமதமாகலாம் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ரஜினி நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'காலா'. பா.இரஞ்சித் இயக்கியுள்ள இந்தப் படத்தை தனுஷ் தயாரித்திருக்கிறார். அதுபோல், சங்கர் இயக்கத்தில் உருவாகி இருக்கும் '2.0' படத்திலும் நடித்து முடித்திருக்கிறார் ரஜினி. ஏப்ரல் 27ஆம் திகதி காலா படம் திரைக்கு வரும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டின் திரையரங்க உரிமையாளர்கள் படத்துக்கான நுழை வுச்சீட்டுக் கட்டணத்தை அரசு உயர்த்த வேண்டும் என்று தெரிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் திட்டமிட்டபடி காலா படம் திரைக்கு வருவதற்குத் தாமதமாகலாம் என்று சொல்லப்படுகிறது.

அநியாயத்துக்கு நல்லவனாக இருக்கிறாய் என்பது



'இளிச்சவாயன்' என்பதன் எதிர்ப்பதம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உண்மை, நேர்மையை மதித்துச் செயல்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கேற்ற நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். வருமானம் சீராகும்.

**இடபம்:** இனிய நிகழ்வுகளால் மனதில் உற்சாகம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கு பூர்த்தியாகும். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மிதுனம்:** உங்கள் வளர்ச்சி கண்டு சிலர் பொறாமைப்படுவர். கூடுதல் உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் இலாபம் காண்பீர்கள்.

**கடகம்:** நிதானமுடன் செயல்படுவது நல்லது. சகதொழில், வியாபாரம் சார்ந்த எவரிடமும் சச்சரவு தவிர்க்கவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** முயற்சிகேற்ப வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும்.

**கன்னி:** உற்சாகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற புதிய வாய்ப்பு வளர்ச்சி தரும். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கத் தாமதமாகும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம். மிதமான ஆதாயம் வரும்.

**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தாமதமான செயலில் முன்னேற்றம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும்.

**மகரம்:** குறையை சரிசெய்வதில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில் கூடுதல் முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமத்திற்கு ஆளாவர்.

**கும்பம்:** கடந்த கால நற்செயலுக்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவர் தன் குறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

## தவறுகளையே இந்த உலகம் பார்க்கிறது

அந்த ஆசிரியை மிக மென்மையானவர். அதிர்ந்த குரலில் பேச மாட்டார். மாணவர்களை அரவணைத்துச் செல்வார். வெறும் பாடங்களோடு நிறுத்திக்கொள்ளாமல் வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்களை எளிமையாக உணர்த்துவதில் வல்லவர். உள்ளே வந்தவர், வகுப்பறையை ஒரு நோட்டம் விட்டார். பிறகு, கரும்பலகையில் எழுத ஆரம்பித்தார்.

1 x 5 = 3
2 x 5 = 10
3 x 5 = 15
4 x 5 = 20
5 x 5 = 25
6 x 5 = 30
7 x 5 = 35
8 x 5 = 40
9 x 5 = 45
10 x 5 = 50

இந்த வாய்ப்பாட்டை எழுதி முடித்துவிட்டு, மாணவர்களைப் பார்த்தார். பல மாணவர்களின் முகத்தில் சிரிப்பு ஒட்டிக் கொண்டிருந்தது. அவர்களில் ஒரு மாணவனைக் கூப்பிட்டார். "உங்களுக்கெல்லாம் ஏன் சிரிப்பு வருது..."

"அது வந்து..."

"பயப்படாம சொல்லு..."

"இல்லை டீச்சர்... இது ரொம்ப எளிமையான வாய்ப்பாடு. நீங்களே மத்த எல்லாத்தையும் சரியா எழுதியிருக்கீங்க... ஆனா, '1 x 5 = 3'எண்டு எழுதியிருக்கீங்களே... தப்பு இல்லையா?" "தப்புதான். காரணத்தோடதான் அப்பிடி எழுதினேன். நாம ஆயிரம் விஷயத்தை சரியா செஞ்சிருப்போம். அதையெல்லாம் இந்த உலகம் கவனிச்சாலும் மறந்துடும். ஏதோ ஒண்டைத் தப்பா செஞ்சிருப்போம். அதை ஞாபகத்தில வைச்சிருந்து கேள்வி கேட்கும். அதனால முடிஞ்சவரைக்கும் தப்பு செய்யாம இருக்கப் பாருங்க."



என்னதான் ஊருக்கே கேக்கிற மாதிரி குறட்டை விட்டாலும்



அத நம்மட காதால கேட்க முடியாது....

இந்த கோடை வெயிலில் என்னதான் கிறீம் போட்டாலும்



இரண்டு நிமிடங்களில் காய்ந்த கருவாடு போல் ஆகிவிடுகிறது....

# கஞ்சனும் புதையலும்



ஓர் ஊரில் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு நாள் இரவு கனவு ஒன்று வந்தது. அந்தக் கனவில் தோன்றிய தேவதை "மகனே! உன் வீட்டுத்தோட்டத்தில் உள்ள வேப்ப மரத்துக்கு அடியில் புதையல் உள்ளது" என்று கூறி விட்டு மறைந்தார். தூக்கத்திலிருந்து கண்விழித்தான் கஞ்சன்.

தேவதை கூறியபடி புதையலை எடுக்க எண்ணினான். பகலிலே சென்றால், பிறர்கண்டுவிடுவார்களே என்று எண்ணி அன்று பகல் முழுவதும் பொறுத்திருந்து இரவு தான் வேப்ப மரத்தடிக்குச் சென்று அதனடியில் தோண்டினான். அப்போது அங்கிருந்த நல்ல பாம்பு ஒன்று அவனைக் கடித்து விட்டது. அப்போது அவன் உடலில் விஷம் ஏறிக்கொண்டிருந்தது.

விஷக்கடி மருத்துவரிடம் ஓடினான். அவன் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு மந்திரம் சொல்லியே நோயைக் குணமாக்குவார். எப்படியெனில்

பூரான் கடிக்கு - 5 ரூபாய்
தேள் கடிக்கு - 10 ரூபாய்
பாம்புக் கடிக்கு - 25 ரூபா
என்றார் மருத்துவர்.

இதைக் கேட்ட கஞ்சன் யோசிக்க ஆரம்பித்தான். எந்தக் கடியானாலும் ஒரே மந்திரம் தானே சொல்லப் போகிறார். எதற்குப் பாம்பு கடித்தது என்று சொல்லி 25 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று எண்ணி பூரான் கடித்துவிட்டது என்று கூறினான். மந்திரவாதி பூரான் கடி மந்திரத்தைச் சொல்லப் பயன் கிடைக்கவில்லை.

மீண்டும் வைத்தியரே! எனக்கு தேள் கடித்து விட்டது என்றான். மந்திரவாதி தேள்கடி மந்திரத்தைச் சொல்ல இப்போதும் பயன்கிடைக்கவில்லை. மிகவும் பயந்துபோன கஞ்சன் மெதுவாக பா... பா... பாம்பு கடித்தது என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் விஷம் தலைக்கு ஏறி அவன் இறந்து போனான்.



# அணிற்பிள்ளை

கத்திக் கத்தி மரத்திலேறும் அணிற்பிள்ளையே
கனி தருவேன் வா வா வா அணிற்பிள்ளையே
மெத்த உயரக் கொப்பிலேறும் அணிற் பிள்ளையே
முதுகில் கோடுபோட்டதார் சொல் அணிற்பிள்ளையே

காய் கனியை விரும்பி உண்ணும் அணிற்பிள்ளையே
கிட்ட ஓடி வந்திடுவாய் அணிற்பிள்ளையே
நாய் பூனை பிடித்திடாமல் அணிற்பிள்ளையே
நான் வளர்ப்பேன் நீ வருவாய் அணிற்பிள்ளையே

கொய்யாப்பழம் தருவேன் அணிற்பிள்ளையே
கூடவே சோறும் தருவேன் அணிற்பிள்ளையே
மெய்யாய் அடித்து வருத்த மாட்டேன் அணிற்பிள்ளையே
மிக விரைவாய் வந்திடுவாய் அணிற்பிள்ளையே

# கலிலியோ கலிலி




விஞ்ஞானி கலிலியோ உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறியவர். உண்மையைச் சொன்ன அவர் என்ன ஆனார்?

இவர் இத்தாலிய விஞ்ஞானி. எமது சூரிய குடும்பத்தின் அமைப்பு வான சாஸ்த்திரம் ஆகியவை குறித்து புதிய விடயங்களைக் கண்டு பிடித்து அறிவித்தவர். அவருடைய கண்டுபிடிப்புகள் தான் புதிய சிந்தனையை உருவாக்கின. இத்தாலியின் பிசா நகரில் 1564 பெப்ரவரி 15ஆம் திகதி பிறந்த இவர் 1642ஜனவரி 8ஆம் திகதி இறந்தார். வானவியல் அறிஞர், வேதியல் வல்லுநர், கணிதவியலாளர், தத்துவ ஞானி. கண்டுபிடிப்பாளர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர். தொலைநோக்கி, கொம்பாஸ், தேர்மா மீற்றர் ஆகியவை இவரது கண்டு பிடிப்புகளில் முக்கியமானவை. இயற்பியலின் தந்தை. நவீன அறிவியலின்தந்தை. நவீன வானியலின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

1610ஆம் ஆண்டு வியாழன் கிரகத்தை நான்கு பொருள்கள் சுற்றுவதைக் கண்டு பிடித்தார். இவை வியாழனின் மிகப்பெரிய நிலவுகளாகும். லோ, கலிஸ்டோ, ஈரோப்பா, கனிமீடு என்று அழைக்கப்படுகின்றன. சூரியனை நடுநாயகமாகக் கொண்டு கோள்கள் சுற்றுகின்றன என்பதை நிரூபித்தார்.

# வர்ணம் தீட்டுவோம்



# மூளைக்கு வேலை

1. பதினொன்றோடு இரண்டைச் சேர்த்தால் ஒன்றாகும் எப்படி?
2. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ அவ்வளவு விட்டுச் செல்வீர்கள் அது என்ன?
3. தலையிலிருந்து கால்வரை உபயோகப்படுவேன். அதனால் மெலிகிறேன். நான் யார்?
4. இருபத்தைந்தை எத்தனை முறை ஐந்தால் கழிக்க முடியும்?
5. இது உங்களை அழ வைக்கும். சிரிக்க வைக்கும். இளமையாக உணரவைக்கும். நொடியில் தோன்றினாலும் வாழ்நாள் முழுவதும் தொடரும். அது என்ன?
6. என்னால் உங்களுக்கு வியர்க்கும். நீங்கள் பலவீனமாவீர்கள். நான் உங்கள் இதயத் துடிப்பை அதிகரிப்பேன்.
7. அதற்கு கைகள் உள்ளன. அதனால் எதனையும் பிடிக்க முடியாது. பற்கள் உண்டு ஆனால் கடிக்க முடியாது. கண்கள் உண்டு ஆனால் பார்வை கிடையாது. அது என்ன?
8. என்னால் ஓட முடியும் ஆனால் நடக்க முடியாது. எப்போதாவது பாடுவேன். ஆனால் பேச முடியாது கைகள் உண்டு ஆனால் விரல்கள் கிடையாது. தலையில்லை ஆனால் முகம் உண்டு நான் யார்?
9. இங்கு பாதைகள் உள்ளன. ஆனால் வாகனங்கள் செல்ல முடியாது. காடுகள் உள்ளன. ஆனால் மரங்கள் இருக்காது அது என்ன?
10. எனக்கு நாக்கில்லை. ஆனால் பேசுவேன். உலகிலுள்ள அத்தனை விடயங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். எனக்கு கை கால் இல்லை ஆனால் மேலாடை உண்டு நான் யார்?

விடைகள்

1. 11 மணி+இரண்டுமணி = ஒருமணி
2. கால்தடங்கள்
3. சவர்க்காரம்
4. ஒருமுறைதான் (அதற்குப்பின் அது 20 ஆகிவிடுமே)
5. நினைவுகள்
6. பயம்
7. பொம்மை
8. கடிகாரம்
9. வரைபடம்
10. புத்தகம்




# வீதியைக் கடக்க

வாகனப் போக்குவரத்து மிக அதிகம் உள்ள வீதி அது. ஒரு மனிதர் அந்த வீதியையைக் கடக்க நீண்ட நேரம் முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் அவரால் கடக்க முடியவில்லை. அப்போது சாலையின் மறுபக்கம் ஒருவர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் இந்தப் பக்கம் நின்றவருக்கு முன்பே அறிமுகமானவர். இந்தப் பக்கம் வீதியைக் கடக்கவென நின்றிருந்தவர் மறுபக்கம் நின்றவரிடம் நீங்கள் இந்தச் சாலையை எப்படிக் கடந்து மறுபக்கம் சென்றீர்கள்? நான் நெடுநேரமாக அந்தப் பக்கம் வர முயற்சி செய்கிறேன். முடியவில்லையே!" என்று சத்தம் போட்டு வினவினார். மறுபக்கம் நின்றவரும் அதேபோன்ற உரத்த தொனியில் "நான் இந்தச் சாலையை அங்கிருந்து கடந்து வரவில்லை. நெடுநேரமாக நானும் இந்தப் பக்கமாக நின்று முயற்சி செய்து கொண்டிருந்தேன்" என்று பதில் கொடுத்தார்.

# சிரி சிரி

ஆசிரியர் : அமெரிக்கா எங்கே உள்ளது?
மாணவன் : தெரியாது சேர்
ஆசிரியர் : மேசைக்கு மேல் ஏறி நில்
மாணவன் : ஏறி நின்றால் அமெரிக்கா தெரியுமா சேர்?
ஆசிரியர் : ???



# தெரிந்து கொள்வோம்

- இலட்சியத்தை அடையும்வரை நில்லாமல் போய்க்கொண்டிருக்க வேண்டும் என்பதை நதியிடமிருந்து தெரிந்துகொள்வோம்.
- எல்லா மனிதர்களோடும் எல்லாப் பொருள்களுடனும் அவரவர் அல்லது அதனதன் தன்மைக்கேற்ப கலந்து பழக காற்றிடமிருந்து தெரிந்துகொள்வோம்.
- அனைவரையும் சமமாகப் பார்க்க சூரியனிடமிருந்து தெரிந்துகொள்வோம்.
- வாழ்வது மாயம், மண்ணாவது திண்ணம் என்பதை கானல் நீரிடமிருந்து தெரிந்து கொள்ளவோம்.
- தன்னை வெட்டுபவனுக்கு நிழல் கொடுத்து தன்னை வெட்ட உதவும் கோடரிக் காம்பாகவும் உதவும் மரத்திடம் இருந்து பெருந்தன்மையைக் கற்றுக்கொள்வோம்.

## கொழும்பின்...

தந்திரவட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைனுக்கு விளக்கமளிக்கத் தீர்மானித்த இலங்கை அரசு, அவரைச் சந்திக்க அனுமதி கோரியிருந்தது. ஜெனிவாவிலுள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் ஊடாக அயலுறவுத்துறை அமைச்சரால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கையின் அண்மைக்கால வன்முறைகள் தொடர்பில் கடும் அதிருப்தி அடைந்துள்ள மனித உரிமைகள் சபை, இந்தச் சந்திப்புக்கான அனுமதியை வழங்க மறுத்திருக்கிறது.

இலங்கையின் நிலைப்பாடு குறித்து சபைக் கூட்டத்தொடரில் விளக்கலாம் எனவும், அதுவே இப்போதைய சூழ்நிலையில் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாக இருக்கும் எனவும் மனித உரிமைகள் சபை இலங்கை அரசுக்கு இராஜதந்திர ரீதியில் தெரிவித்திருப்பதாக அறியமுடிகின்றது. (5)

## ஆட்சிக்...

மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, இலங்கையிலிருந்து செயற்படும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரத்தில் முன்வைக்கப்படவுள்ளது. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் முடிவுக் கட்டத்தை எட்டியுள்ளேன். ரணிலைப் பதவியிலிருந்து அகற்ற அவரது கட்சி உறுப்பினர்களே நடவடிக்கை மேற்கொள்கின்றனர். எனது வேலை இலகுவாக உள்ளது. ரணில் வெகு விரைவில் பதவி விலகவேண்டும். இது இரகசியமான சதி முயற்சியல்ல. எல்லாம் வெட்ட வெளிச்சமாகவே நடக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாகக் கையெழுத்திடுவார்கள். வேறு சிலர் வாக்கெடுப்பின்போது ஆதரவு வழங்குவார்கள். இதற்கு முன்னதாக, ரணில் தாமாகவே பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

ரணில் உங்களைக் காப்பாற்றும் வகையில் செயற்படுகிறாரல்லவா என்ற கேள்விக்கு மகிந்த வெறும் புன்னகை மட்டுமே வெளிப்படுத்தினார்.

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய போட்டியிடுவாரா என்பது குறித்து இதுவரை எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மக்களது விருப்பத்துக்கமையவே கோத்தபாயவா அல்லது வேறு யாராவதா என்பது குறித்துத் தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மகிந்த தரப்புக்கு நாட்டின் மொத்த வாக்காளரின் 50 சதவீதத்தினரது ஆதரவு இல்லையே என்ற கேள்விக்குத் தற்போதைய தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளில் 75 சதவீதமானவை தமது தரப்புக்கு ஆதரவாகக் கிடைக்கும் என்பதால் 50 சதவீத ஆதரவு என்ற பிரச்சினைக்கு இடமில்லை எனவும் மகிந்த தெரிவித்தார்.

இதேவேளை 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில், 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கூட்டு அரசை ஆட்சி கவிழ்ப்பேன் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## ராமர்...

பாதுகாப்புக் குறித்து பா.ஜ.க. மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிர மணியன் சுவாமி தொடர்ந்த வழக்கில் நடுவண் அரசு நேற்றுத் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் ராமர் பாலத்தை அகற்ற மாட்டோம் எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ராமர் பாலத்தை அகற்றாமல் வேறு வழியில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளது. (5)

## உறுப்பினர்களின்...

வருகின்றது. இது தொடர்பில் நேற்று மாலை வரையில் எந்தவொரு உறுதியான முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த புதன் கிழமை நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய அரசிதழ் வெளியாகவில்லை. இதனால் சத்தியப்பிரமாண நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இன்றைய தினத்தில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறலாம் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இதற்குரிய ஒழுங்குகள் முன்னெடுக்கப்படாமையினால் இன்றைய தினமும் நடைபெறாது என்று கூறப்படுகின்றது.

ஞாயிற்றுக் கிழமைகளில் சத்தியப்பிரமாண நிகழ்வுகளை பொதுவாக மேற்கொள்வதில்லை என்பதால், திங்கட் கிழமையே சத்தியப் பிரமாண நிகழ்வுகள் இடம்பெறும் என்று தெரியவருகின்றது.

எதிர்க் கட்சித் தலைவரும், கட்சியின் தலைவருமான இரா.சம்பந்தன் அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நிற்பார் என்பதால், அன்றைய தினம் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

20ஆம் திகதி வடக்கில் 4 உள்ளூராட்சி சபைகளின் அமர்வுகள் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## மாற்று...

போருக்குப் பின்னரான இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை ஊக்குவிப்பதற்கான தீர்மானம் ஒன்று கொழும்பு அரசின் இணை அனுசரணையுடன் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. நிலைமாறுகால நீதியைச் செயற்படுத்துதல், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல விடயங்களை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்தியது. அதற்காக இரண்டு வருட கால அவகாசமும் வழங்கப்பட்டது.

ஆனால், அந்தக் காலப் பகுதிக்குள் கொழும்பு அந்தத் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து 2017ஆம் ஆண்டில் மற்றொரு தீர்மானமும் கொழும்பின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் சொல்லப்பட்டு கொழும்பு அரசு நிறைவேற்றாதுள்ள விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றும்படி புதிய தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

புதிய தீர்மானத்தைக் கொழும்பு செயற்படுத்தும் விதம் குறித்து ஒரு வருட காலத்தில் (2018 மார்ச்) வாய்மூல அறிக்கையையும் இரண்டு வருட காலத்தில் (2019 ஒக்ரோபர்) முழுமையான அறிக்கையையும் மனித உரிமைகள் ஆணையாளர் சபைக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் கோரியிருந்தது.

அதன் அடிப்படையில் தீர்மானத்தின் மீதான இடைக்கால அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் அண்மையில் வெளியிட்டிருந்தார். அதில், தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை இலங்கை அரசு கிட்டத்தட்டக் கைவிட்டுவிட்டதனால் மாற்று வழிகளை உலக நாடுகள் பரிசீலிப்பதற்குப் பரிந்துரைப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அவரது பரிந்துரைப்படி ஐ.நா. தீர்மானத்தைக் கொழும்பு அரசு முற்றாக நடைமுறைப்படுத்தவதற்கான அழுத்தத்தை அதற்குக் கொடுக்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது.

அமெரிக்கத் தலைநகர் வொஷிங்ரன் செல்லும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்க நிரந்த வதிவிடப் பிரதிநிதி நிக்கி ஹேலியையும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்து இந்த விடயங்களை வலியுறுத்தவுள்ளார்.

"ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நிக்கி ஹேலியை நாளை மறுதினம் திங்கட் கிழமையும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் அலிஸ் ஜி வெல்ஸை மறுநாள் செவ்வாய்க் கிழமையும் நேரில் சந்தித்துப் பேசவுள்ளேன். அந்தச் சந்திப்பில் இலங்கை மீதான மாற்று நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்க வேண்டும் என்று வலியுறுத்துவேன்" என்று எம்.ஏ.சுமந்திரன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். அமெரிக்காவுக்கு நேற்று இரவு புறப்படுவதற்கு முன்னதாக அவர் இதனைத் தெரிவித்தார்.

"இலங்கை பொறுப்புக் கூறல் விடயத்தில் எதுவும் செய்யவில்லை. இதனால் இலங்கை விவகாரத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்காக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை மீது உலகளாவிய நியாயாதிக்கத்தை அழுத்துவதற்கு உறுப்பு நாடுகளைத் தான் ஊக்குவிக்கவுள்ளார் என்று தெரிவித்துள்ளார். சில நாடுகளில், வேறு நாடுகளின் போர்க் குற்றவாளிகளைக் கைது செய்து விசாரிக்கவும் தண்டனை வழங்கவும் சட்ட ஏற்பாடுகள் உள்ளன. அதனை அந்தந்த நாடுகள் செயற்படுத்த வேண்டும். இதுவே ஆணையாளர் வலியுறுத்தும் உலகளாவிய நியாயாதிக்கம். இதனை ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நேரடியாகச் செயற்படுத்த முடியாது.

எனவே அதனைச் செய்வதற்கு அமெரிக்கத் தலைமையேற்க வேண்டும். போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ள ஏனைய நாடுகளும் அதனைச் செயற்படுத்துவதற்கு ஊக்குவிக்கவேண்டும். அதனையே நான் வலியுறுத்தவுள்ளேன்" என்றார் அவர்.

சுமந்திரனின் அமெரிக்கச் சந்திப்புக்களை உலகத் தமிழ் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர். (உ-5)

## கிளிநொச்சியில்...

இதற்கு முன்னர் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மூன்று ஆலயங்களே உடைக்கப்பட்டுள்ளன. ஆலயங்களை உடைத்து மூல விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் சில திருடப்பட்டுமுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முரசுமோட்டை சிவா சுப்பிரமணியர் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு மூல விக்கிரகமான வேல் முறிக்கப்பட்டுள்ளது. களஞ்சிய அறையும் உடைக்கப்பட்டு சோதனை இடப்பட்டுள்ளது .

முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலயக் கதவுகள் உடைக்கப்பட்டு மூல விக்கிரகமும் கடுமையாகச்சேதப்படுத்தப்பட்டதுடன் சிலவிக்கிரகங்கள் திருடப்பட்டுமுள்ளன. அத்தோடு அம்மனுக்குச் சாத்தப்பட்டிருந்த தங்கப் பொட்டுகள் மற்றும் உண்டியலில் இருந்த பணம் என்பவும் திருடப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டைப் பிள்ளையார் ஆலயமும் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்பட்டுள்ளன. காலையில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆலயத்துக்குச் சென்றபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

சம்பவ இடங்களுக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். "மூன்று ஆலயங்களிலும் ஒரு குழுவினரே கைவரிசை காட்டியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கப்படுகின்றனர்.

வரலாற்றுச்சிறப்பு மிக்க இந்த ஆலயங்களில் திருட்டுப் போன பெறுமதிகளை விட மூல விக்கிரகத்தை உடைத்தது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்தனர். மூல விக்கிரகங்கள் உடைக்கப்பட்டால் கும்பாபிசேகம் செய்தே அவற்றை பிரதிஷ்டை செய்ய முடியும்.

கடந்த சில ஆண்டுகளாகவே மன்னார் மாவட்டத்தில் இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள கடவுளர் சிலைகளும் சேதமாக்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டு சிவராத்திரி தினத்தன்று மீண்டும் அங்கு இரண்டு ஆலயங்கள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தன. கடந்த மாதம் முல்லைத்தீவிலும் ஆலயம் ஒன்று உடைக்கப்பட்டு கடவுளர் சிலை கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டிருந்தது. இவற்றுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்து அமைப்புக்கள் வடக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தன. இறுதியில் நல்லூரிலும் போராட்டம் இடம்பெற்றது. இந்த நிலையிலேயே நேற்று கிளிநொச்சியில் ஆலயங்கள் உடைக்கப்பட்டு மூல விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன. (உ-21,35,6)

## அரசியல்...

(வயது -70) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு வாகனங்களைப் பெற்றுக்கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2008ஆம் ஆண்டு மாசி மாதம் 10ஆம் திகதி இவர் கைதுசெய்யப்பட்டார். கொழும்பு மகசீன் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருந்தார்.

தேவகனின் வழக்கு நீர்கொழும்பு நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. கடந்த வருடம் குறித்த குற்றச்சாட்டுக்காக தேவகனுக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்று. எனினும் சட்டா அதிபரால் அவர் மீது மற்றுமொரு வழக்கு.தாக்கல் செய்யப்பட்டது. வெடி பொருள்களை வைத்திருந்தார் என்று அதில் குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

அதன் பின்னரே தேவகன் சோர்வுற்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த 10 நாள்களுக்கு முன்னர் தேவகன் சிறைச்சாலையில் மயக்கமுற்றார். வெலிக்கடை சிறைச்சாலையின் மருத்துவ சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு தேவகனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கடந்த 12ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கேயே நேற்று உயிரிழந்துள்ளார். (உ-21)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாவதி அரசரட்னம்



ஆரியகுளம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி அரசரட்னம் நேற்று (16.03.2018) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரசரட்னம் (திருச்செல்வம்) இன் அன்பு மனைவியும் தாசன், திருமதி ஶ்ரீறயனி குலேந்திரன் ஆகியோரின் தாயாரும் சிறீதரனின் சிறிய தாயாரும் நிவேதன், றொசானி, லூக்கா, எரஸ்ரஸ் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், சிவராஜலிங்கம், தையல்நாயகி, அன்னலட்சுமி, கமலாம்பிகை, ஜெகதாம்பாள் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் அவரது 108/5, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீட்டில் 19.03.2018 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். தகனக்கிரியைகள் செம்மணி இந்து மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்

(CS 14844/13/17)

### அருளப்பு சுகிர்தமலர்



தபாற்கந்தோர் அருகில், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு சுகிர்தமலர் நேற்று (16.03.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சூசைதாஸ் குணரட்ணம் (கனடா), மரியதாஸ் ஜெபரட்ணம் (ஓய்வு நிலை பிரதி அதிபர், திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி), வசந்தமலர் (பிரதேச சபை, கரவெட்டி) மற்றும் காலஞ்சென்ற மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவமணி (கனடா), ஜோசேப்பின் (ஓய்வு நிலை ஆசிரியர் - யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் மைத்துனியும், ஜெனிற்றா (கனடா), ஜோய் மாதவன் (விரிவுரையாளர் - தொழில்நுட்பபீடம் யாழ். பல்கலைக்கழகம்), ஜோன்சன் திவ்வியானந்த் மற்றும் காலஞ்சென்ற ஜெனற் அபிசாளினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லுடல் இன்று (17.03.2018) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக கரவெட்டி கீரிப்பல்லை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தபாற் கந்தோர் அருகில்
கரவெட்டி.

தகவல்:
மரியதாஸ் ஜெபரட்ணம்
(சகோதரன்)

021 491 9346, 077 623 2805



# மொபிடெல் நிறுவனத்தின் அனுசரணையில் மத்தி - சென்.ஜோன்ஸ் ஒருநாள் ஆட்டம்

'வடக்கின் சமர்' என அழைக்கப்படும் துடுப்பாட்டத் தொடரில் நடப்பு வருடத்தின் 112 ஆவது ஆட்டத்துக்கான முதன்மை அனுசரணையை, இலங்கையின் தேசிய மொபைல் சேவை வழங்குநரான மொபிடெல் வழங்கியது. இந்த ஆட்டம் கடந்த 8 ஆம், 9 ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களை உடைய ஒருநாள் ஆட்டம் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ஓ)

# சிறந்த சேவை வழங்குநராக 'ஹீரோ-அபான்ஸ்'

## நாடு முழுமையுமாகக் காட்சியறைகள் அமைவு

**பன்னாட்டளவில் உந்துருளி (Motor Cycle) உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமாக திகழும் 'ஹீரோ மோட்டகோர்ப்' தற்போது இலங்கையில் இடம்பெற்றுவரும் 'ஹீரோ சுதந்திர கிண்ணம் - 2018' ரி - 20 முத்தரப்பு துடுப்பாட்டத் தொடருக்கான முதன்மை அனுசரணை யாளராகச் செயற்பட்டு வருகிறது.**

Hero NIDAHAS TROPHY 2018 Bangladesh | Sri Lanka | India

நாடளாவிய ரீதியில் அமையப்பெற்றுள்ள 'ஹீரோ-அபான்ஸ்' காட்சியறைகள் சிறந்த வாடிக்கையாளர் சேவை வழங்குநராக செயற்பட்டு வருகின்றன.

சேவை உதிரிப்பாக நிலையங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர் நிலையங்கள் என இவற்றின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமானதாக காணப்படுகிறது.

இவை சிறப்பான முறையில் இயங்கிவருவதுடன் 'ஹீரோ மைஸ்ட்ரோ எட்ஜ்', 'ஹங்க்' மற்றும் 'ஐ-ஸ்மார்ட்' உள்ளிட்ட அதி நவீன உந்துருளி (Motor Cycle) மற்றும் ஸ்கூட்டர்களுக்கு விற்பனையின் பின்னரான மிகச் சிறந்த சேவையையும் வழங்கி வருகின்றன.

அதே போன்று தேவையான எந்தவொரு உதிரிப்பாகங்களையும் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கிளை நிலையங்களுடன் தொலைபேசி ஊடாக இணைப்பு பெற்று ஏற்படுகின்ற எந்தவொரு பிரச்சினைகளுக்குமான தீர்வை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த சந்தர்ப்பத்திலே உந்துருளி (Motorcycle) உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமாக திகழும் 'ஹீரோ மோட்டகோர்ப்' தற்போது இலங்கையில் இடம்பெற்றுவரும் 'ஹீரோ சுதந்திர கிண்ணம்,2018' ரி-20 முத்தரப்பு துடுப்பாட்ட தொடருக்கான முதன்மை அனுசரணை யாளராக செயற்பட்டு வருகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள 'ஹீரோ மோட்டகோர்ப்' நிறுவனம்,

"இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வருட பூர்த்தியை கொண்டாடும் வகையில், இலங்கையின் முதன்மையான விளையாட்டாக கருதப்படும் துடுப்பாட்டத்தை முன்னிலைப்படுத்தி இவ்வாண்டு சுதந்திர கிண்ண 'ரி - 20' முத்தரப்பு தொடர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. மார்ச் 6 ஆம் திகதி ஆரம்பமாகிய தொடர் நாளை 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள இறுதிஆட்டத்துடன் நிறைவுபெறும். இந்த போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாச பன்னாட்டு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. ஆசியாவில் பலம்பொருந்திய, உலக அரங்கில் முன்னணியில் திகழும் இலங்கை, இந்தியா மற்றும் பங்காள தேஷ் துடுப்பாட்ட அணிகள் இந்தத் தொடரில் மோதின.

இலங்கையின் துடுப்பாட்ட துறை வளர்ச்சிக்கு அதீத பங்களிப்பை 'ஹீரோ மோட்டகோர்ப்' நிறுவனம் வழங்கி வருகிறது. அதன் ஓர் அங்கமாக இலங்கை துடுப்பாட்ட அணி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா, மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பங்கு பற்றிய துடுப்பட்ட போட்டிகளுக்கான அனுசரணையையும் 'ஹீரோ மோட்டகோர்ப்' வழங்கியுள்ளது.

'ஹீரோ மோட்டகோர்ப்' நிறுவனத்தின் இலங்கைக்கான ஏக முகவராக, அபான்ஸ் வணிக குழுமத்தின் துணை நிறுவனமான 'அபான்ஸ் ஒடோ' நிறுவனம் திகழ்கிறது. மோட்டார் வாகனத்துறையில் விற்பனை மற்றும் விநியோக பணிகளை ஒரு தசாப்தத் காலத்துக்கு மேலாக 'அபான்ஸ் ஒடோ' மேற்கொண்டு வருகிறது." - என்றுள்ளது. (ஓ)

# மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.3 வீதமாக மதிப்பீடு

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக்காட்டு

தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கடந்த 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.3 சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நிலையான (2010) விலையில் கடந்த 2016 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 2,276,896 மில்லியன் ரூபாவாகவும், 2017 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 2,351,384 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

பொருளாதாரத்தின் முதன்மிக் கூறுகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருள்கள் மானியங்கள் கழிக்கப்பட்ட வரி நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குரிய பங்களிப்பினை 7.6 வீதம், 27.8 வீதம், 56.3 வீதம் மற்றும் 8.3 வீதம் என்ற ரீதியில் வழங்கியுள்ளன.

2017 ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டு காலப் பகுதியில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 4.3 வீதம், 1.9 வீதமாகக் காணப்படுகின்றன. மொத்த விவசாய நடவடிக்கைகளை நோக்குமிடத்து, மறை வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியுள்ளன. அது 3.3 வீதமாக காணப்படுகிறது.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு காலப்பகுதியில் விவசாயத் துறையின் உப பிரிவுகளுக்கிடையில் சேர்க்கப்பட்ட பெறுமதியானது குறிப்பாக, 'இறப்பர் வளர்ச்சி', 'தேயிலை வளர்ச்சி' என்பன முறையே 22.7 வீதம், 17.0 வீதம் ஆக காணப்படுகிறது.

அதேபோன்று 'நெல் வளர்ச்சி', 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி (தேங்காய் உள்ளடங்கலாக)', 'தானியங்களின் வளர்ச்சி', 'காய்கறிகளின் வளர்ச்சி', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி' என்பன முறையே 32.5 வீதம், 20.8 வீதம், 6.0 வீதம், 5.4 வீதம் மற்றும் 4.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

அதேவேளை 'தேயிலை வளர்ச்சி' மற்றும் 'இறப்பர் வளர்ச்சி' என்பன கடந்த மூன்றாண்டு காலப் பகுதியில் தொடர்ச்சியான மறை வளர்ச்சி வீதங்களை ஒவ்வோர் காலாண்டுப் பகுதியிலும் கொண்டிருந்தன. ஆனாலும் 2017 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டு காலப்பகுதியிலிருந்து நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன. 'விலங்கு உற்பத்தி' மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பனவும் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவிட்டுள்ளன. அவை முறையே 7.9 வீதம் மற்றும் 4.8 வீதம் என்ற வகையில் கணிசமான அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளன. (ஓ)

# மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தீர்மானம்

இவ்வாண்டு நாட்டின் மீன் உற்பத்தியை எட்டு இலட்சம் மெற்றிக்தொன் வரை அதிகரிப்பதற்குரிய தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இலக்கை அடைவது குறித்து பல்வேறுபட்ட நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர்,

"மீன்பிடியின் பின்னரான அழிவை கட்டுப்படுத்தல், குளிரூட்டல் வசதிகளை வழங்கல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடிய மீன்பிடி படகுகளை அறிமுகப்படுத்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அதேபோன்று 50 சதவீத சலுகையின் கீழ் மீனவர்களுக்கு இழுவை படகுகளை வழங்குதல், மீனவர்களை ஊக்குவித்தல் உள்ளிட்டதான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன." - என்றார். (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

16/3/2018 www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 8.47 | 6,509.46 | 6,500.99 |
| S&P SL20 | 13.58 | 3,679.93 | 3,666.35 |
| வியாபாரப்புரள்வு | | 824,607,230 | 806,182,530 |
| உள்நாடு:- கொள்வனவு | | 246,430,944 | 370,388,544 |
| விற்பனை | | 358,069,920 | 313,730,112 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 578,176,320 | 435,793,984 |
| விற்பனை | | 466,537,344 | 492,452,416 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| லயன் பிறெவெரி சிலோன் | LION.N | 535.00 | 382,275 | 204,976,265 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 126.00 | 1,399,866 | 176,357,755 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 164.80 | 774,832 | 130,813,716 |
| ஈஸ்ட் வெஸ்ட் ப்ரொபேர்ட்டிஸ் | EAST.N | 20.00 | 2,299,630 | 46,583,085 |
| டயலொக் | DIAL.N | 13.50 | 2,306,619 | 30,741,967 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 189.50 | 150,117 | 28,221,950 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 136.00 | 163,023 | 21,987,858 |
| ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் | JINS.N | 27.00 | 769,123 | 20,734,443 |
| சொ.'ப்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் | SHL.N | 24.00 | 791,871 | 19,398,966 |
| ஹய்லீஸ் | HAYL.N | 200.00 | 73,133 | 14,850,847 |

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 299 |
| பரிமாற்றத்தில் | 238 |
| விலை உழைப்பு | 11.1 |
| புத்தகப்பெறுமதி | 1.3 |
| பங்குலாப விளைவு | 3 |

Educational Work shop
ஏப்ரல் 7ம் திகதி ஆரம்பமாகிறது
call or sms 0777 822 014 / 0777 105 205

# மன ஆரோக்கியத்துக்கு உதவுமே யோகா











உடல்நலத்துக்கு எத்தனையோ உடற்பயிற்சிகள் இருக்கின்றன. ஆனால், மன ஆரோக்கியத்துக்கு யோகா போன்ற சில பயிற்சிகள் மட்டுமே உள்ளன. எதிர்மறையான எண்ணங்களால் ஏற்படும் கோபம், வெறுப்பு, கவலை, பயம், தோல்வி மனப்பான்மை போன்றவற்றிலிருந்து தப்பிக்க யோகா பயிற்சி அவசியம். தினமும் ஒரு மணி நேரம் யோகா செய்வது மனதை ஆரோக்கியமாக வைத்திருக்கச் செய்யும்.

இன்றைக்கு ஏற்படும் அனைத்து நோய்களும் உடல் மற்றும் மனம் தொடர்பானவையே. மனதை கவனித்து, தேவையான பயிற்சிகளை அளித்தால் பல நோய்கள் குணமாகிவிடும். மனதை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்வதே ஒரு கலைதான். நோய் வந்த பிறகு கஷ்டப்படுவதைவிட நோய் வரும்முன் பாதுகாத்துக்கொள்வதே நல்லது.

மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள யோகா பயிற்சிகள், பிராணாயாமம் (மூச்சுப்பயிற்சி) மற்றும் தியானப் பயிற்சிகள் உதவும். யோகாவைப் பொறுத்த வரை நோய் வந்த பிறகு குணப்படுத்துவதற்கும், வராமல் பாதுகாப்பதற்கும் ஒரே பயிற்சிகள்தாம். இதுதான் யோகாவின் மகிமை, தனித்தன்மை. தினமும் ஒரு மணி நேரம் உடல் பயிற்சிகள் செய்வது, உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

ஒவ்வோர் ஆசனப் பயிற்சியையும் கண்களை மூடி, மூச்சுப்பயிற்சியுடன் சேர்த்துப் பொறுமையாகச் செய்ய வேண்டும். சூரியநமஸ்காரம், தடாசனம், விருக்ஷாசனம், பத்மாசனம், வஜ்ராசனம், பவன்முக்தாசனம், சேதுபந்தாசனம், புஜங்காசனம், சலபாசனம், சவாசனம் போன்ற ஆசனங்களைச் செய்யலாம்.




தூக்கமின்மை பிரச்னையால் பாதிக்கப்படும் நோயாளிகள் படுத்தநிலையில் 'ஓம்' என்று உச்சரித்தால் ஆழ்ந்த தூக்கம் வரும். மனஅழுத்தம் உள்ளவர்கள் இந்தப் பயிற்சியை செய்தால், பிரச்னை குறைந்து மகிழ்ச்சியாக வாழலாம். இவற்றை தினமும் செய்யவேண்டியது அவசியம். இதனால் மனஅழுத்தம் மீண்டும் வராமலிருக்கும் இது நாம் செய்யும் வேலைகளைச் சுலபமாக்கும். மேலும், யோகா பயிற்சிகளை முறையான யோகா மருத்துவரிடம் கற்றுக்கொண்டு செய்தால் நல்ல பலனளிக்கும். மனஅழுத்தத்துக்கும் மனம் சார்ந்த (Psychosomatic) நோய்களுக்கும் யோகாவைத் தவிர வேறு மருந்து இல்லை.

# நரம்பு மண்டலத்தை வலுப்படுத்தும் வல்லாரை கீரை

வல்லமை மிக்க கீரை என்பதால் வல்லாரை என பெயர் பெற்றது. காசம், மேகம் போன்ற நோய்களைக் குணப்படுத்துவதில் வல்லாரைக் கீரை நிகரற்றது. இந்த கீரையை பால் கலந்து அரைக்க வேண்டும். வல்லாரை விழுதை மாதக் கணக்கில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நரை மறைந்து இளமைத் தோற்றம் திரும்பும்.

எந்த விதமான காய்ச்சலாக இருந்தாலும் வல்லாரை இலையால் செய்யப்பட்ட மாத்திரை குணமாக்கும். உடலில் ஏற்படும் கட்டிகள் மற்றும் புண்கள் ஆகியவற்றை வல்லாரை சரிசெய்துவிடும் ஆற்றல் வாய்ந்தது.

வல்லாரை இலையுடன் மிளகு, துளசி இலை, ஆகியவற்றை சம அளவு எடுத்து மெழுகுபதமாக அரைத்து மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு வெந்நீரில் சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும்.



யானைக்கால் நோய் உள்ளவர்கள் இந்த இலையை தொடர்ந்து காலில் வைத்து கட்டி வந்தால் யானைக் கால் நோய் எளிதில் குணமாகும்.

வல்லாரை இலையை அரைத்து உள்ளுக்குள் கொடுத்தால் விரை வீக்கம், வாயுவீக்கம், தசை சிதைவு, போன்றவை குணமாகிவிடும். இந்தக்கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்சத்து 'எ', உயிர் சத்து 'சி' மற்றும் தாதுஉப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன. இரத்தத்திற்க்கு தேவையான சத்துக்களை, சரிவிகித அளவில் கொண்டுள்ளது.

வெரிகோஸ் வெயின் என்று சொல்லக் கூடிய கால் நரம்புகளை பாதிக்கும் பிரச்னைக்கும் இந்த வல்லாரை ஒரு மிக சிறந்த நிவாரணியாக விளங்குகிறது. வல்லாரை கீரை மத்திய நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதாக விளங்குகிறது.

நரம்பு மண்டலங்கள் பலப்படுத்தப்படுவதால் நமது செயல்பாடுகள் மிகவும் சீராக அமைவதற்கு இது மிகுந்த உதவியாக அமைகிறது.

மன அழுத்தத்தை தடுத்து நிறுத்துகிறது. மேலும் வல்லாரை கீரை நோய் எதிர்ப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் உடலில் உள்ள நோய் கிருமிகளை அழிக்கும் சக்தியும் வல்லாரைக்கு உண்டு.

வல்லாரை கீரையை வலியை போக்கக் கூடிய ஒரு மேற்பூச்சு மருந்தாகவும் பயன்படுத்த முடியும்.

வல்லாரை கீரையை எடுத்துக் கொண்டு அதை நீர் விடாமல் நன்றாக பசை போல் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த பசையை வீக்கம் உள்ள இடத்தில் ஒரு பற்று போல் போட்டு வந்தால் வீக்கம் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச்சத்துக்களை, தகுந்த முறையில் பெற்றிருக்கிறது. எனவே தான், இதனை சரசுவதிக் கீரை என்றும் அழைக்கின்றனர்.

குருதிச் சுத்திகரிப்பு வேலையைச் சிறப்பாக செய்கிறது. தொண்டைக்கட்டு, காய்ச்சல், உடற்சோர்வு, பல்நோய்கள் மற்றும் படை போன்ற தோல் நோய்களை வேரறுக்கும் வல்லமைக் கொண்டது. இந்தக்கீரையை கொண்டு பல்துலக்கினால், பற்களின் மஞ்சள் தன்மை நீங்கும்.

வல்லாரை கீரையுடன் நல்ல நீர் சேர்த்து அரைத்து வல்லாரை ஜூஸாக்கி தினமும் 25 மில்லி குடித்து வர மாரடைப்பு நோய் நம்மை நெருங்காது






# சம்பியன்ஸ் லீக் தொடரில் காலிறுதிக் கழகங்கள்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் காலிறுதிக்குத் தகுதிபெற்றுள்ள அணிகள் தொடர்பான விவரங்கள் வெளிவந்துள்ளன. காலிறுதிக்குத் தகுதி பெறுவதற்கான ஆட்டங்கள் கடந்த இரண்டு வாரகாலமாக நடைபெற்று வந்த நிலையில், காலிறுதிக்குத் தகுதி பெற்ற அணிகளின் விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன. இதன்படி ரியல் மட்ரிட், பார்சி லோனா, றோமா, செவில்லா, பெயர்ன், யுவன்டஸ், லிவர்பூல், மன்செஸ்டர் சிற்றி ஆகிய அணிகளே அவ்வாறு காலிறுதிக்குத் தகுதி பெற்றன. காலிறுதியில் பார்சி லோனாவை எதிர்த்து றோமா, செவில்லாவை எதிர்த்து பெயர்ன் மூனிச், யுவன்டஸை எதிர்த்து ரியல் மட்ரிட், லிவர்பூலை எதிர்த்து மன்செஸ்டர் சிற்றி அணிகள் மோதவுள்ளன. (ம)



## தடையை எதிர்த்து ரபாடா முறையீடு

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மைதானத்தில் மோதல் போக்கைக் கடைப்பிடித்த குற்றச்சாட்டில் இரண்டு ஆட்டங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளவரான ரபாடா, தன் மீதான தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 9ஆம் திகதியில் இருந்து 12ஆம் திகதி வரையில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. அபாரமான பந்துவீச்சை வெளிப்படுத்தி ஆட்டநாயகனாகத் தெரிவானார் ரபாடா.

முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்தை வீழ்த்தியதை அடுத்து சிமித்தை தனது நெஞ்சால் மோதும் விதமாக அவர் நடந்துகொண்டார். இரண்டாவது இன்னிங்ஸில் வோர்ணரை போல்ட் முறையில் வீழ்த்தியதன் பின்னர் வோர்ணரின் முகத்துக்கு நேராகச் சென்று கடும் வார்த்தைப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார். இவை இரண்டும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் குற்றமாகும். இதுபோன்ற நடத்தைகளில் ஏற்கனவே ஈடுபட்டு எச்சரிக்கையையும் பெற்றுள்ளார் ரபாடா. இதனால் அடுத்த இரண்டு ஆட்டங்களில் ரபாடாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் தனது தவறை ஏற்றுக்கொண்ட ரபாடா, "இரண்டு ஆட்டங்களில் தடைபெறும் அளவுக்கு தனது செயற்பாடு மோசமானது அல்ல" என்று தெரிவித்திருந்தார். இதையடுத்தே தடையை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்தார்.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ரபாடாவின் மேன்முறையீடு நாளைமறுதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. (ம)

# கிண்ணங்களை வழித்தது சோமஸ்கந்தாக் கல்லூரி

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 16, 18, 20 என்று மூன்று வயதுப்பிரிவிலும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் ஆண்கள் அணி கிண்ணம் வென்றது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 25:21, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது.

18 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:20, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி பெற்றது.

20 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலய அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 25:21, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரி அணி பெற்றது.

(ம-422)



16 வயதுப் பிரிவு அணி



18 வயதுப் பிரிவு அணி



20 வயதுப் பிரிவு அணி

## கிரைன் விலகல்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து கிரைன் விலகினார்.

எதிர்வரும் 22ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகிறது. இங்கிலாந்து அணிக்கு இளம் சுழல் பந்து வீச்சாளர் கிரைன் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பார் என்று கருதப்பட்ட நிலையில் அவர் காயம் காரணமாக விலகினார். பதில் வீரராக ஜேக் லீ சேர்க்கப்பட்டுள்ளார்.

கிரைனுக்கு முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக விரைவில் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்தது. (ம)

## நரைன் மீண்டும் சிக்கலில்

மேற்கிந்தியத் தீவுகளின் சுழல்பந்து வீச்சாளரான நரைன், பந்தை முறையற்ற விதத்தில் எறிகிறார் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சுப்பர் லீக் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரிலேயே இவ்வாறான சந்தேகம் நரைனுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ளது. இதனால் நரைன் தனது பந்துவீச்சு முறைமை தொடர்பில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையிடம் நிரூபிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. விதிமுறைகளுக்கு முரணாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவருக்கு ஒரு வருடம் தடை விதிக்கப்படலாம். (ம)



## கிளி. ம.ம.வியின் வீரர் 247 ஓட்டங்கள் குவிப்பு

அந்த அணி இறுதியில்





யாழ்ப்பாணம், மார்ச் 17
கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அந்த அணியின் வீரர் அருள்வெட்டி இரட்டைச் சதம் விளாசினார். கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அருள் வெட்டி 247 ஓட்டங்களையும், சயந்தன் 104 ஓட்டங்களை யும் பெற்றனர்.
பந்துவீச்சில் முதல்வன் 3 இலக்குகளையும், டினோசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 21.3 பந்துப் பரிமாற்றங் களில் 65 ஓட்டங்களுக்கு சகல இலக்கு களையும் இழந்தது. இதையடுத்து 363 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி.
பந்துவீச்சில் காண்டீபன் 5 இலக்குகளையும், பிரதாப் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

# கிளி. மத்தி. - மகா வித்தி. இறுதியில் நாளை மோதல்





யாழ்ப்பாணம், மார்ச் 17
கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில், கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியும் இறுதியாட்டத்தில் நாளை மோதவுள்ளன.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நாளை காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் கி.விக்கினராஜா தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் காப்பாளரும் கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளருமான தி.ஜோன் குயின்ரஸ், மதிப்புறு விருந் தினர்களாக பிரித்தானிய தமிழ் துடுப்பாட்ட லீக்கின் காப்பாளர் தெய்வேந்திரம், கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன், வட மாகாண துடுப்பாட்டப் பயிற்றுனர் அமில பின்னத்துவ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

## அலையோசை அணி இறுதிக்குச் சென்றது



யாழ்ப்பாணம், மார்ச் 17
கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அளம்பில் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது அலையோசை அணி. (ம-23)

## சித்திவிநாயகர் இந்து – வவு. இந்து. பெண்கள் அணிகளுக்கான கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மார்ச் 17
மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, வவுனியா இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பெண்கள் அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

## பாடும்மீன் சம்பியன்

யாழ்ப்பாண பிரதேச செயலக விளையாட்டு விழாவில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் குருநகர் பாடும்மீன் அணி கிண்ணம் வென்றது.
பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இறுதிப்போட்டிகள் நடைபெற்றன. 66 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்தது பாடும்மீன் அணி. வசந்தபுரம் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 61 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-422)



## இன்றைய மோதல்கள்

**யாழ். மாவட்ட துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.க. கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# இறுதிக்கு பங்களாதேஷ் தகுதி

## சுதந்திரக் கிண்ணத் தொடரில் இருந்து இலங்கை வெளியேற்றப்பட்ட பரிதாபம்

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தரப்பு ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் 2 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பங்களாதேஷ். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக குணதிலக மற்றும் மென்டிஸ். குணதிலகவை 4 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் அணித்தலைவர் சகிப் அல் ஹசன். குசல் மென்டிஸை 11 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திருப்பினார் ரகுமான். குசல் ஜெனித் பெரேரா ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் இலக்குகள் சட்டெனச் சரிந்தன. தரங்க 5, சானக ஓட்டமெதையும் பெறாத நிலை, மென்டிஸ் 3 என்று ஒருவர் பின்னர் ஒருவராக ஓய்வறைக்குச் சென்றனர். 41 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது இலங்கை அணி. ஒரு முனையில் போராடிக் கொண்டிருந்த குசல் ஜெனித் பெரேராவுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் திசர பெரேரா. 32 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் குசல் ஜெனித் பெரேரா. 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் திசர பெரேரா. இணைப்பாட்டமாக 97 ஓட்டங்கள் பெறப்பட்ட பின்னர் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குசல். திசர 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் 7 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை.

பந்துவீச்சில் ரகுமான் 2 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், ரூபல் கொசைன், மிராஸ், சர்க்கர் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரரான டாஸ் ஓட்டமெதையும் பெறாமல் ஏமாற்றினார். டாஸை வீழ்த்திய தனஞ்சய சபிர் ரகுமானையும் வீழ்த்தினார். இக்பால், ரகிம் இருவரும் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் இக்பால். இதற்காக அவர் 42 பந்துகளை எடுத்துக் கொண்டார். குறைந்தது 10 பந்துகளை குறைவாக எடுத்துக்கொண்டு இந்த ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் அவர். ஆக, இக்பாலின் அரைச்சதம் பங்களாதேஷுக்குப் பின்னடைவே. ரகிம், தான் பெற்ற 28 ஓட்டங்களுக்காக 25 பந்துகளை எதிர்கொண்டார். எனினும் மகமதுல்லா ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 18 பந்துகளில் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காது குவிக்க ஓர் பந்து மீதமிருக்க வெற்றிபெற்றது பங்களாதேஷ்.



இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.

(ம)

**அறை வாடகைக்குண்டு**
பல்கலைக்கழக மாணவிகள், பணிபுரியும் பெண்களுக்கு சகல வசதிகளுடன் கூடிய அறை பலாலி வீதி, திருநெல்வேலியில் வாடகைக்குண்டு.
076 726 6899 (CS/14792) (11.17)

**வீடு விற்பனைக்கு**
வடமராட்சி மந்திகை குரும்பகட்டி வயிரவர் கோயிலுக்கு அண்மையாக 3½ பரப்புக்காணியில் அமைந்த 5 அறை வீடு விற்பனைக்குண்டு.
077 843 5453 (ACO/198) (11.17)

**வீடு விற்பனைக்கு**
கிளிநொச்சி, வட்டக்கச்சி கட்சன் வீதிக்கு அண்மையில் 5½ ஏக்கர் காணியில் வீடு, தென்னை, வயல் என்பவை விற்பனைக்குண்டு.
077 788 7360 (ACO/199) (11.17)

**வேலை வாய்ப்பு**
யாழ்.நகரில் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனத்துக்கு அனுபவம் மிக்க **கணினி தட்டெழுத்தாளர் (பெண்)** தேவை.
**ஆரம்பச் சம்பளம் - 15000/-**
077 248 7774 (CS/14825) (11.17)

## வென்றது பரிஸ் ஜேர்மன்

பிரெஞ்சுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து அங்கேர்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில், பரிஸ் செயின்ட் ஜேர்மனின் ஜூலியான் ட்ரெக்ஸ்லர் வழங்கிய பந்தை கோலாக்கிய கிலியான் மப்பே தனது அணிக்கு முன்னிலையை வழங்கினார். தொடர்ந்து, ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் டி மரியாவிடமிருந்து பெற்ற பந்தை கிலியான் மப்பே கோலாக்க பரிஸ் ஸா ஜெர்மனின் முன்னிலை அதிகரித்தது. முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)



**மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி**
இடம் - மாதகல் வடக்கு, மாதகல்
காலம் - 18.03.2018
நேரம் - பிற்பகல் 1.30
மாதகல் விவசாயிகள்.



**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2018 **தொழில் நுட்பப் பிரிவு**
விசேட வினாத்தாள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன
- பொறியியல் தொழில் நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
- தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- ICT
- விவசாய விஞ்ஞானம்
- புவியியல்
- கணிதம் (7)
- தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

புதிய மாணவர்களை...
அலகு ரீதியாக பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள்
A/L அனைத்துப் பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புக்கு 077 248 7774

**வேலை வாய்ப்பு**
எமது **Sun Travels** நிலையத்தில் பணிபுரிய பணியாளர் தேவை. தகுதி உடையோர் மற்றும் பழகவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும் அடிப்படை சம்பளம் **13 500/=**
மேலும் Denmark, Norway, France, UK, Finland, Sweden, Italy, போன்ற அனைத்து நாடுகளுக்குமான Tourist Visit Visa online மூலம் செய்து Appointment செய்து கொடுக்கப்படும். மேலும் இந்தியாவிற்கான **Tourist Visa** செய்து கொடுக்கப்படும். அனைத்து நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 206, கைலாசப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
தொடர்பு - 077 225 9030, 021 221 7247

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths
ஆரம்பம் :- 24.03.2018
கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes.
ஆரம்பம் :- 24.03.2018
**Certificate Course in English**
16 Batches have successfully Completed the course. Started 24.03.2018
Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

## மூன்றாவது டெஸ்ட்டில் ஸ்ரெய்ன் களமிறங்கார்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில், தான் களமிறங்க வாய்ப்பில்லை என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன்.



தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி அங்கு நான்கு ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் முதலிரு ஆட்டங்களும் முடிவடைந்த நிலையில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின்போது மைதானத்தில் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ரபாடா இல்லாததை ஈடுசெய்ய ஸ்ரெய்ன் அணிக்குத் திரும்புவார் என்று கருதப்பட்ட நிலையில் அவர் அதை மறுத்துள்ளார்.

'எனது காலில் இன்னும் கொஞ்சம் வலியுள்ளது. எனவே ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டில் களமிறங்க வாய்ப்பில்லை' என்று ஸ்ரெய்ன் தெரிவித்தார். முழங்கை மற்றும் தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்துள்ள ஸ்ரெய்ன் சுமார் ஆறு மாதங்களாக ஓய்விலிருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

**தரமான வீடு / கட்டட நிர்மாண வேலைகள்**
100 % தரத்தை உறுதிப்படுத்தக்கூடிய அனுபவம் மிக்க தொழில்நுட்பவியலாளர்களின் கண்காணிப்பின் கீழ் உங்கள் வீடு மற்றும் கட்டட வேலைகளை மேற்கொள்ள எம்மை தொடர்பு கொள்ளுங்கள். வரைபடம், மதிப்பீடு, ஆலோசனை இலவசம்.
தொடர்பு - 077 148 2908
Evergreen Engineering & Consulting

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.